Vol. XXXII 1957—1958

# செந்தமிழ்ச்செல்வி

DR. T. P. M. LIBRARY, MADURAI KAMARAJ UNIVERSITY

திங்கள் வெளியீடு

முப்பத்திரண்டாம் சிலம்பு

௧௯௮௮—௧௯௮௯

The South India Saiva Siddhanta Works

## ‘செந்தமிழ்ச் செல்வி’

### இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்

### EDITORIAL BOARD MEMBERS

௧. திரு. செந்தமிழ்க் காவலர், டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், எம். ஏ., பிஎச். டி.

௨. ,, சித்தாந்த கலாநிதி, வித்துவான், ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

௩. ,, பேராசிரியர், மு. இராசாக்கண்ணனார் அவர்கள், பி. ஓ. எல். (ஆனர்சு), எம். இ. எஸ்., இந்திய மொழித்துறைத் தலைவர், மலேயாப் பல்கலைக் கழகம், சிங்கப்பூர்.

௪. ,, செந்தமிழ்க்கலைமணி, வித்துவான், பண்டித. கா. பொ. இரத்தினம் அவர்கள், பி. ஏ., (ஆனர்சு), எம். ஏ., பி. ஓ. எல். (சென்னை) அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

௫. ,, கு. பரமசிவம் அவர்கள், பி. ஏ. (ஆனர்சு), தமிழ்விரிவுரையாளர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

௬. ,, க. கோவிந்தராசன், பி. ஏ. (ஆனர்சு), பி. டி. தமிழ்ப் பேராசிரியர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை.

189616

௭. ,, சித்தாந்த பண்டிதர், ப. இராமநாதபிள்ளை அவர்கள், கழகப்புலமையாளர்.

4928

௮. ,, பண்டித வித்துவான், தி. சங்குப்புலவர் அவர்கள், கழகப்புலமையாளர்.

# உள்ளுறை

பக்கம்


அந்தாதி—பண்டித. திரு. இராமசுப்பிரமணிய நாவலர் ௫௨௧
அப்பர் அருள்நாள்—ஆசிரியர் ௪௦௯
அருளோன் அமைதி—நாஞ்சில் திரு. கா. கணபதி ௫௨௮
அவ்வையார்—நெல்லை. திரு. சு. சுப்பிரமணியன் ௩௦௮
அறம்—திரு. நாகை. வேலன் ௩௦௭
அனைத்திந்திய மொழி மாநாட்டில் ஆச்சாரியார் கழற்றுரை ௩௧௫
ஆங்கிலமே பொதுமொழியாதற் குரித்து
—மறைத்திரு. மறைமலையடிகளார் ௨௭௩
ஆட்சியாளர் திரு. வ. சு. அவர்களின் மணிவிழா வாழ்த்து
—திரு. இளவழகன் ௧௩௭
ஆள் மயக்கம்—கு. பரமசிவன், எம். ஏ. ௫௯௦
இந்திய மொழிகள் அனைத்தினும் நனிமிகத்
தொன்மையானது நற்றமிழே ௫௪௯
இரண்டாவது செயற்கைத் திங்கள் ௧௩௫
இராகு காலம் காண்டல் ௧௨௫
இலக்கியம்—நாகை. வேலன் ௩௯௮
இலங்கையில் நிகழும் இனமொழி வெறிக்கொடுமை ௪௬௪
இன்பத் தமிழ்!—நாஞ்சில், திரு. கா. கணபதி ௩௨௯
இன்பத் திளைப்பு! ,, ௩௦௨
ஊமன்—திரு. பி. எல். சாமி, பி. எஸ்ஸி. ௫௩
ஊழ் ௪௪௫
எழுகுளிறு மிதித்த ஒருபழம்
—திருவையாறு, திரு. இரா. இராமானுசம் ௪௮௨
ஐந்தெழுத்தாலாம் அனைத்தும்
—நாஞ்சில், திரு. கா. கணபதி ௧௩௧
ஐவேல் அசதிக்கோவை
—பண்டித. திரு. அ. கந்தசாமிபிள்ளை ௨௨௮
ஒண்தொடியின் நுண்பொருள்
—திருவையாறு, திரு. இரா. இராமானுசம் ௫
ஒன்றே காண்!—நாஞ்சில், திரு. கா. கணபதி
கடவுட் பெற்றி பிழம்பிலுமுண்டு—இனியன்
கபாலீச்சுரர் கழலிணைசேர் ம. பாலசுப்பிரமணிய முதலியா
—ஆசிரியர்
கலைவாணர் மறைவு—ஆசிரியர்
கவிஞன் பண்பு—குடந்தை, சு. கண்ணன், பி.
கழக ஆட்சியாளர் திரு. வ. சு. அவர்களின்
விழா வாழ்த்துக்கள்

கன்றும் அரசும்—சேலங்கிழார் ௩௭௪
காதல் மாட்சியும் அச்சொல் ஆட்சியும்
—பண்டிதவித்துவான், திரு. த. வடிவேலன் ௫௪௩, ௫௯௫
காவியச் செல்வி—தமிழன்பன் ௧௧௨
கிடத்தலின் கிடக்கை
—திருவையாறு, திரு. இரா. இராமானுசம் ௨00
குளிரு? களிரு?—மாயூரம், சாமி. செல்வவிநாயகன் ௫௮௩
குறிஞ்சித்திணை—திரு. பி. எல். சாமி, பி. எஸ்ஸி. ௫௫௫
கோடிப்புடைவை கட்டல் ௧௬௨
கையச்சுப் பொறியில் தமிழ் எண்களுக்கும்
இடமிருத்தல் வேண்டும் ௨௭௭
சாகுந்தலம் பற்றிய கட்டுரைக்குப் பரிசு ௭௨
சிந்தனைக்குச் சில—நாகை. வேலன் ௧௧௧, ௨0௭, ௨௫௬
சிலப்பதிகாரம் (கானல்வரி)—பண்டிதவித்துவான்,
திரு. தி. சங்குப்புலவர் ௨௭௮, ௩௬௫, ௪௨௫
சிவபுராணத்தின் செம்மைப்பாடு—சேலங்கிழான் ௪0௧
சிவ வாழ்வு—நாஞ்சில், திரு. கா. கணபதி ௯௬
சீக்கியம்—திரு. பி. பச்சையப்பன் ௨௯௭
சுதந்திர யாத்திரை ௪௮
செந்தமிழ் இலக்கணம் சிவனெறி இலக்கணம்—தொண்டன் ௬௧
செந்தமிழ்ச் செல்வியின் தொண்டு—ஆசிரியர் ௫௫௩
செந்நாப் புலவர் மறைவு—ஆசிரியர் ௧௨௧
செயற்கைத் திங்கள் ௬௮
செய்திகளும் குறிப்புக்களும் ௬௨, ௧௧௭, ௧௬௭, ௨௧௩,
௨௫௯, ௩0௯, ௩௫௬, ௪0௫, ௪௫௪, ௫0௧, ௫௫0
செய்யுளைச் சிதைக்கலாமா?—ஆசிரியர் ௯௫
செல்வியின் புத்தாண்டு—ஆசிரியர் ௧
சேக்கிழார் புராணநடை—திரு. ச. கணபதி முதலியார்,
எம். ஏ., எல். டி., நெல்லை ௯௭, ௧௪௩, ௧௮௫, ௨௩௩,
௨௮௧, ௩௨௩
தர்கவாழ்வு—நாஞ்சில், திரு. கா. கணபதி ௪௩௪
...மிழின் பாற்பொங்கல்
...திருவையாறு, திரு. இரா. இராமாநுசம் ௨௪௭
...ழமையும் புதுமையும்
...த்திரு. மறைமலையடிகளார் ௧௮௨
...ழ்த்து
...ன், திரு. பெ. கோவிந்தன் ௧௮௮
...ாடு ௨௨௪
...ட்டில் மைய அமைச்சர்
...ன் கபீர் பேச்சு ௪௯௮

தமிழ் எழுத்துக்கள்
—வித்துவான், திரு. கோ. வைத்தியலிங்கன் ௪௬௯

தமிழ்ச் செல்வி தாலாட்டு
—நல்லைக்கவி, திரு. அ. இளங்கோவன் ௩௫௫

தமிழ்த்தாயின் தவப்புதல்வர்
பண்டிதர், கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல். ௧௯௭

தமிழ்த்தாய் முடிசூட்டுநாள் வாழ்த்து
—வித்துவான், திரு. பெ. கோவிந்தன் ௨௯௫

தமிழ்விடு தூது முகவுரை
—மறைத்திரு மறைமலையடிகளார் ௨௯௩, ௩௨0, ௩௯௯

தளவாய் வழித்தலைவர் மேடை தளவாய்,
தி. குமாரசாமி முதலியார் மறைவு ௨௨௫

தாய்மொழியே நாட்டின் தனியுயிர்—ஆசிரியர் ௨௧௭

தி. ஆ. 2000—பண்டிதர்,
திரு கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல். ௨௮௮

திருக்கார்த்திகை தீபம்—திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை ௨௭௫

திருக்குறள்—நாஞ்சில், திரு. கா. கணபதி ௧௮௪

திருமுறை மாநாடு—ஆசிரியர் ௪௫௭

திரு. வ. சுப்பையாபிள்ளையவர்களின் வரலாற்றுச் சுருக்கம்
—கழகப்புலவர், ப. இராமநாதபிள்ளை ௩

திருவருள்—நாஞ்சில், திரு. கா. கணபதி ௪௮௭

திருவாதவூரடிகள் திருவுள்ளம்—வித்துவான்,
வீ. குமாரசாமி ஐயர் தமிழாசிரியர், மேலூர் ௫௬௯

திலகவதி அம்மையாரைப் பற்றிய திருக்குறிப்பு
—ராவ்பகதூர், தணிகைமணி
திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ. ௫00

தீவினை—வித்துவான்,
திரு. மாவை. துரை பழநிமகாதேவன் ௫௧௨

தென்னவன் தீதிலன்
—திரு. மது. ச. விமலாநந்தம், பி. ஏ. ௪௭௩

தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி
தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வு ௪௯0

தேவாரத்தில் தமிழ் விருத்தம்
—நெல்லை. க. சுப்பிரமணியன் ௪௯௩

நடிப்பவர்க்கே நல்லகாலம்
—சிவநெறிப் புலவர், ஆ. சிவலிங்கனர், மயில... [illegible]

நட்ப—வித்...

நற்றிணையிலே நம் வள்ளுவர்
—மது. ச. விமலானந்தம், பி. ஏ. ௩௯௩
நன்றி—கழகப் புலவர், ப. இராமநாத பிள்ளை ௮0
நெடுநல்வாடை, திணையாராய்ச்சி மறுப்புக்கு விடை
—வித்துவான், செ. வேங்கடராமச் செட்டியார் ௮௧, ௧௫௩
பட்டினப்பாலை—திரு. அரங்க. நாகலிங்கம் ௪௬௯
பதினைந்தாவது உலகச் சைவ உணவாளர் மாநாடு—ஆசிரியர் ௧௬௯
பத்துக் கால்—சேலங்கிழார் ௯௩
பல்லாவரம் மறைமலையடிகளார் கடிதங்கள்
௩௯, ௧௧௫, ௧௬௫, ௨௧௧, ௨௫௭, ௩0௫
பனியும் துனியும்—வித்துவான், திரு. ச. சுந்தரேசன் ௨0௮
பாட நூல்கள் வெளியீடு—ஆசிரியர் ௧௮0
பாட்டைச் சிதைப்பது பண்பாகுமா?
—பண்டித, வித்துவான், திரு. தி. சங்குப் புலவர் ௧௩௯
பாம்புச் செடி—திரு. பி. எல். சாமி, பி. எஸ்ஸி. ௪௪௧
பாரி முல்லைக்குத் தேரீந்தது
—வித்துவான், திரு. பெ. கோவிந்தன் ௩௨௯
பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நினைவு மலர் வெளியீட்டு விழா ௧௨௬
பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நினைவுமலர் வெளியீட்டு விழா
வாழ்த்துக்கள் ௧௩௨
பேராட்சிமொழி எல்லார்க்கும் பொதுமொழியாதலே நன்று ௩௧௩
பேராசிரியர், திரு. வளவன் பாண்டியனூர் மறைவு ௫0௪
பொங்குக செந்தமிழ்ப்பால் ௨௨௧
பொருளிலக்கணம் ஒரு சமூக அறிவியல்—வித்துவான்,
சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, எம். ஏ., மயிலம் ௨௪௯
பொற்கொல்லன்
—வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனூர், மயிலம் ௪௩௫
போதி மாதவர் இருவர்—திரு நா. இரா. ஹரன் ௪௩0
மதிப்புரை ௬௪, ௧௨0, ௨௧௫, ௨௬௪, ௩௧௧, ௩௫௮, ௪0௭,
௪௫௬, ௫0௩, ௫௫௨
மதுராபதி—வித்துவான், ஆ. சிவலிங்கனூர், மயிலம் ௫௮௫
மதுரைத் தமிழ்ச் சங்க 56-வது ஆண்டு நிறைவு விழா ௨௪௧
மருத்துவ மாமணி டாக்டர். எம். ஆர். குருசாமி
முதலியாரவர்களின் மறைவு ௫0௫
மறைமலையடிகளார் ஏழாம் ஆண்டு நினைவு விழா நிகழ்ச்சிகள் ௬௯
...லையடிகளார் நினைவு விழா ௧௯௩
... ௨0௯,

மாங்காட்டு மறையவன்—திரு ஆ. சிவலிங்கனார், மயிலம்
முதலாவது சிற்றிலக்கிய மாநாடு—ஆசிரியர்
முதலாவது சிற்றிலக்கிய மாநாட்டு நிகழ்ச்சிகள்
முதல் சிற்றிலக்கிய மாநாட்டு வாழ்த்துக்கள்
முதன் மொழியும் அதன் முதல் எழுத்தும்
—வித்துவான், K. வீரராகவன், பேரையூர்
முத்தமிழ்க் கலைஞர்களுக்குப் பாராட்டு—ஆசிரியர்
முல்லைப்பண் ஆராய்ச்சி—இராவ்சாகேப்.
கு. கோதண்டபாணி பிள்ளை ௩௪௫, ௩
மூவர்—தமிழன்பன் ௨
மொழியியலும் செந்தமிழும்
—மைக்கல் பிரான்சிசு, எம். ஏ., பி. எஸ்ஸி. ௩௮
லெனின் கிராடு பல்கலைக் கழகத்தில் தமிழ்!
—சோவியத் செய்தி ௪௯
வஞ்சிக் காண்டம்
—திரு. வை. தட்சிணாமூர்த்தி, பி. ஏ. (ஆனர்சு) ௨௦௫
வல்லப் பல்கலைக் கழகம் ௫௯
வழிபாடு—தொண்டன் ௫௨௦
வள்ளல் திரு. ச. வெள்ளைச்சாமி நாடார் மணிவிழா ௨
வள்ளுவர் காட்டிய அருள்நெறி—திருவாட்டி,
மேரி மாசிலாமணி அம்மையார், எம். ஏ., எல்.டி.
௪௧௭, ௪௮௩
வள்ளுவர் காட்டிய அன்புநெறி—திருவாட்டி,
மேரி மாசிலாமணி அம்மையார், எம். ஏ., எல். டி.
௪௧, ௧௦௫
வறுமை வளர்த்த வண்டமிழ்—பேராசிரியர்,
திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., பி. எல். ௫௧௩
வாக்கின் வழிப்படுவ
—திருவையாறு, திரு. இரா. இராமாநுசம் ௫௯
வானவர்—வித்துவான், சு. குமாரசுவாமி ஆச்சாரி, எம். ஏ.,
விரிவுரையாளர், தமிழ்க் கல்லூரி, மயிலம் ௪௦௨
விருந்துண்ணல் ௧௯௨
வேலனை வேண்டல் ௫௮௨
வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள்
—திரு. கா. பொ. இரத்தினம் ௪௪
tement about ownership and other particulars
about the Journal—Senthamil Selvi

# படங்கள்

இசைத் தமிழ்க் கலைஞர் திருவாட்டி கே. பி. சுந்தராம்பாள்
கட்கும் நாடகத் தமிழ்க் கலைஞர் திரு. ப. சம்பந்த முதலி
வர்கட்கும் சென்னை அரசினர் பரிசு வழங்கிச் சிறப்புச்
தல் ருO

இயற்றமிழ்க் கலைஞர் டாக்டர் மு. வரதராசனர் அவர்
ச் சென்னை ஆளுநர் திரு. ஜான் பொற்பதக்கம் பரிசளித்தல் ருO

லகச் சைவ உணவாளர் மாநாடு--பம்பாய் மாநில ஆளுநர்
ஸ்ரீபிரகாசா துவக்கவுரை ஆற்றுதல் கசுகூ

கலைவாணர், என். எஸ். கிருட்டிணன் ருக

கழக ஆட்சியாளர் திருவாளர், வ. சுப்பையா பிள்ளை க

சொல்லின் செல்வர், டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளையவர்
சொற்பொழிவாற்றுதல் சுரு

டாக்டர், எம். ஆர். குருசாமி முதலியார் ருOரு

15-வது தமிழிசை விழா - 'இசைப் பேரறிஞர்' பட்டம்
கலைஞர்கள் தண்டபாணி தேசிகர், நாமக்கல் கவிஞர்,
ம்பமூர்த்தி உஉசா

திருநாவுக்கரசு சுவாமிகள் சாOக

திரு. வ. சுப்பையா பிள்ளையும் அவர்தம் மனைவியார்
ருமதி. மங்கையர்க்கரசியாரும் கஎ

திறப்புகழ் வெளியீட்டு விழாவில் குன்றக்குடி யடிகளார்
றைமலையடிகளார் படத்தைத் திறந்து வைத்தல் கசுகூ

நாலவர், இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழி
ற்றுதல் சுரு

பேராசிரியர், ஆ. கார்மேகக் கோனர் கஉக

போராசிரியர் சுந்தரம் பிள்ளை நினைவுமலர் வெளியீட்டு
ழா—சொல்லின் செல்வர் டாக்டர், ரா. பி. சேதுப்பிள்ளை
ாற்பொழிவாற்றுதல் கஉசு

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நினைவுமலர் வெளியீட்டு
—டாக்டர், மு. வரதராசனர் சொற்பொழிவாற்றுதல் கஉஎ

...ரம் பிள்ளை நினைவுமலர் வெளியீட்டு
...ண்முகம் இசை வழங்குதல்

பேராசிரியர், தெ. பொ மீனாட்சிசுந்தரனாரவர்கள் சொற்பொழிவாற்றுதல் ௯௫

மரக்கறிப் பொருட்காட்சியை மைசூர் ஆளுநர், செயசாமராச உடையார் திறந்து வைத்தல் ௧௬௯

மறைமலையடிகளாரின் திருவுருவப் படத்தை திரு. எம். கே. சண்முகம் அவர்கள் திறந்து வைத்தல் ௯௫

மறைமலையடிகளார் நினைவு விழாவில் டாக்டர், மா. இராசமாணிக்கனார் சொற்பொழிவாற்றுதல் ௧௬௯

முதலாவது சிற்றிலக்கிய மாநாடு—உயர்நீதி மன்ற நடுவர் உயர்திரு. சு. கணபதியா பிள்ளை அவர்கள் சொற்பொழிவு நூலைப் பாராட்டி வெளியிடுதல் ௨௬௫

முதலாவது சிற்றிலக்கிய மாநாடு—டாக்டர், இராசா சர். மு. அண்ணாமலை செட்டியார் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுதல் ௨௬௫

முதலாவது சிற்றிலக்கிய மாநாடு—டாக்டர், மு. வரதராசனார், மறைமலையடிகளார் படத்தைத் திறந்து வைத்துப் பேசுதல் ௩௧௩

முதலாவது சிற்றிலக்கிய மாநாடு—திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல் ௨௬௫

முதலாவது சிற்றிலக்கிய மாநாடு—பேராசிரியர், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் தலைமையுரை நிகழ்த்துதல் ௩௧௩

முதலாவது சிற்றிலக்கிய மாநாடு—மறைமலையடிகள், கா. சு. பிள்ளை படங்களைத் திறந்து வைத்த டாக்டர், மு. வரதராசனார் அவர்களும், ஆசிரியர் இளவழகனார் அவர்களும், மாநாட்டுத் தலைவர் திரு. இராமநாதன் செட்டியாரவர்களும் ௨௬௫

மேட்டை தளவாய், திரு. தி. குமாரசாமி முதலியார் ௨௨௫



கழக ஆட்சியாளர்

திருவாளர், வ. சுப்பையா பிள்ளை




| சிலம்பு ௩௨ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௮, ஆவணி<br>செப்டம்பர், 1957 | பரல் ௧ |
|---|---|---|

DR. T. P. M. LIBRARY
MADURAI KAMARAJ UNIVERSITY

# செல்வியின் புத்தாண்டு

நம் அருமைச் 'செந்தமிழ்ச் செல்வி' தன் முப்பத்தோராண்டு நிறைவுற்று முப்பத்திரண்டாம் அகவையினை இறையருளால் இந்நாள் எய்தியுள்ளாள். அவள் சென்ற ஆண்டில் அணிபெற ஆற்றிய அருந்தமிழ்த் தொண்டுகள் அளப்பில. அவற்றைப் புலவர் பெருமக்களும், ஆன்றோரும், அன்பரும் நனிமிகப் பாராட்டினர். அப் பாராட்டினைப் பெறுமாறு செய்யும் முதல்வர்கள் ஆராய்ச்சி மிக்க கட்டுரைகள் வழங்கிய அறிவுசால் செந்நாப் புலவர்களும், அகமுவந்து செல்வியை வரவேற்றுக் கற்றுக் களிகூரும் உறுப்பினராம் செந்தமிழ் அன்புசார் பெருமக்களுமேயாவர்.

செல்வியின் புத்தாண்டுத் தொடக்க நாளாகிய இந்நாள் சொலற்கரும் பொன்னாளாகத் துலங்குகின்றது. கழக ஆட்சியினர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களின் மணிவிழாக் குறிப்பாம் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பும் வருகின்றது; ஆசிரியர் மறைமலையடிகளாரின் ஏழாம் ஆண்டு நினைவு விழாவும் கொண்டாடப் பெறுகின்றது.

ஒரு மொழியும் நாடும் சிறக்கவேண்டுமானால் ஆற்றல்சால் காவல் சிறந்திருத்தல் வேண்டும். காவல் எனினும், மறம் எனினும், புறத்திணை எனினும், வீரம் எனினும் ஒன்றே. அக் காவல் சிறக்க 'ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்' பலர் வாழ்தல் வேண்டும். சான்றோர் வாழச் சிவபெருமான் திருக்கோயில்களும், ஒரு முழுமுதற் றெய்வவுண்மையை மாறாது

கைக்கொண்டு ஒழுகித் தொழுது உலகிடைப் பரப்பிவரும் சிவனடியார்களும் சிறந்திருத்தல் வேண்டும். தெய்வநாட்டம் இல்லாத எதுவும் சீர்சிறப்பினை எய்தி நிலைபெற்று வாழாது.

அம் முறையில் நம் தமிழ் மொழிக்கும், தமிழகத்துக்கும், சிவநெறிக்கும் வழிவழித் தாங்கும் வன்மைசார் செந்நாப் புலவர்கள் பலர் சிறந்திருந்தனர்; இருக்கின்றனர்; இருப்பர். அம் முறையில் நம்மிடையே அஞ்சா ஆண்மையராய், மும்மொழி வல்லாராய், எழுத்திலும் பேச்சிலும் விழுத்தினை முதல்வராய் அம் மூன்றினையும் எஞ்சாது நிலைநிறுத்திய தனிப்பெருந்தகையார் ஆசிரியர் மறைமலையடிகளாராவர். அவர் அருளால் தோன்றிலரேல் நாமெல்லாம் அயன்மொழி மயக்கில் மருண்டு தெருண்டு வரையாத் திகைப்பினராய் இருந்திருப்பது உண்மையாம்.

“**மறைமலையடிகளாரின் மணிமொழிகளும்**” அவர்தம் அணி பெறு கை எழுத்துக்கள் எத்துணைச் சிறந்தனவோ அத்துணைச் சிறப்புவாய்ந்த பொன்னும் மணியும் நன்கு குயிற்றி நலஞ் சிறப்பக் கைபுனைவல்லான் பன்னாள் கூடிச் செய்தமைத்த நற்பணிபோன்று ஆருயிரின் சீரிய உணர்வினுக்கு வேண்டும் உறுதிக் கட்டுரைகள் இடையிடையே பொதுள நடைநவில் பொலிவினவாய் நண்பர்கள், மாணுக்கர்கள், அன்பர்கள் முதலாயினுர்க்கு வரைந்துள்ள அருமையினும் அருமைசால் உரிமைக் “**கடிதங்கள்**” சிலவும் இம் முதலிதழில் வருகின்றன; இவைபோன்றமை தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும்.

வழக்கம்போல் உயர்ந்த புலவர் பெருமக்களால் நன்காய்ந் தெழுதப்பட்ட கட்டுரைகளும் பிறவும் வருகின்றன. வழக்கம் போன்று நம் ‘செல்வியினை’ ஆதரித்துப் போற்றுமாறு செந்தமிழன்பர்களையும், உறுப்பினர்களையும் அன்பாக வேண்டு கின்றும். புலவர்பெருமக்களையும் வழக்கம்போல் கட்டுரைகள் ஈந்துதவுமாறு வேண்டுகின்றும்.

செல்வியினைக் கட்டுரை தந்துதவுவதாலும், உறுப்பின ராகச் சேர்ந்து ஊக்கி வளர்ப்பதாலும் ஓம்பி வந்த செந்தமி ழன்பர்கள் அனைவர்க்கும் வணக்கமும் நன்றியும் உரியவாகுக. வாழ்க செல்வி; வளர்க தமிழ்மொழி; வாழ்க சிவநெறி; வாழ்க உலகம்.

ஓம்

சைவமுந்தமிழுந் தழைக்கத் தொண்டுசெய்யும்

## திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களின்

# வரலாற்றுச் சுருக்கம்

*பிறப்பு*

*தென்பாண்டி நாட்டில் சீர்சிறப்பு வாய்ந்தது தென்றல் வந்துலவும் திருநெல்வேலியாகும். பண்டைத் தண்டமிழ் இன்றும் கண்டனைய மக்கள் பேச்சு வழக்காற்றில் பெரும்பாலும் தூய்மை கெடாது நின்று நிலவுவது நெல்லை மாவட்டமே யாகும். அந் நெல்லையினை அடுத்து நாடுகாக்கும் நல்லரணும் கோட்டையொடு பொலியும் நாட்டமிகு திருவூர் பாளையங் கோட்டை என்ப. அவ்வூரின்கண் இயல்பாகவே கொலையும் புலையும் அறவே நீத்து வழிவழியாய் என்றும் உயிருக்கு உறவாக நின்றருளும் விழுப்பொருளாம் முழுமுதற் சிவபெருமானைச் செந்தமிழ்த் திருமுறைவழி முந்துறத் தொழும் மூத்தகுடி விழுத்திணை வேளாண் நற்குடியாகும். இக் குடியினைச் சைவ வேளாளர் குடியெனவும் சாற்றுவர். அத்தகைய பாளையங் கோட்டைச் சைவ வேளாளர் குலத்தில் 22—9—1897-இல் நம் அருமைச் சுப்பையா பிள்ளையவர்கள் ஈன்றோர் ஆற்றிய பெருந் தவப்பேற்றால் சான்றோர் புகழத் தோன்றினார்கள். இவர்தம் தந்தையார் திருப்பெயர் வயிரமுத்துப்பிள்ளை என்ப. தாயார் திருப்பெயர் சுந்தரத்தம்மையார் என்ப. இவர்தம் உடன்பிறந்த தமையன்மார் ஒருமூவராவர். இவர்க்கு ஒரே ஒரு தங்கையும் இருந்தனர். இவர்தம் தமையன்மார் மூவருள் நடுவணதெய்த இருதலையும் சிறக்கும் என்பதை மெய்ப்பிக்கும் எடுத்துக் காட்டாகத் தோன்றியவர் கழகத்தை அரும்பாடுபட்டு நிறுவி வளர்த்துக் காப்பாற்றி நிலைநாட்டிய உலைவில் புகழ்சேர் ஒண்மைத் 'திருவரங்கனா'ராவர்.*

*குடும்ப நிலை*

*இருமுதுகுரவராம் ஈன்றார் இருவரும் பொருவரும் மனையறம் பொற்புறப் பேணினர். முதுகுடி வாழ்க்கை மூவைந் தாண்டுகள் மதிநலமுற மாண்புடன் நடத்தினர். 1900-ஆம் ஆண்டில் தந்தையார் இறையடி நீழலெய்தினர். தந்தையார் ஆவி நீத்த காலத்து மக்கள் ஐவரின் அகவை நிலை வருமாறு: மூத்தவர் முத்துசாமி, பதின்மூன்றாண்டினர். அடுத்தவர் திருவரங்கனார், பத்தாண்டினர். மூன்றாமவர் ஐயம்பெருமாள்,*

ஏழாண்டினர். நான்காமவர் சுப்பையா, மூன்றாண்டினர். ஐந்தாம் மகவுபெண் பத்துத் திங்கள். இவர்கள் அனைவரும் அரும்பெறல் தாயாரவர்களின் அன்பு அறிவு ஆற்றல் முயற்சி யாலும், அவ்வம்மையார் இறைவன்மாட்டுக் கொண்டொழுகிய நிறையன்பாகிய பெரும்பற்றென்று சொல்லப்படும் பத்தியினு லும் நன்குற வளர்க்கப்பெற்றனர்.

இவர்தம் முன்னோராகிய மூவருள் மூத்தவர் 1920-ஆம் ஆண்டிலும், இளையவர் 1914-ஆம் ஆண்டிலும் இறைவனடி சேர்ந் தனர். இவரின் ஒரே ஒரு தங்கை குப்பம்மாள் என்னும் செப்பரும் பெயரினள் மணமாகித் திருஞானம் என்னும் செல் வக் குழந்தையை ஈன்று 1926-ஆம் ஆண்டில் இவ்வுலகைவிட் டகன்றனர். அவ்வருமை மருகன் திருஞானம் என்பவர் தற் போது சேலத்தில் தந்திப் பொறித் துறை மேற்பார்வையாள ராகப் பணியாற்றி வருகின்றனர்.

மளிகை

இவர், குடும்பத்தில் கடைசி மகவாகத் தோன்றியவராதலின் இவர்பால் அரும்பெறல் தாயார், அண்ணன்மார், நெருங்கிய உறவினர் முதலியோர் மிகவும் அன்பு பாராட்டிச் செல்வமாய் வளர்த்து வந்தனர். தந்தையார் நடத்தி வந்த மளிகை வாணி பத்தைப் பதினன்கு ஆண்டுகள் நிரம்பியுள்ள மூத்த அண்ணனர் மேற்கொண்டு நடத்தலாயினர். பொறுப்பேற்று நடத்துதற்கு வாய்ப்பான பருவம் இன்மையால் மளிகை வாணிபம் நிறுத்தப் பட்டுப்போயிற்று. பின்னர்த் தம் உறவினர் மளிகையில் வேலை பார்த்து வந்தனர்.

திருவரங்கர் செயல்

திருவாளர், வ. திருவரங்கம் பிள்ளையவர்கள் ஐந்தாம் படிவத் தில் கற்றுக்கொண்டிருந்தனர். பொருள் முட்டுப்பாடு காரண மாகப் படிப்பைத் தொடர்ந்து கற்க முடியாது போயிற்று. பாளையங்கோட்டையில் ஒரு வழக்கறிஞரிடம் எழுத்தாளராக ஓராண்டுவரை வேலைபார்த்தனர். பின்பு தூத்துக்குடிக்குச் சென்றனர். அங்குச சிவனேயமிக்க உறவினர் திரு. அழகிய சுந்தரம் பிள்ளையவர்களின் உதவியால் கப்பலேறிக் கொழும்பு சென்றனர். ஆங்குத் திருநெல்வேலிச் சைவ வேளாளர் கிட்டங்கி (பண்டகசாலை) ஒன்றில் தக்க ஊதியத்துடன் வேலை பார்த்து வந்தனர்.

கல்வி

திரு. வ. சு. அவர்கள் தம் ஆறுவது ஆண்டில் பாளையங் கோட்டை தூய சேவியர் உயர்நிலைப் பள்ளியில் குழந்தை வகுப்

யில் சேர்ந்து கல்வி பயின்றனர். 1911-இல் முதற் படிவம் பயிலும்போது ஆண்டுதோறும் திசம்பரில் நடக்கும் பள்ளி யிறுதித் தேர்வு மார்ச்சுத் திங்களுக்கு மாற்றி வைக்கப்பட்டது. இவர் 1916-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் நிகழ்ந்த பள்ளி யிறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றார். அவ்வாண்டிலேதான் முதன் முதல் கல்லூரியிற் சேர்ந்து படிப்பதற்கான மாணவர் தகுதிப்பட்டி (Eligible List) கல்வித்துறை இயக்குநர் அலுவ லகத்திலிருந்து வெளியிடப்பெற்றது.

இவர் பள்ளிப்படிப்பில் 'தமிழிலும்' 'கணக்கிலும்' நல்ல மதிப்புஎண் பெற்று வந்தனர். நாலைந்து ஆண்டுகள் தொடர் பாகத் தமிழ்ப் பரிசும் பெற்று வந்தனர்.

### விளையாட்டும் விருந்தும்

இளமையில் பல்வேறு வகையான விளையாட்டுகள், நீந்தல், ஊருக்குப் புறம்பாயுள்ள சோலைகள், தங்குமிடங்களிற் சென்று வேட்டச் சோறுக்கியுண்டல் முதலியவற்றில் மாணவர் பலர்க்கும் இவரே தலைமையாக நின்று இனிதுற முடித்து எல்லாரையும் இன்புறுத்தித் தாமும் இன்புறுவர். விருந்தமைப்பதற்கு வேண்டும் பொருள்கள் கொண்டு வருவதும், விருந்தமைப்பதும் பிறவும் மாணவர் செயல்களேயாம். விளையாட்டில் மிகுதியும் வெற்றியே பெறுவர். தோல்வியை விரும்பார். தோல்வி வரும் போல் தோன்றினால் தாழ்ச்சி வாராதிருக்க மிக்க சூழ்ச்சியுடன் ஆட்டத்தைக் குழப்பிவிடுவர். இளமையிலேயே தந்தையார் பிரிந்தமையால் பொருள் முட்டுப்பாட்டால் நேரும் துன்பங் களில் இவரும் துன்புற நேர்ந்தனர். இவர்தம் அருமைத் தமையனார் கொழும்பு சென்று சில்லாண்டுகள் கழியவே அவர் தம் உதவியால் ஒருவாறு பொருள்நிலை வளமுறலாயிற்று. இளமையில் நேர்ந்த பொருள் முட்டுப்பாட்டுத் துன்பத்தால் பொருளருமை ஓர்ந்து சிக்கன வாழ்க்கை கடைப் பிடிப்பவரா யினர். கொழும்பிலிருந்து திரு. வ. தி. அவர்கள் அனுப்பி வைக்கும் பணங்கள் இவர் பெயருக்கே வரும். இவரும் செலவு களைச் சிக்கனமாகவே செய்து முறையாகக் கணக்கெழுதியும் வைப்பர்.

### கலக்கமும் மாற்றமும்

திரு. திருவரங்கம் பிள்ளையவர்கள் 1914-ஆம் ஆண்டில் பல்லாவரம் மறைமலையடிகளாரைக் கொழும்புக்கு முதன் முதல் வருவித்துப் பல சொற்பொழிவுகள் ஆற்ற ஏற்பாடு செய்தனர். அடிகளார் தொடர்பினால் திருவரங்கரும் துறவியாகிவிடுவர் என்னும் அலர் அவர் குடும்பத்துக்கு எட்டியது குடும்பம் மிகக்

கவலை கொண்டது. அக் கவலையினை அகற்றும் பொருட்டுத் திருவரங்கனார் ஊருக்கு வந்து சில திங்கள் தங்கி மீண்டுங் கொழும்புக்குச் சென்றனர்.

### கொழும்புக் கல்வி

1916-ஆம் ஆண்டில் திரு. வ. சு. அவர்கள் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றனர். உள்ளம் கல்லூரிப் படிப்பினை உள்ளிற்று. பொருள் முட்டுப்பாடு அவ்வுள்ளலைத் தள்ளி அஞ்சலகப் பணி ஏற்குமாறு மிகவும் கடுமையாகத் தூண்டிற்று. அப் பணியின் பொருட்டு முயன்றனர். அப்பணி கைகூடும் சூழ்நிலையும் ஏற்பட்டது.

இதற்கிடையில் கொழும்பிலிருந்து பொருவரும் திருவரங்கனாரின் பொன்போலெழுத்தொன்று வந்தது. அதன்கண் கொழும்புக்கு வந்து ஆங்குள்ள முதன்மைக் கல்லூரி (சென்ட்ரல் காலேஜ்) யில் ஓராண்டு பயின்று ஆசிரியர் கல்லூரி (College of Preceptors) இலண்டன்மா நகரின்கண் நடத்தும் தேர்வினை ஆண்டிருந்தே எழுதலாமென்றும், ஆண்டு வந்து தம்முடன் தங்கிப் படித்தல் வேண்டுமென்றும் பொறிக்கப்பட்டிருந்தன.

மேலும் சிறீவைகுண்டம் வழக்கறிஞர் திரு. முத்துசாமிப் பிள்ளையவர்கள் மகனார் திரு. நெல்லையப்பரும் அங்குப் படிப்பதாகவும், அதுவும் தம் படிப்புக்குத் துணையாக இருக்குமென்றுங் கண்டிருந்தது. அதன்மேல் திரு. வ. சு. அவர்கள் 1916-சூலைத் திங்கள் இறுதியில் தூத்துக்குடி வழியாகக் கப்பலேறிக் கடவுளருளால் கொழும்பு வந்து சேர்ந்தனர். கல்லூரியிற் சேர்ந்து படித்தனர். பாடங்கள் ‘ஆங்கிலம், தமிழ், இலத்தீன், கணக்கு, பூகோளம், வரலாறு’ முதலியவையாகும். நாலைந்து திங்கள் சாலவும் கல்வி பயின்றனர். இடையே நீர்க்கோவை கண்டு துன்புற்றனர். எவ்வகை மருந்தாலும் அந் நோயகன்று செவ்விபெற முடியவில்லை. அதன்பேரில் கல்லூரி முதல்வர் திரு. இரத்தினம் அவர்களின் நல்லிசைவுடன் ஊரிலிருந்து படித்துக் கொழும்புபோய்த் தேர்வு எழுதும் வாய்ப்புடன் ஊருக்கு மீண்டனர். ஊரிலிருந்தே தேர்வுக்குரிய பாடங்களை மிகவும் கருத்தாகப் படித்து வந்தனர்.

### மறைமலையடிகளாரின் மாண்பார் தொடர்பு

1917-மேத் திங்களில் தேர்வு எழுதும் பொருட்டுத் திரு. வ. சு. அவர்கள் கொழும்புக்குச் சென்றனர். அப்பொழுது மறைமலையடிகளார் கொழும்பில் செந்தமிழும் சிவநெறியும் மூந்துறப் பேணும் மென்கட் செல்வமும் மெய்யொழுக்கமும்

எய்யாவைப்பும் ஒருங்கு இறையருளால் வாய்க்கப்பெற்ற குலசேகரன்பட்டினம் ராம. ப. செந்திலாறுமுகம் பிள்ளையவர்கள் வளமனையில் விருந்தினராகத் தங்கியிருந்தனர். வ. சு. அவர்களும் ஆண்டே அடிகளாருடன் ஒருங்கு தங்குவாராயினர். தேர்வு முடியும்வரை அடிகளாருடன் தங்கும் வாய்ப்புக் கிடைத்தது சிறந்த பெரும்பேறே யாயிற்று. அதனால் செந்தமிழின் கண்ணும் சிவநெறியின்கண்ணும் அசையா உறுதியும், ஆழ்ந்த பற்றும், ஆர்வமும் பிறைபோல் பெருகுவதாயிற்று. மேலும் பிற்காலத்து யாழ்நூல் பேராசிரியராய்த் துறவுக்கோலத்தூயராய் விளங்கிய விபுலானந்த அடிகள் அந்நாளில் பண்டித மயில்வாகனனாரென்னும் பெயருடன் கல்லூரி மாணவராக விளங்கினர். அவர்கள் இடையிடையே அடிகளாரைக் கண்டு ஆர்வம் பெருகி அளவளாவ வந்துபோவர். அங்ஙனம் வருவதில் செந்தமிழின் சீரிய நூற்கண்ணும் சித்தாந்த சைவத்தின்கண்ணும் தமக்கு ஏற்படும் ஐயங்களைப் போக்கிக்கொள்வதுடன், வியத்தகு புதுத் தெளிவும் பெற்றுச் சிறந்தனர். அத் தெளிவின் பொருட்டு அடிகளார் கட்டுரைக்கும் பல்வேறு அகப்புறச் சான்றுகள் திரு. வ. சு. அவர்கட்குக் கிடைத்தற்கரிய கேள்விச் செல்வமாய் அருளாலமைந்த பெரும் பொருளாயிற்று. இதுவே திருவள்ளுவ நாயனார் கட்டுரைக்கும் "வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள், யானையால் யானையாத் தற்று." (சுஎஅ) என்னும் செந்தமிழ்ப் பொதுமறையின் சீரிய செம்பொருளாகும்.

### இலண்டன் தேர்வு

1917-இல் நிகழ்ந்த இலண்டன்மாநகர்த் தேர்வில் இலத்தீன் நீங்கிய ஏனைய பாடங்களுக்கு விடை எழுதி வெற்றியும் பெற்றனர். எழுதாத இலத்தீன் பாடத்தைத் திசம்பரில் எழுதி அதிலும் வெற்றி பெற்றனர். இத்தேர்வு பெற்றவர் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவங் கற்பதற்குத் தகுதியுடையவரென மதிக்கப் பெற்றனர். அம் முறையினால் வ. சு. 1918 சூன் திங்களில் பல்லாவரஞ் சென்று சென்னை மருத்துவக் கல்லூரியிற் சேர்தற் பொருட்டு அடிகளார் வளமனையில் தங்கினர். தங்கி அடிகளாரின் மாணவர் டாக்டர் ஏ. சீனுவாசலு நாயுடு, எம். டி., அவர்களின் துணைகொண்டு மருத்துவக் கல்லூரியில் இடம் பெற முயன்றனர். அது கைகூடவில்லை அதன்மேல் பாளையங்கோட்டைக்குத் திரும்பினர். திரும்பித் திருநெல்வேலி இந்துக் கல்லூரியிற் சேர்ந்து இடைநிலைக் கலை (Intermediate) வகுப்பில் சேர்ந்து இரண்டாண்டு பயின்றனர். பிற காரணங்களால் பின் பயில வாய்ப்பில்லாமற் போயிற்று.

சொற்பொழிவுப் பயிற்சி

வ. சு. அவர்கள் கல்வி பயிலுங் காலத்துச் செந்தமிழார்வம் பெருகியிருந்தமை அவர் வாங்கியுள்ள தமிழ்ப் பரிசுகளால் விளங்கும். அதனை முன்பே குறிப்பிட்டுள்ளோம்; பின்பு மறைமலையடிகளார் தொடர்பால் அவ்வார்வம் பன்மடங்கு ஓங்கிற்று. அதன் பயனாக அந்நாளில் பாளையங்கோட்டையில் சிறந்து விளங்கிய சைவ சபையின் கண்ணும், இவர் தம் இல்லம் அமைந்துள்ள தெருக்கோடிப் பிள்ளையார் கோவிற்கண்ணும் பலகால் அன்பு, ஈகை, பெண்கல்வி முதலிய பயனுள் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளனர். தாமேயுமன்றித் தக்க புலமைசார் அன்பர்களைக் கொண்டு சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றுவிப்பதும் உண்டு. மேலும் இவர்கள் ஆற்றும் சொற்பொழிவுகளுக்குத் தலைமை பூண்டு அணிபெற நடத்திய ஆன்றோரும் பலராவர். அவருட்சிலர் வருமாறு: திருநெல்வேலி வழக்கறிஞர் திரு. டி. பி. வேலாயுதம் பிள்ளை, வழக்கறிஞர் பி. கே. அய்யாச்சாமிப்பிள்ளை, வழக்கறிஞர் வி. பி. காந்திமதிநாதன் செட்டியார், குலசைத் திருவருள் வயிரவநாதபிள்ளை முதலியோராவர். மறைமலையடிகள் திருநெல்வேலிக்கு வந்திருந்தபோது பொதுமக்களிடம் பொருள் தொகுத்து இருமுறை சொற்பொழிவு ஆற்றத்தக்க ஏற்பாடு மிக்க ஊக்கத்துடன் செய்தனர்.

பெரியார் பிரிவு

திருநெல்வேலி வேளாளர் கல்வி அபிவிருத்திச் சங்கத்தை நிறுவியவரும், செந்தமிழ்ப்பற்றும் சிவநேயமும் நிரம்பியவரும், பொதுநல நாட்டமிக்கவரும், உருவும் திருவும் நல்லொழுக்கமும் ஒருங்கமைந்தவரும் ஆகிய சான்றோர் வழக்கறிஞர் திரு. அய்யாச்சாமிப்பிள்ளையவர்கள் ஆவர். அவர்கள்பால் வ. சு. அவர்களுக்கு மிகுந்த அன்புண்டு. அவர்களுக்கும் இவர்கள்பால் நிறைந்த ஆர்வம் உண்டு. வ. சு. அவர்கள் கொழும்பிலிருந்தபோது 1917 திசம்பரில் திரு. அய்யாச்சாமிப்பிள்ளையவர்கள் கக்கல் கழிச்சல் (வாந்திபேதி) நோயால் திடுமெனச் சிவன் திருவடி நீழல் எய்தினர் இச் செய்தியினைக் கேட்டு வ. சு. அவர்கள் ஆற்றொணத் துன்புற்றுப் பெரிதும் துடித்தனர். அந்தோ! இப் பெருந்தகையார் பிரிவு விழுத்திணை வேளாளர் மரபுக்கு மட்டுமன்றிச் செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் ஈடுசெய்யவொண்ணப் பேரிழப்பாம் என்று எண்ணிஎண்ணிப் பெரிதும் கலங்கினர்.

திருசங்கர் கம்பெனி

வ. சு. அவர்களின் தமையனார், வ. தி. அவர்கள், இனிக் கொழும்பு சென்று ஊழியம் புரியும் உள்ளமில்லாதவராய்ச்

சென்னையிற் புத்தக வணிகஞ்செய்யும் நோக்கத்துடன் கொழும்பினின்றுந் தம் ஊர் வந்தனர். அங்கிருந்து பல்லாவரம் வந்து அடிகளார் வளமனையில் உளமகிழச் சின்னாட்டங்கிச் சென்னைக்கு வந்தனர். சென்னையில் பவழக்காரத்தெரு எண் இரண்டாம் இல்லம் குலசேகரன்பட்டினம் சைவ வேளாள வணிகருக்கு உரியது. அவர்க்குச் சென்னையில் மட்டுமன்றித் தூத்துக்குடியிலும் கொழும்பிலும் வாணிபம் உண்டு. அவ்வில்லத்தில் ஓர் அறையில் 'திருசங்கர் கம்பெனி' என்னும் பெயருடன் புத்தக வாணிபத்தைத் துவங்கினர். இவ் வாணிபம் கொழும்பில் வைத்தே துவங்கப் பெற்றதாகும்.

துவக்கத்தில் சென்னை கோமளேசுரன்பேட்டை ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் எழுதிய பதவுரை விளக்கவுரைகளோடு கூடிய பெரியபுராணம் நான்கு பகுதிகள், அவற்றைப் பதிப்பித்தவரிடம் பெற்றுத் தக்க விளம்பரங்கள் செய்து விற்றுவந்தனர். அதுபோல் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் மாணக்கர் ஈரெண் நினைவாற்றல் எனப்படும் சோடசாவதானம் சுப்பராயச்செட்டியார் எழுதிய திருவிளையாடற்புராண வுரையையும் வெளியிட்டவர்பாற் பெற்று விற்றுவந்தனர். அத்துடன் அடிகளார் நூல்களையும் தக்க விளம்பரங்களைப் பரப்பி மிகுதியும் விற்றுவந்தனர். இதுபோலவே ரிப்பன் அச்சுக்கூட நூல்கள், ஆறுமுகநாவலர் நூல்கள், புஷ்பரதச் செட்டி அச்சக நூல்கள், டாக்டர் சாமிநாதய்யர் நூல்கள், சே. கிருஷ்ணமாச்சாரியார் நூல்கள் ஆகியவைகளையும் வாங்கி விற்று வந்தனர்.

### கிளை நிலையம்

திருசங்கர் கம்பெனிக் கிளைநிலையம் பாளையங்கோட்டையிலுள்ள தமதில்லத்தில் துவங்கினர். அதனை வ. சு. அவர்கள் கல்லூரிப் படிப்புடன் மேற்பார்த்து வந்தனர். மறைமலையடிகளார் உருவப்படங்களைப் பல்வேறு வகையாகச் சென்னை ஓவியர் புட்டாசாமிச் செட்டியாரவர்களைக் கொண்டு அமைத்து அவற்றையும் விற்றுவந்தனர்.

அடிகளாரால் திருவாசகத்துக்குச் சிறந்த விரிவுரை எழுதுவித்துத் திங்கள் வெளியீடாக வெளியிட ஏற்பாடு செய்தனர். அவ் வெளியீட்டுக்குச் 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்று பெயர். அதனுடைய பன்னிரண்டு இதழ்க் கையொப்பம் நான்கு ரூபா. அதற்கு வேண்டும் உறுப்பினர் கையொப்பமும் வ. சு. அவர்கள் வாங்கி அனுப்பியுள்ளார்கள். இவ்வாற்றால் இவர்தம் கட்டிளமைப் பருவத்தே கல்லூரிப் படிப்புடன் செந்தமிழுக்கும் சிவனெறிக்கும் செய்த தொண்டு மிகவும் போற்றத்தக்கதே.

**கழகக் கால்கோள்**

திருவாளர் மா. திரவியம்பிள்ளையவர்கள் திருநெல்வேலியில் கே. எஸ். பேங் மேலாளராகவும், வக்கீல் பண்டாரம்பிள்ளை அவர்களிடம் எழுத்தாளராகவும் பணிபுரிந்து வந்தனர். இவர்கள் தமிழ் மொழியிலும் சைவ சித்தாந்தத்திலும் மிக்க பற்றுள்ளவர். மறைமலையடிகளாரின் தொடர்பினர். அடிகளை நெல்லைக்கு வரவழைத்துச் சொற்பொழிவு ஆற்றுவித்துப் பணம் தொகுத்துக் கொடுத்தனர். அடிகளார் வாயிலாக வ. தி. அவர்களுடன் நட்புப் பூண்டனர். திரவியம்பிள்ளையவர்கள் 'தென்னிந்தியா பேங்க்' விதிகளை அழகுற அமைத்துக் கொடுத்தவர்கள்.

வக்கீல் பண்டாரம்பிள்ளையவர்கள் தம்பி திருவாளர் தி. செ. விசுவநாதபிள்ளை, பி.ஏ., அவர்களின் தூண்டுதலின்மேல் மா. தி. அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் ஒரு கம்பெனி நிறுவ எண்ணங் கொண்டனர். அதற்குத்தக்க பயிற்சியும், ஆற்றலும், ஆக்கப்பாட்டு நோக்கமும், ஆட்சித்திறனும், தளரா ஊக்கமும், மக்களை நகைமுக இன்சொல் அன்பால் அளவளாவித் தம்பால் ஈர்க்கும் தனிப்பெற்றியும் ஒருங்கமைந்த வ. திருவரங்கம்பிள்ளையவர்களின் துணையை நாடினர். மறைமலையடிகளார் வாயிலாக அவர்களும் இணங்கினர். மா. தி. அவர்கள் கம்பெனிக்குரிய விதிகளை எழுதிவந்தனர். வ. சு. அவர்கள் அம்முயற்சிக்குப் பெருந்துணையாக இருந்தனர். மாவட்ட நடுவராகவிருந்து ஓய்வு பெற்ற உயர்திரு. டி. கோமதிநாயகம்பிள்ளை, பி. ஏ, பி. எல். வழக்கறிஞராக இருந்த அக்காலத்து அவர்களிடம் கழகவிதிகளைக் காட்டிச் சரிபார்த்துக் கொண்டனர்.

திருவாளர் திரவியம்பிள்ளையும் திருவரங்கம்பிள்ளையும் இணை அமைச்சர்களாக இருந்து கழகத்தை நடத்துவதெனத் தீர்மானித்தனர். கழக மெமோராண்டத்தில் அவர்கள் இருவரும் அவர்களுடைய வாரிசுகளும் கழகப்பதிவான காலமுதல் இருபத்தைந்தாண்டுகள் அமைச்சர்களாகவும் கழகச் செயற் கூட்டத்தில் இரண்டு உறுப்பினர்களாகவும் இருந்து இக் கழகத்தின் காரியங்களை நடத்திவருவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கழகத்தின் மூலதனம் ரூபா 50,000-மும், பங்கு ஒன்றுக்கு ரூபா 10 வீதம் 5000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 21-9-1920-இல் 'திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்' என்னும் சிறந்த பெயருடன் நன்னாள் கொண்டு திருநெல்வேலி சாயிண்ட் ஸ்டாக் கம்பெனித் துணைப்பதிவாளர் அலுவலகத்தில்பதிவு செய்யப்பட்டது.

**கழக அலுவல்கள்**

வ. சு. இண்டர்மீடியட் தேர்வில் மூன்று பகுதிகளில் ஒரு பகுதியில் மட்டும் தேர்ச்சி பெறவில்லை. கழக வேலை குறுக்கிட்டமையால் தொடர்ந்து படிக்கும் வாய்ப்பு இல்லாமற்போயிற்று. வ. தி. அவர்கள் கழக அலுவல்களின் பொருட்டுத் திருநெல்வேலியில் தங்கவேண்டுவது முதன்மையாயிற்று. வ. தி அவர்கள் திருநெல்வேலியில் கழக அலுவலகம் அமைத்துத் திருநெல்வேலியில் தங்கினர். வ. சு. அவர்கள் சென்னைக்கு வந்து திருசங்கர் கம்பெனியின் பொறுப்பினை ஏற்று நடத்தி வந்தனர். அமைச்சர்கள் இருவரும் கழகப் பங்கு சேர்க்கும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டனர்

**சென்னைக் கிளை நிலையம்**

1921 பிப்ரவரியில் திருசங்கர் கம்பெனி இருந்த இடத்தில் கழகத்தின் கிளை நிலையம் நிறுவப்பட்டது. வ. சு. அவர்கள் கிளை நிலைய முகவராக அமர்த்தப்பட்டனர். திருசங்கர் கம்பெனிப் புத்தகங்கள் அடக்கவிலை போட்டுக் கழகத்துக்கு மாற்றப்பட்டன. அதுமுதல் புத்தகவாணிபம் கழகப் பெயராலேயே நடந்துவந்தது. திருவாசக விரிவுரையடங்கிய செந்தமிழ்க் களஞ்சியமட்டும் கழக ஒப்புதலின்மேல் திருசங்கர் கம்பெனிச் சார்பில் நடந்துவந்தது. வ தி. அவர்கள் சென்னைக்கு வந்து தம்பியாருக்குக் கம்பெனி நடத்தும் முறையும், கணக்கு வைத்தல், நூல் வெளியீடு செய்தல் முதலிய முறைகளையும் விளக்கமுறத் தெரிவித்தனர். தொடக்கத்தில் வ. சு. ஒருவரே முகவர், மேலாளர், எழுத்தாளர், புத்தகம் வாங்கிவந்து விற்பனை செய்பவராக இருந்தனர். அதன் பொருட்டுக் கொடுக்கப்பட்ட ஊதியம் ரூபா முப்பத்தைந்து. ஊதியங்கருதாது கழக உயர்வே கருதி உண்மையொடும் பணியாற்றி வந்தனர்.

**கழகத்திரு கண்ணனையார்**

கழகத்தைத் துவங்குமாறு முதற்கண் தூண்டி வலியவந்து பங்கு நூறுக்கு ரூபா ஓராயிரமும் உடன்கொடுத்துதவிய பொது நலம்பேணும் பெருந்தகையார் திருநெல்வேலி தி. செ. விசுவநாதபிள்ளை, பி ஏ., ஒருவர். மற்றொருவர் கழகப் பணியினைக் கண்டும் கேட்டும் பாராட்டிவரும் பண்பின்மிக்க பாகனேரித் தமிழ்ப் புரவலர் மு. காசிவிசுவநாதன் செட்டியாராவர். இவ்விருவருக்கும் விசுவநாதர் என்னும் பெயர் ஒற்றுமை வாய்ந்திருப்பதும் வியப்புடைத்தே. இவ்விருவரும் இந்நாள் கழகம் பேரறப் பணிகளும் பெருந்தொண்டும் ஆற்றிச் சீரும் சிறப்பும் எய்திச் செந்தமிழையும் சித்தாந்த சைவத்தையும் பண்டுபோல் அனைவரும் கண்டு

கைக்கொள்ளுமாறு ஒல்லும் வகை நாளும் ஓம்பி வருதற்கு முறையே வித்தும் வேலியும் கோலியமைத்துதவிய விழுத் துணையாராவர். இவ் அறப்பெருஞ்சான்றோர் இருவரும் இறையரு ளால் இன்றும் நிறைவாழ்வுடன் வாழ்கின்றார்கள். அவ்விருவர் தம் அருள் உள்ளப்பாங்கின் நிழலுருப் போல் கழகம் திகழ்ந்து மேலும் மேலும் வளர்ந்து கொண்டு செல்லுகின்றது அதனை அவ்விருவரும் கண்டு களிக்கும் பேறு பெற்றமை அவர்கட்கு எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் எல்லையில்மகிழ்வை நல்கு கின்றது. அவ்விருபெரும் சான்றோரும் செந்தமிழ்ச்சிவனார் திருவருளால் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து கழகப்பணியினையும் வளர்ச்சியினையும் கண்டுகளிக்குமாறு அப்பெருமான் திருவடி யிணையினை இறைஞ்சுகின்றாம்.

அரிய நூல்கள் உரியமுறையில் வெளிவருதல்

தம் தமையனார் செய்துள்ள ஒப்பந்தப்படி சென்னைக் கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் பண்டிட் வா. மகாதேவ முதலியாரைக்கொண்டு சோமேசர் முதுமொழி வெண்பாவுரையினையும், மறைமலையடிகளார் மாண வர் தண்டமிழ்ப்புலவர் நாகை. சொ. தண்டபாணிப் பிள்ளையைக் கொண்டு திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி உரையினையும் அச்சிட்டுக் கழகவெளியீடாக வெளியிட்டனர். இவ்விரு பெரும் நூற்களுக்கு முன்பாக விநாயகர் அகவல், கந்தர்கலி வெண்பா, திருச்செந்தூரகவல் அடங்கிய திருவடிப் புகழ்மாலை மலர் ஒன்றையும் வெளியிட்டனர்.

தண்டபாணி விருத்தியுரை

கழகம் தொடங்குவதற்கு முன்பே நாகை, சொ. தண்டபாணிப்பிள்ளையைக் கொண்டு திருக்குறளுக்கு விருத்தி யுரை ஒன்று எழுதித்தரும்படி வ. தி. அவர்கள் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டனர். அவர்களுக்குத் திங்கள்தோறும் முப்பத் தைந்து ரூபா கொடுத்து வருவதாகவும் ஒவ்வொரு பாலும் அச்சிட்டு முடிந்தவுடன் படிவங்களின் எண்ணிக்கைக்குத் தக்க வாறு கணக்கிட்டு மீதித்தொகையைக் கொடுத்துவிடுவதாகவும் செய்துகொண்டதே அவ்வொப்பந்தமாகும். தண்டபாணிப் பிள்ளையவர்கள் இடையிடையே இருமல் நோயால் துனபுற்று இராயப்பேட்டை மருத்துவமனையில் மருந்துண்டுவருவார்கள். அவர்கட்கு மருந்து முதலியன வாங்கிக்கொடுத்தல் பிறவுதவிகள் செய்தல் அனைத்தையும் வ. சு. அவர்களே செய்தனர். அப்படிப் பல முறையும் செய்துள்ளனர். அந்த முறையில் அறத்துப்பால் வெளிவந்துள்ளது. அது பலராலும் பாராட்டப்பெற்று ஏனைய

பால்களுக்கு அம்முறையில் விருத்தியுரை வரவேண்டுமென்னும் வேட்கையினைத் தூண்டியுள்ளது.

சிவகாமி அச்சகத்தொடர்பு

1923-ஆம் ஆண்டில் கழக நிலையம் தம்புச்செட்டித் தெரு இலிங்கிச்செட்டித் தெரு முதலிய இடங்களுக்கு மாற்றப் பட்டது. இலிங்கிச்செட்டித்தெரு 306-ம் எண் கட்டடமாடியில் கழகமும் கீழ்ப்பகுதியில் சிவகாமி விலாச அச்சுக்கூடமும் அமையும் வாய்ப்பு ஏற்பட்டது. சிவகாமி விலாச அச்சுக்கூடத்தை நடத்தியவர்கள் சிறுமணவூர் முனிசாமி முதலியார் மக்கள் திரு. மு. நடேசமுதலியாரும், கோவிந்தராச முதலியாருமாவர். கோவிந்தராச முதலியாருக்கும், வ. சு. அவர்களுக்கும் உணர்ச்சியொத்த நட்பால் இணக்கம் நாளும் பிறைபோல் வளர்ந்தது. அவர்கள் பலநாள் சூளையிலுள்ள தம் இல்லத்திற்குச் செல்லாது வ. சு. அவர்களுடனேயே தங்கிவிடுவர். கழகப்புத்தகங்கள் இத்துணைச் சீரும் சிறப்பும் வாய்ந்து கண்கவர் வனப்பினவாய் வெளிவந்து பாராட்டுப் பெறுதற்குப் பெருங்காரணர் கோவிந்தராச முதலியாரவர்களே யாவர். இத்தகைய நெருங்கிய தொடர்புக்குப்பின் கழக நூல்கள் அனைத்தும் சிவகாமி விலாச அச்சுக்கூடத்திலேயே அச்சிடப்பெற்றன. அதற்குமுன் சிவகாமி விலாசத்தும் பி. ஆர். ராமய்யர் கம்பெனி அச்சகத்திலும், டெய்லி எக்ஸ்பிரஸ் அச்சகத்திலும் அச்சாகி வந்தன.

நோய்க்கடுமை

1924 மேத்திங்களில் வ. சு. அவர்கள் கடுமையான மலேரியாக் காய்ச்சலினால் பெரிதும் துன்புற்றனர். பின்பு 1925-ல் இருமல் நோய் ஏற்பட்டு மிகவும் இளைத்துவிட்டனர். வ. தி. அவர்கள் சென்னைக்கு வந்து தம்பியாரைக் கண்டு கண் கலங்கினர். ஊருக்கு அனுப்பிவைத்தனர். கிளைப்பாட்டம் திருவாளர் சி. பிச்சாண்டியாபிள்ளை யவர்களிடம் மருந்துண்டு இரண்டு மூன்று திங்களில் முழுநலம் பெற்றனர். அதன்பின் திருநெல்வேலித் தலைமை நிலையத்தில் 1926 சூன்வரை அலுவல் பார்த்து வந்தனர். பின் சென்னைக்குத் திரும்பினர். அதுவரையும் வ. தி. அவர்களே சென்னை அலுவல்களைப் பார்த்து வந்தனர்.

தேவார வெளியீடு

கயப்பாக்கம் திருவாளர் சதாசிவச் செட்டியாரவர்களைக் கொண்டு பண்முறை கெடாமல் தேவாரப்பாடல்களைச் சீர்சந்தி பிரித்துச் செப்பஞ்செய்து அற்புதப் பாடல்களுக்கு வரலாற்றுக்

குறிப்பும், அருஞ்சொற்பொருளும் பிறவும் எழுதுவித்துக் கண்கவர் வனப்பினதாக அச்சிட்டு மூன்று பகுதிகளாக வெளிப் படுத்தினர். ஓவியவல்லார் செகந்நாத ஆச்சாரியாரவர்கள் வேண்டும் ஓவியங்கள் முழுவதும் வரலாற்று முறைக்குப் பொருந்த இயற்கைத் தோற்றப் பொலிவு அமைய எழின்மிக்க வாய் ஆக்கிக்கொடுத்தனர்.

## புலவர் கூட்டுறவும் போற்றரு நூல்கள் வெளிவருதலும்

நாவலர் பண்டித திருவாளர் வேங்கடசாமி நாட்டாரவர்கள் திருவிளையாடற்புராண விளக்கவுரையினைப் பெருஞ்சொல் விளக்கனார் அ. மு. சரவணமுதலியாரவர்களைத் துணையாக வைத்துக்கொண்டு எழுதிக்கொடுத்தனர். மூன்று காண்டங் களும் தனித்தனியாக வெளியிடப்பட்டன.

தமிழ்ப் பேரறிஞர். தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், திருவாளர் மணி திருநாவுக்கரசு முதலியார், கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் ரா. கந்தசாமியார் ஆகிய நால்வர் துணையும் வாய்த்தது. இவர்கள் துணையால் 1922-இல் சிவஞான சித்தியார் இருவருரை, தொல் எழுத்து நச்சினார்க்கினியம், சொல் சேனா வரையம் அச்சிடலாயிற்று. இவர்கள் புருப் பார்த்தல், முன் னுரை எழுதல் முதலியன செய்து உதவியுள்ளார்கள். திரு வாளர் எஸ். அனவரதவிநாயகம்பிள்ளையவர்கள் (எம். ஏ., எல். டி.) ஞானமிர்தக்கட்டளை, சித்தாந்தப்பிரகாசிகை, சீவ காருணிய ஒழுக்கம் முதலிய நூற்களைச் செப்பம் செய்துதவினர்.

## நிழலுருத் தொகுப்பு

முற்காலத்திருந்து செந்தமிழ் மொழிக்கும், நாட்டுக்கும், சிவனெறிக்கும் நூலியற்றல், உரையுரைத்தல், சொற்பணிபுரிதல், கற்பித்தல் முதலிய பலவகைத் தொண்டும்புரிந்து பேணி "ஆன்ற விந்தடங்கிய கொள்கைச் சான்றோராம்" செந்நாப் புலவர் நிழலுருவப் படங்கள் ஏறத்தாழ இருநூற்றுக்குமேல் அரும் பாடுபட்டுத் திரு. வ. சு. அவர்கள் தொகுத்து வைத்துள்ளார்கள். இன்னும் தொகுத்துக்கொண்டே வருகிறார்கள்.

## மிகப்பழந் தமிழ்நூல்

மர அச்சு முதலிய அச்சுகள் படிப்படியாக உயர்ந்து அதற் கேற்ற பொறிகளும் அமைந்து வெளிவந்துள்ள தமிழ் நூல்க ளனைத்தையும் திரு. வ. சு. அவர்கள் நனிமிக முயன்று தொகுத் துள்ளார்கள். இஞ்ஞான்று கிடைத்தற்கரியவான பழந்தமிழ் நூல்கள் பலவும் தொகுத்துள்ளார்கள். இவற்றால் கழகம் அமிழ்தினும் இனிய விழுமிய நம் தமிழ் அன்னையினைப் பல்வேறு

வடிவில் ஓரிடத்தே ஒருங்குகண்டு களிக்கும் ஒப்பில் திருக் கோவிலாம் என்க.

1923-ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச்செல்வி'யென்னும் உயர் நடைத் திங்கள்வெளியீடு வெளிவந்தது. அப்பொழுது அதன் ஆசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள். வேலூர் திருவாளர். க. ப. சந்தோசம் (மகிழ்நன்) அவர்கள் 'செந் தமிழ்ச்செல்விக்கு' ஆராய்ச்சிமிக்க நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதிவந்தார்.

1927 ஆவணித்திங்களில் வ. சு. தமையனுர் திருவரங்கம் பிள்ளையவர்களுக்கு மறைமலையடிகளாரின் திருமகளார் திருமதி. நீலாம்பிகை அம்மையாரைத் திருமயிலாப்பூர்த் திருக்கோவிலில் வைத்துத் திருமணம் இனிது நிறைவுற்றது. விருந்தும் இசை யரங்கும் சிறப்புற நிகழ்ந்தன.

1928-ஆம் ஆண்டில் மறைமலையடிகளார் மாணவர் திரு. தி. சு. பாலசுந்தரம்பிள்ளை கழகப்புலவராக அமர்த்தப்பட்டார். நான்கு ஆண்டுகள் பணியாற்றிப் பின் விலகிக்கொண்டனர். பின்பு 1941-முதல் 1945-வரை கழகப் பணிபுரிந்து விலகிக் கொண்டனர். சங்க இலக்கிய இன்கவித்திரட்டு, சங்கநூற் கட்டுரைகள் முதலிய சில நூல்கள் அவர்களால் யாக்கப்பட்டன.

1940-ஆம் ஆண்டில் பவழக்காரத்தெரு 6-ஆம் எண்ணுள்ள கட்டடம் ஏலத்தில் கழகத்திற்கு வாங்கப்பட்டது. இக் கட்டடம் விலைக்குப் பெறுதற்குமுன் 1927-லிருந்தே பல ஆண்டுகளாகக் கழகம் அங்கேயே இருந்து வந்தது. அப்பொழுது முதலே சென்னை அஞ்சல் ஆட்சித்துறை அலுவலகத்தில் வேலைபார்த்த காழி. சிவ. கண்ணுசாமிப்பிள்ளை, பி. ஏ. அவர்களின் நட்பு வ. சு. அவர்களுக்குக் கிடைத்தது. அவர்தம் பெருந்துணையும் கழகத்துக்கு நன்மதிப்பை விளைத்தது.

1939-இல் டாக்டர். மு. வரதராசனுர் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர்கள்வழிச் சேக்ஸ்பியர் கதைகள், படியாதவர் படும்பாடு, மொழி நூல், மொழி வரலாறு முதலிய சில புத்தகங்கள் வெளியிட்டனர்.

திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளின் சொற்பொழிவு சாலச்சிறந்த தொன்றுகலின், வ. சு. அவர்கள் அதனைத் தமிழகத் துக்குப் பயன்படுத்த மிகவும வேட்கைகொண்டனர். 1940-ஆம் ஆண்டில் திருவாளர். வித்துவான். மு. இராசாக்கண்ணனுர் அவர்கள் தொடர்புகொண்டு ஞானியாரடிகளாரின் கந்தர்சட்டிச் சொற்பொழிவுகளை எழுதிவாங்கி வெளியிட்டனர்.

ஞானியாரடிகளின் விரிவுரைகள் அளவிறந்தன. எனினும் நூல்வடிவில் வெளிவந்தது 'கந்தர்சட்டிச் சொற்பொழிவு' ஒன்றுமேயாம். ஞானியாரடிகளின் நினைவுக்குறியாக இந்நூல் ஒன்றும் நின்று நிலவாவிடின் அடிகளார் ஆற்றிய தேனினும் இனிய சொற்பொழிவுகளை நேரிற்கேட்டு இன்புற்ற பெரியோர் களும் அவர்களால் கேட்பிக்கப்பட்ட தலைமுறையினரும் ஏறத்தாழ அறுபதாண்டுகளுக்குப்பின் சொல்லுவதற்குக்கூட ஆளின்றி மறைந்தே போவர். நூலோ என்றும் அழியாது நின்று நிலவி அடிகளார் புகழை நிலைநிறுத்தும். இக் குறிப்பினை அடிகளார்பால் பேரன்புவாய்ந்த மெய்யன்பர்கள் பலர் திரு. வ. சு. அவர்கள்பால் நூல்வாயிலாக அடிகளார் பெரும்புகழை நிலைநாட்டிய தங்களைப் புகழ்வதே எங்கள் கடமையாம் என்று கூறினர்.

உயர்திரு மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள் தொடர்பும் வாய்த்தது. அவர்கள் கழகத்தொண்டினைப் பாராட்டுவதுடன் வ. சு. அவர்களின் தனித்தமிழ் உணர்ச்சியினை நனிமிகப் பாராட்டுவர். பண்டித மணியவர்களின் தலைமையுரைகள் பலவற்றையும் வடமொழிக் கலப்பகற்றித் தூய தமிழ்மொழியாக்கி நன்கு செப்பஞ்செய்து வ. சு. அவர்கள் கழகப்புலவர் திரு. இளவழகனார் துணைகொண்டு உரைநடைக்கோவை என்னும் பெயருடன் இரண்டு பகுதிகளாக அச்சிட்டுக்கொடுத்தனர்.

திருவாளர். சு. அ. இராமசாமிப்புலவர் அவர்களின் தொடர்புகொண்டு புலவர்தம் வரலாறுகள் பல அவர்களால் வரையப்பெற்றன. இதுகாறும் 380 புலவர் வரலாறுகள் பதினைந்து புத்தகங்களாக வெளிவந்துள்ளன. இன்னும் இரண்டு மூன்று புத்தகங்கட்குமேல் வரலாறுகள் கிடைத்திருக்கின்றன. மேலும் அவர்கள் அறநூற் பொருள் செறித்துக் கதையாகப் பயனுடைப் பலநூல்கள் கழகத்துக்கு எழுதியுள்ளனர்.

1941-ஆம் ஆண்டில், திரு. சச்சிதானந்தம்பிள்ளை அவர் களின் தூண்டுதலால் திருவாளர். வித்துவான் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்களின் தொடர்பு ஏற்பட்டது. அவர் களைக்கொண்டு, சிலப்பதிகாரச் சுருக்கம், சிந்தாமணிச் சுருக்கம், புறநானூற்று உரை, பதிற்றுப்பத்து உரை முதலிய சில நூற்கள் வெளிவந்துள்ளன. திரு. கா. அப்பாத்துரைப்பிள்ளை, M. A., L. T. அவர்களைக்கொண்டு ஆங்கில மொழிபெயர்ப்பாகவும் பிறவாக வும் பல நூல்கள் எழுதுவித்து வெளிவந்துள்ளன. பூந்தமல்லி மாவட்டக்கழக உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. இராசு முதலியாரவர்களின் தொடர்புகொண்டு இளவரசன் முதல்



திரு. வ. சுப்பையா பிள்ளையும்
அவர்தம் மனைவியார்
திருமதி மங்கையர்க்கரசியாரும்

குலோத்துங்கன், குமணன், கொடைமடம் முதலிய பல நூல்கள் வெளிவந்துள்ளன.

1951-இல் திருவத்திபுரம் புலவர். கா. கோவிந்தன் எம் ஏ., அவர்கள் தொடர்பு ஏற்பட்டது. சங்கமருவிய நூற்களின் புலவர்கள், புரவலர்கள், குறுநில மன்னர்கள், முடியுடை வேந்தர்கள் முதலியோருடைய அரும்பெரும் வரலாறுகள் வெளிவரவேண்டுமென்பது வ. சு. அவர்களின் நீண்ட நாட்களாக அகங்கொண்டமைந்த பேரெண்ணம். அவ்வெண்ணம் புலவர் கோவிந்தனவர்களால் நிரம்பப்பெற்றுப் பல நூற்கள் வெளிவந்துள்ளன.

மயிலை திரு. சீனி வேங்கடசாமியவர்களின் தொடர்பு ஏற்பட்டது. அவர்களைக்கொண்டு கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும், நரசிம்மவர்மன் முதலிய சில நூற்கள் வெளிவந்துள்ளன.

செல்லூர்க்கிழார் திரு. இராமசாமிப் பிள்ளையவர்கள் கழகப் புலவராக வமைந்து சிலநூற்கள் எழுதிப் பணியாற்றினார்கள். அதுபோல் திரு. ப. இராமநாதபிள்ளையவர்களும் பணியாற்றி வருகின்றனர். இன்னும் பல புலவர்களின் தொடர்புகளும் நூற்களும் உள்ளன. அவைகள் விரிவஞ்சி ஈண்டு இடம்பெறவில்லை. விரிந்த வரலாறு வெளிவருங்காலத்து அவை இடம்பெறும்.

### திருமணம்

திரு. வ. சு. அவர்களின் விடாவுழைப்பும் ஆட்சித்திறனும் கழக முன்னேற்றத்திற்குப் பெருங்காரணமாகும். 1932-ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்களில் முதல் திருமணம் நடைபெற்றது. ஊழ்வினையால் அம் மணவாழ்க்கை பொருத்தமில்லாது போய்விட்டது. போகவே 1935-இல் இரண்டாவது திருமணம் சென்னையின்கண்ணே நடைபெற்றது. திருவருட்டுணையால் திருந்தியமனையால் மனையறம்பேணிக் குடும்பம் சீரும் சிறப்புமாய்த் திகழ்கின்றது. இரண்டாவது திருமணம் பூண்ட மனைவியார் மங்கையர்க்கரசியென்னும் பெயரினராவர்; இருவரும் புரிந்துள்ள பொருவருந் தவத்தால் வடிவழகியார், வயிரமணியார் என இருபெண்மகளார் இருக்கின்றனர். வடிவழகியார் இந்தி எதிர்ப்பின்போது தோன்றிய அருமை மகளாராதலின் தமிழன்பர்களும் புலவர்களும் தமிழரசியார் எனப் பெயர்சூட்டி வாயாரப் புகழ்ந்தழைப்பாராயினர். அம்மகளார் தமிழ் இசை முதலியன நன்குகற்றுக் கல்லூரிப்படிப்பும் பெற்று முறைமாப்பிள்ளைக்குத் திருமணம் செய்யப்பெற்றுத் திருவருளால்

பெண்மகவு ஈன்று செம்மையாக வாழ்ந்து வருகின்றனர். அம் மகளாரின் கணவனார் திரு. இரா. கலியாணசுந்தரம்பிள்ளை என்னும் பெயருடையார். ஆங்கிலத்தில் பி. எஸ்.ஸி. பட்டம் பெற்றவர். ஓங்கிய ஒழுக்கினர். கழகத்தில் துணைமேலாளராகப் பணியாற்றிவருகின்றனர். வயிரமணியார் கற்றுக்கொண்டிருக்கின்றனர்.

நூற்கட்டட அருமை

1929-இல் கழகப்புத்தகங்களைச் செவ்வையாகக் கண்கவர் வனப்பினதாகச் செய்து அமைக்கும் இயல்பு வாய்ந்த திரு ஆர். மாணிக்கசாமி என்பவரை அமர்த்திக் கழகத்திலேயே கட்டடம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அவர் அன்றுமுதல் இன்று வரைத் தலைமைப் பைண்டராகப் பணியாற்றி வருகின்றார். அவர்க்குத் துணையாக இராம்சிங், பார்த்தசாரதி ஆகிய இருவர் பணியாற்றுதலும் பாராட்டுதற்குரியது. கழகக் கட்டட வேலைத் திறனை அனைவரும் அகமகிழப் பாராட்டுகின்றார். அப்பாராட்டுகளின் மெய்ம்மையாக அண்மையில் அனைத்திந்திய அச்சகத்தார் மாநாடுகளில் டெல்லியினும் அலகபாத்தினும் பல்லோரும் அக்கட்டடத் திறனைப் பெரிதும் பாராட்டிப் பரிசுகளும் வழங்கியுள்ளனர். இந்தியப் பேரரசினரும் நற்சான்றிதழ் நல்கியுள்ளனர்.

## திருக்குறட்டிருத்தொண்டு

நினைவு மலர்

1935-இல் 'திருவள்ளுவர் திருநாட்கழகம்' என ஒன்று நிறுவப்பட்டது. அக் கழகம் திரு. வ. சு. அவர்களைப் பொருளாளராக அமைத்துக்கொண்டது. முதல் ஆண்டு விழாப் பல்லாவரம் மறைமலையடிகளார் தலைமையில், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதையொட்டித் 'திருவள்ளுவர் நினைவு மலர்' ஒன்று வெளியிடப்பட்டது. அது மிகவும் சிறந்த முறையில் அமைந்துள்ளது. அதனை அனைவர்களும் பாராட்டிப் புகழ்ந்தனர். அதன்பின்பு எத்தனையோ கழகங்கள் எத்தனையோ சிறந்த முறையில் திருவள்ளுவர் விழாக் கொண்டாடிவரினும் அதனையொத்த சிறந்த நினைவு மலர் எக் கழகத்தாராலும் வெளியிடப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துணைச் சிறந்த முறையில் அம்மலர் வெளிவருதற்கு வ. சு. அவர்களின் அரும்பெறல் முயற்சியே காரணம்.

குறுகிய வடிவம்

வ. சு. அவர்கள் பள்ளியில் படிக்கும்போதே திருக்குறளில் மிக்க ஈடுபாடுடையவராக இருந்தனர். தம்மால் எழுதப்படும்

கட்டுரைகளில் பொருத்தமுற இடையிடையே திருக்குறள்களை எடுத்தாள்வர். அதனை ஆசிரியன்மார் பாராட்டிப் பேசுவர். வழக்கறிஞர் திரு. சி. பி. சுப்பையா பிள்ளையவர்கள் சேக்குவியர் எழுதிய 'ஒதெல்லோ' நாடகம் முழுமையும் அமைந்த குறுகிய வடிவுசேர் நூலொன்றைத் தம் உள்ளங்கையில் அடக்கிக் கொண்டு வ. சு. அவர்களிடம் தம் உள்ளங்கையில் அடங்கியிருப்பது என்னவாயிருத்தல் கூடும், கூறும் பார்ப்போம் என்று கூறினர். திரு. வ. சு. அவர்கள் 'நான் என்ன குறி சொல்லும் வல்லோனா? யான் எவ்வாறு கூறமுடியு'மென்று விடை யிறுத்தனர். அதனைக் கேட்டு நகைமுகங் காட்டிக் கையைத் திறந்து நூலைக் காட்டினர் அதைக் கண்டதும் வ. சு. அவர்கள் மிக வியந்து நம் அருமைத் திருக்குறளும் இம் முறையில் வரும் நாள் என்நாளோ என்று பெரிதும் எண்ணினர். இவர்தம் எண்ணம் திண்ணியதாயிருந்தமையாற் கழகப்பணியும் கிடைத்தது. திருக்குறளினைக் கைக்குள் அடங்கும் வடிவினும், அதனினும் சற்றுப் பெரிது பெரிதாக இரண்டு மூன்று அளவுகளினும் அமைத்து வெளியிட்டுத் தொண்டாற்றியுள்ளார்கள். புத்தகக் கட்டடங்களும் மிகவும் உயர்ந்தனவாக அமைத்துள்ளார்கள். கைக்குள் அடங்கும் திருக்குறட் சுவடியினைத் தீப்பெட்டித் திருக்குறள் என வழங்குகின்றனர்.

இதனைக் காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருட்டிணன் அவர்கள் "பணம்" என்னும் திரைப்படத்தில் வியத்தகு முறையில் தம் கையை மூடிக்கொண்டு என் கையினுள் உலகம் அடங்கியிருக்கிறதென்று கூறிக் கையை விரித்துத் தீப்பெட்டித் திருக்குறளைக் காட்டி வியப்புறச் செய்தமை அனைவரும் அறிந்ததே.

1925-இல் 5¼"-க்கு 3¾" அளவில் திருக்குறள் மூலம் பக்கத்துக்கு ஓர் அதிகாரமாக அச்சிட்டுப் பஞ்சுவைத்து உயர்ந்த ரெக்சைன் கட்டடஞ்செய்து மிக்க வனப்புடன் வெளியிட்டனர். அதனைக் கண்ணுற்ற ரெவரண்டு பாப்பிலித் துரை வலியவே தக்கதோர் பாராட்டிதழ் வழங்கினார்.

### திருக்குறளைப் பரப்பல்

1934-இல் திருக்குறள் அட்டாவதானம் சுப்பிரமணியதாசு அவர்கள் பன்னிரண்டு வயதுள்ள தம் மகனார் இராம்தாசு என்பவரை அழைத்துக்கொண்டு சென்னைக்கழகம் வந்து தங்கினர். திருக்குறள் அட்டாவதானப் பயிற்சி மகனார்க்கும் உண்டு. பல இடங்களில் அட்டாவதானம் நிகழ, வ. சு. அவர்கள் தக்க ஏற்பாடு செய்தனர். அவர்தம் கூட்டரவால் திருக்குறளின்கண்

பலப் பலப் புதுக்கருத்துக்கள் வ. சு. அவர்களுக்குத் தோன்றலாயின.

பல்வேறு உரை

திருக்குறள் முழுமைக்கும் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களைக் கொண்டு பொழிப்புரை எழுதுவித்து வெளியிட்டுள்ளார்கள். பரிமேலழகர் உரையினைச் சாத்தூர்த் திருவாளர் டி. எஸ். கந்தசாமி முதலியார் எழுதிய ஆராய்ச்சி முன்னுரையுடனும் பல்வகைக் குறிப்புக்களுடனும் வெளியிட்டனர்.

அப்பர் அச்சகம் தோன்றியபின்னர்த் திரு. சி. மு. கோவிந்தராசு முதலியாரவர்களுடன் சூழ்ந்து புதிய முறையில் திருக்குறளை வெளியிட்டுப் பரப்ப விழைந்தனர். அதன்படியே 5" × 3" அளவில் பக்கத்துக்கு ஓர் அதிகார விழுக்காடு பாடலும் அதன் நேர் இடப்பக்கத்தில் தெளிவுரையுமாக வெளியிட முடிவு செய்தனர். அதன்படியே டாக்டர் மு. வரதராசனார் அவர்களைக் கொண்டு தெளிவுரை எழுதுவித்து வெளிப்படுத்தினர். 1949-ஆம் ஆண்டில் முதற்பதிப்பு வெளிவந்துளது. தொடர்ந்து இதுவரை ஒருநூறாயிரத்து இருபதினாயிரம் படிகட்குமேல் விற்பனையாகியுள்ளது. டாக்டர் வரதராசனாரவர்கள் அமைத்துக் கொடுத்த தெளிவுரையின் மாண்பும், வனப்பும், அமைப்பும் வாயாரப் புகழ்ந்து வழுத்துந் திறத்தன.

பல்வேறு வகை

டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள் தம் இளமைக் காலத்தில் எழுதிய 'திருவள்ளுவர் நூல் நயம்' என்ற நூலைக் கழகம் இரண்டாம் பதிப்புமுதல் வெளியிட்டு வருகிறது. திருக்குறள் நீதிக்கதைகள், திருக்குறள் பொறுக்குமணிகள், இன்னும் பல்வேறு வடிவங்களில் பல்வேறு திருக்குறள் வெளியிட்டுள்ளார்கள்.

நாட்குறிப்பு

மக்கள் நாடோறும் ஒவ்வொரு திருக்குறளாகப் பயின்று விழுத்திணையொழுக்கமும் முழுத்துணை ஒற்றுமையும் பெற்று வாழ விரும்பினர். அங்ஙனமே நாட்குறிப்பு வெளியிட்டு வருகின்றனர். நான்கு ஆண்டுகளுள் ஆயிரத்துமுந்நூற்று முப்பது அருங்குறள்களும் நிறைவுறும். 1932, 1933-ஆம் ஆண்டுகளில் துவங்கிய அக்குறிக்கோள் 1934 முதல் இதுகாறும் திருக்குறள் நாட்குறிப்பு வெளிவந்துகொண்டிருக்கின்றது. அஃது உலகுக்குப் பெரும் பயன் விளைத்து வருகின்றது.

### வெளியீட்டறம்

1940-ஆம் ஆண்டு பண்டித நாவலர் வேங்கடசாமி நாட்டாரவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்றுத் தஞ்சாவூரில் தங்கியிருந்தார்கள். பாகனேரி திரு. மு. காசி விசுவநாதன் செட்டியாரவர்கள் ரூபா பதினாயிரம் வரைக் கழகத்தில் ஒப்புவித்து அத் தொகையைக்கொண்டு திருவாசக முதலிய உயர்ந்த நூல்களையும், சங்க நூல்களையும் அச்சிட்டுக் குறைந்த விலைக்கு விற்கவேண்டுமென நவின்றனர். அதுபோல் திருவாசகம், தாயுமானவர், பட்டினத்தார் முதலியன பதிப்பிக்கப் பட்டன. நாட்டாரவர்களைக் கொண்டு சிலப்பதிகாரம், மணிமேகலைப் புத்துரைகள் எழுதுவித்து வெளிவந்தன. மணிமேகலை இருபத்தாறு காதைகட்கு நாட்டாரவர்கள் தம்மருமைமகளார் வித்துவான் சிவ. பார்வதி அம்மையாரைக்கொண்டு பதவுரை எழுதச்செய்து தாம் விளக்கம் எழுதி முடித்தார்கள். எஞ்சிய நான்கு காதைகளுக்கும் உரை எழுதுமுன்னரே 1944-இல் இறையடி சேர்ந்தார்கள். அவைகட்குத் திரு. ஔவை, சு. துரைசாமிப் பிள்ளையவர்களைக்கொண்டு உரை எழுதி முற்றுவிக்கப்பட்டது கலித்தொகை நச்சினார்க்கினியர் உரைக்குக் கழகப்புலவர் இளவழகனாரைக்கொண்டு உரைவிளக்கம் எழுதுவித்து வெளியிடப்பட்டது. அகநானூறு நாட்டாரவர்கள் கரந்தைக் கவியரசு. ஆர். வேங்கடாசலம் பிள்ளையவர்கள் ஆகிய இருபெரும் சான்றோர்களும் எழுதியீந்த சிறந்த உரையுடன் வெளியிடப்பட்டது. இவைகள் அனைத்தும் இந்நாள் காறும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன.

### மலிவுப் பதிப்பு

1936-இல் சிவஞானபோதப் பேருரை (சிவஞானபாடியம்) யையும், திருக்குறள் பரிமேலழகர் உரையையும் சிறந்த குறிப்புக்களுடன் ஒன்றரை ரூபாவுக்கும் திருக்குறள்மூலம், திருவாசக மூலம், திருக்குறள் கா. சு. அவர்கள் பொழிப்புரை ஐயாயிரம் படிகள்வரை அச்சிட்டு மலிவாக விற்கப்பட்டதை அனைவரும் பாராட்டினர்.

### மாநாடுகள்

1939-ஆம் ஆண்டில் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் தலைமையில் பத்துப்பாட்டு மாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அம் மாநாட்டில் ஆண்பாற் புலவர் ஐவரும் பெண்பாற் புலவர் ஐவரும் முறையே பத்துப்பாட்டைப்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். அச் சொற்பொழிவுகளைச் செய்தவர்கள் எழுதித்தர இசைந்

தவர்கள் தாராமலும் சிலர் இசையாதவர்களுமாயிருந்தமையால் அவைகள் அச்சிட்டு வெளியிடும் வாய்ப்புப்பெற்றில. சங்க மருவிய நூற்கள் அனைத்திற்கும் மாநாடு கூட்டவேண்டுமென்றும் தலைவர் பேச்சாளர் கட்டுரைகளை முன்னதாகவே எழுதி வாங்கி அச்சிட வேண்டுமென்றும் வ. சு. அவர்கள் உறுதி செய்து கொண்டனர். அதன்படியே இறையருளால் செய்து நிறைவேற்றினர். அவை வருமாறு :

1940-இல் கலித்தொகை மாநாடும், குறுந்தொகை மாநாடும், அகநானூற்று மாநாடும் நடைபெற்றன. 1942-இல் நற்றிணை மாநாடும்; 1944-இல் புறநானூற்று மாநாடும் நடைபெற்றன. 1952-இல் பத்துப்பாட்டு மாநாடும், 1955-இல் பரிபாடல் மாநாடும், ஐங்குறுநூறு மாநாடும், பதிற்றுப்பத்து மாநாடும், 1956-இல் பதினெண் கீழ்க்கணக்கு மாநாடும் நடைபெற்றன. மாநாடுகளின் வாயிலாகத் தமிழக வரலாறு, அரசியலறிவு என்ற பொருள்பற்றி மாநாடுகள் நடத்தி இருபெரும் சொற்பொழிவு நூற்கள் வெளியிடப்பெற்றன. வ. சு. அவர்கள் எண்ணிய எண்ணம் இனிது நிறைவேறியது. மனநிறைவையும் தந்தது.

### அச்சகம்

1948 செப்டெம்பர்த் திங்களில் பழைய அச்சகம் ஒன்றை விலைக்கு வாங்கி 'அப்பர் அச்சகம்' எனப் பெயர்சூட்டி அப்போது சென்னை முதலமைச்சராகத் திகழ்ந்த உயர்திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களைக்கொண்டு சிறப்பாகத் திறப்பித்தனர். 1-7-1949 முதல் 'கழக விற்பனை நிலையமும்' 'அப்பர் அச்சகமும்' சென்னைப் பிராட்வே, 1/140, 2/140 எண்கள் உள்ள கட்டடங்களில் மாற்றப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### வ. தி. அவர்களின் வாராப்பிரிவு

28-4-1944-இல் வ. சு. அவர்களின் தமையனார் திருவாளர் திருவரங்கம் பிள்ளை அவர்கள் பாளையங்கோட்டையில் யாரும் எதிர்பாராத நிலைமையில் திடுமென நெஞ்சு நோயினால் இறையடி நீழல் சேர்ந்தனர். இக் குறிப்பு உயிரனைய உடன்பிறப்பாளராம் வ. சு. அவர்கட்கு அன்பின் பெருக்கு முன்புற உணர்த்தும் உண்மை முறையினை வருமாறு காண்க: சென்னையிலிருந்த வ. சு. அவர்கட்குச் சிலநாட்களுக்கு முன்பே உள்ளத்தடுமாற்றம் ஓவாது உறலாயிற்று. அதன்மேல் திடீரென 26-4-44 இரவு புறப்பட்டு மறுநாள் பாளையங்கோட்டை போய்ச் சேர்ந்தனர். அன்று மாலை அண்ணியாரின் மருத்துவத்துக்காக டோனாவூர் சென்ற தமையனார் அண்ணியாருடன் ஊர் திரும்பினர். இவர் தம் தமையனாரின் உடல்நிலை செம்மையாக இல்லாமை குறித்து

வருந்தினர். மருத்துவ வல்லாரைக்கொண்டு மருந்து கொடுப்பித்தனர். 28-4-44 இரவு ஒன்பது மணிக்கு நெஞ்சு வலி மிகுதிப்படவே ஆவி நீத்தனர். அந் நாள் கழகத்தலைவராக இருந்த திரு. பி. சிதம்பரம் பிள்ளையவர்கட்கும், சென்னைக் கிளை நிலையத்துக்கும் தந்திவழிச் செய்தியனுப்பினர். இவர் தம் அண்ணியாரும் அறுவை மருத்துவத்தினால் நலிவுற்றிருந்தனர். வ. தி. அவர்கட்கு அவர்கள் காலமானபோது 15 வயதுக்குக் கீழ்ப்பட்டு 1 வயது வரையுள்ளவர்களாய்ப் பெண்மக்கள் அறுவரும் ஆண்மக்கள் இருவரும் இருந்தனர். அவர்களை வளர்த்து ஆகவேண்டியவைகளைச் செய்யும் எல்லாப் பொறுப்புக்களையும் வ. சு. அவர்கள் திருவருட்டுணையால் ஏற்றுச் செவ்விதின் நிகழ்த்தி வருகின்றனர். அவர்கட்கும் பேரூக்கம் தந்து பெருந்துணையாக நிற்பது, திருவள்ளுவ நாயனார் அருளிய "குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம், மடிதற்றுத் தான்முந் துறும்" (கo௨ரு) என்னும் மாறில் மறைமொழியேயாம்

அண்ணியார் பிரிவு

திரு. வ. சு. அவர்களின் அருமை அண்ணியார், திருவரங்க நீலாம்பிகை அம்மையாரவர்களும் 1945-ஆம் ஆண்டு நவம்பர் ஐந்தாம் நாள் இறைவன் திருவடி நீழல் எய்தினர். காதலற் பிரிவைப் பொறுக்கலாற்றாது கண்ணனைய மக்களையும் பொருட்படுத்தாது எதிராண்டிலேயே ஆவி நீத்தமை 'மாதினியார் புகழனாருடன்' முன்னாளில் உடன்போயினமையை ஒருபுடையொப்பாக நினைவுறுத்தும்.

தாயார் பிரிவு

1952-ஆம் ஆண்டில் வ. சு. அவர்களின் அருமை அன்னையார் திருவாட்டி சுந்தரத்தம்மையார் இறைவன் திருவடி நீழல் எய்தினர். வ. சு அவர்களின் அண்ணியார் பிரிவுக்குப்பின் தமையனார் குடும்பத்தின் பொருட்டும் தம் அருமைத் தாயாரை ஓம்புதற்பொருட்டும் தம் குடும்பத்தைப் பாளையங்கோட்டையில் எட்டாண்டுவரை விட்டுவைத்தனர். 1953 சூன் திங்களில் குடும்பத்தைச் சென்னைக்கு அழைத்து வந்தனர். திரு. பிள்ளையவர்கள் கழகம் தொடங்கிய காலம் முதல் 1944-இல் தம் தமையனார் பிரிவுவரைச் சென்னைக் கிளைநிலைய முகவராகப் பணியாற்றிவந்தனர்.

இவர்கட்குத் தொடக்கச் சம்பளம் ரூபா முப்பத்தைந்தாக இருந்து 1927-ஆம் ஆண்டில் படிப்படியாக ரூபா எழுபதுக்கு உயர்ந்தது. அதுமுதல் 1943 வரை அதே சம்பளமே இவர்

றெடுகப் பெற்றுவந்தார். பிராவிடென்ட் பண்டோ, போனசோ 1940-ஆம் ஆண்டுவரை இவர் பெற்றதே இல்லை. இவர் கழகப் பணியினையே பெரிதாகக் கருதினரேயன்றித் தமது சம்பளத்தை யும் ஊதியத்தையும் பெரிதாக எண்ணவில்லை. இவர் 1945 செப்டெம்பர் 30-இல் கழக மேனேஜிங் டைரக்டராக அதுமுதல் பதினோர் ஆண்டுகளுக்கு அமர்த்தப்பட்டார். 1956 செப்டெம் பரில் பதினோர் ஆண்டுகள் கழியவே மீண்டும் ஐந்து ஆண்டு கட்கு 1956 புதிய கம்பெனிச் சட்டத்திற்கேற்ப மானேஜிங் டைரக்டராக அமர்த்தப்பட்டார்.

நடுகல்

1946-ஆம் ஆண்டு வ. சு. அவர்களின் தமையனார்க்கும் அண்ணியாருக்கும் பாளையங்கோட்டை பொருநையாற்றங்கரையி லுள்ள வெள்ளைக் கோயில் தோப்பில் நடுகல் நாட்டப்பட்டது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராக இருந்து விலகிய கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் உடல் நலம் குன்றியிருந்தமை தெரிந்து அவர்களைத் திருநெல்வேலிக் கழக நிலையத்துக்கு வரவழைத்தனர். வல்ல மருத்துவரைக் கொண்டு பெரும் பொருட் செலவில் மருந்து கொடுப்பித்தனர். முதற்கண் நோய் தீர்ந்து நலம் எய்துவதுபோல் காணப்பட்டுப் பின்பு நோய் முற்றி 1945-மேத் திங்களில் இறைவனடி சேர்ந்தனர். அவர் கட்கு 1947-இல் திருநெல்வேலிக் கூடலிலுள்ள திருநெல்வேலிப் பொருநையாற்றுப் பாலத்திற்கும், ஆற்றிலுள்ள தைப்பூச மண்ட பத்திற்கும் வழிகள் பிரியும் முச்சந்தியிலுள்ள நகராட்சிப் பூங்காவில் அமைச்சர் திருவாளர் எம். பக்தவத்சலம் அவர் களைக் கொண்டு சிறப்பாக நடுகல் நாட்டப்பெற்றது.

இரங்கற் கூட்டம்

திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள், ஞானியா ரடிகளவர்கள், நாவலர். பண்டித வேங்கடசாமி நாட்டாரவர்கள், கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், மறைமலையடிகள் முதலி யோர்க்குச் சென்னையில் இரங்கற் கூட்டங்கள் நடத்தினர்.

அம்மை நோய்

1951 ஏப்பிரல் திங்கள் இறுதியில் சென்னைத் - தமிழ் வளர்ச்சிக் கழகம் தன் நான்காவது விழாவை யாழ்ப்பாண நகரத்திற் கொண்டாடிற்று. வ. சு. அவர்கள் அடுத்த ஆண்டில் ஐந்தாவதாண்டு விழாவைத் திருநெல்வேலியில் நிகழ்த்துவது என்னும் அழைப்பினை அவ் விழாக் கூட்டத்தில் அறிவிப்பதன் பொருட்டு அவ் விழாவிற் கலந்து கொண்டனர். முதல் நாள்

விழாவன்றே திரு. பிள்ளையவர்கட்கு உடல்நிலை சரியாகவில்லை. இரண்டாம் நாளன்று அம்மை நோயெனப் புலனாயிற்று. விழா முடிந்த மறுநாள் (2-5-51) யாழ்ப்பாணத்திலுள்ள தொத்து நோய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். நோய் மிகவும் கடுமையாக இருந்தமையால் சூன் திங்கள் 11-ஆம் நாள்வரை ஆங்குத் தங்கி நலம்பெற்று ஊர்திரும்பினர். பின்னர்த் திருக் குற்றாலத்தில் சில திங்கள் தங்கி ஓய்வு பெற்று முழுநலமுற்றனர்.

மெய்கண்டார் வகுப்பு

1952 மே திங்களில் திருநெல்வேலித் தருமபுர மடத்தில் நெல்லை அருணகிரி இசைக் கழகச் சார்பில் சாத்தூர் வழக்கறிஞர் திருவாளர். டி. எஸ். கந்தசாமி முதலியாரவர்களை ஆசிரியராகக் கொண்டு இருபத்தொரு நாட்கள் சிவஞானபோத வகுப்பு உண்டி உறையுளோடு உடனுரை ஆய்வோடும் மிகவும் சிறப் பாக நடத்தினர். நாற்பதின்மர்க்கு மேற்பட்ட தமிழ்ப் புலவர் களும் மெய்யன்பர்களும் வகுப்பிற் கலந்து சித்தாந்தவுணர்வு பெருகப் பெற்றனர்.

இந்தி அறப்போர்

1937-இல் ராஜாஜி அவர்கள் சென்னை முதல் அமைச்சராக வருவதற்குமுன் தேர்தல் பேச்சுக்களில் தாம் அமைச்சவை அமைக்கும்படி ஏற்படுமானால் இந்தியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்குவதாகக் குறிப்பிட்டார்கள். அது தெரிந்து நம் வ சு அவர்கள் இந்தியால் தமிழ் கெடுமா? என்ற தலைப் பமைத்து ஒரு வினாத்தாள் அச்சிட்டு அறிஞர் சிலர்க்கு அனுப்பி அவர்தம் கருத்துக்களை எழுதி வாங்கினார்கள். அவருட் சிறந் தோராவார்: யோகி சுத்தானந்த பாரதியார், சி. எம். இராமச் சந்திரஞ் செட்டியார், பி.ஏ.,பி.எல்., எஸ். நடராசபிள்ளை பி.ஏ., எல்.டி, கரூர் ஈழத்துச் சிவானந்த அடிகள் முதலியோராவர். இவர்கள்தம் அருங்கருத்து வருமாறு: இந்தி கட்டாயப் பாட மாக வருமானால் தமிழ்மொழிக்குக் கேடு உண்டாம் என்பதே.

வந்த கருத்துக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே 5000-ம் படிகள் அச்சிட்டுத் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கழகங்கட்கும், ஆட்சியினர்க்கும் அனுப்பி வைத்தனர். அவ் வெளியீடுகளுக்குரிய செலவினைத் திருவாளர். மு. காசிவிசுவ நாதன் செட்டியாரவர்கள் வலியவந்து மனம் உவந்து கொடுத் தனர். பின்பு ராஜாஜி முதல் அமைச்சராக வந்ததும் இந்தியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்திவிட்டனர். அதனை எதிர்த்துத் தமிழ்நாடெங்கணும் கண்டனக் கூட்டங்களும் மாநாடுகளும் நிகழ்ந்தன. அறப்போர் தொடங்கிற்று; ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் விழுச்சிறைப்பட்டனர்.

அப்போது வ. சு. அவர்கள் முடியுடை வேந்தர் மூவரின் அடையாளமாகிய வில், புலி, கயல் உருவங்கள் தீட்டிய தமிழ்க் கொடியை அமைத்தனர். அதனைச் சிறிதும் பெரிதுமாகத் துணியில் தீட்டிக் கழகங்கட்கும் மாநாடுகளுக்கும் வழங்கினர். இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று அட்டைகள் பல அச்சிட்டுப் பரப்பினர். 'தமிழுக்கு ஜே' என்று எழுப்பிய குரலை, 'தமிழ் வாழ்க' என்று மாற்றியொலிக்க நேர்ந்தது வ. சு. அவர்கள் பரப்பிய வெளியீடுகளும் அட்டைகளுமேயாம்.

இந்தி பொதுமொழியா? என்ற தலைப்பில் பல்லாவரம் மறைமலை அடிகளாரை நூல் எழுதும்படி திரு. மு. காசி விசுவநாதன் செட்டியாரவர்கள் தூண்டினர். அடிகளார் இந்திய மொழிகளைப் பற்றிய நூல்களனைத்தையும் நன்காராய்ந்து இந்திக்குப் பொதுமொழியாதற்குரிய தகுதி ஒருகாலத்தும் கிடையாதென்று தம் நூலில் அறுதியிட்டுக் கூறியுள்ளார். அதனை ஈழத்துச் சிவானந்த அடிகள 15,000 படிகள் வரை அச்சிட்டுத் திரு. வ. சு. அவர்கள் துணையுடன் தமிழ்நாடெங்கணும் பரப்பினர். அங்ஙனம் பரப்பி இந்தி எதிர்ப்பினை நன்குக வளர்த்துவிட்டனர். அப் படிகட்குரிய தாள் செலவினைத் திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

நாவலர் டாக்டர். சோமசுந்தர பாரதியாரவர்கள், எம். ஏ., பி.எல்., இந்தி எதிர்ப்பு மாநாடுகளிலும் கூட்டங்களிலும் கலந்து இந்தியின் கட்டாயப் பாடத்தால் விளையும் தீங்கினைக் காரண காரியத்துடன் விளக்கிக் காட்டி எதிர்த்துப் பேசினர். பேசியதோடு ராஜாஜி அவர்கட்கு வெளிப்படைக் கடிதம் ஒன்று ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதித் திரு. வ. சு அவர்கள் வழி 5,000 படிகள் அச்சிட்டுப் பரப்புமாறு செய்தனர். வெளிப்படைக் கடிதத்திற்குரிய அச்சுக்கூலிச் செலவினைப் பெருந் திருவாளர் கருமுத்து தியாகராயச் செட்டியாரவர்கள் ஏற்றுக் கொண்டனர். இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்குத் திரு. வ. சு. அவர்கள் ஓவா உழைப்புடன் பெருந்துணை புரிந்தனர். மேலும் நம் வ. சு. அவர்கள் தமிழ்க்கொடிப் புடைவைகளும், மேலாடைகளும், துண்டுகளும், விரிப்புகளும், துணிப் பைகளும் அழகுற அமைத்துத் தமிழ்நாடெங்கணும் பரப்பித் தமிழ் உணர்ச்சியினைத் தாய்மாருள்ளிட்ட அனைவர்களுக்கும் தட்டி எழுப்பினர்.

**தமிழ் உணர்ச்சி மாநாடு**

1943 அக்டோபர்த் திங்களில் மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரவர்கள் தலைமையில் திரு. பிள்ளையவர்களின் முயற்சியினால் சென்னைத் தொண்டை

மண்டல உயர்நிலைப் பள்ளியில் 'முதலாவது தமிழ் உணர்ச்சி மாநாடு' மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அம் மாநாட்டின்கண் ராவ் சாகேப் கே. கோதண்டபாணிப்பிள்ளை அவர்கள், பண்டித புலவர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் முதலியோர் உணர்ச்சிமிக்க கருத்துக்களை எடுத்து விளக்கினார்கள்.

அதே ஆண்டு டிசம்பர்த் திங்களில் சேலம் நகராண்மைக் கல்லூரியில் அக் கல்லூரி முதல்வர் திரு. அ. இராமசாமிக் கவுண்டர், எம் ஏ., அவர்கள் தலைமையில் இரண்டாவது தமிழ் உணர்ச்சி மாநாடு நடைபெற்றது திரு. பிள்ளையவர்கள் அம் மாநாட்டுக்குச் சென்றிருந்தனர். அங்கு நம் பிள்ளையவர்கள் தமிழ்மக்களாகிய நாம் நம் நடைமுறை வாழ்க்கைகள் அனைத்தும் யாங்கணும் தூய தமிழிலேயே இருத்தல் வேண்டுமென உணர்ச்சியும், எழுச்சியும் ஒருங்கமையப் பேசினார்கள். அனைவர்களும் வரவேற்று நனிமிகப் பாராட்டினர். அதன் சுருக்கம்:

" தமிழ்மக்கள் பெயர்கள் அனைத்தும் தூய தமிழாகவிருத்தல், தமிழர்வாழ் இல்லங்களுக்குத் தமிழ்ப் பெயரமைத்தல், தமிழர்கள் தூய தமிழிலேயே யாண்டும் எழுதுதலும் பேசுதலும் புரிதல், பிறமொழிகளால் மொழிபெயர்க்கப்பட்டும் திரிபுற்றும் வழங்கப்பட்டு வரும் ஊர்ப் பெயர்கள், திருக்கோயில்களிலுள்ள இறைவன் இறைவியர் பெயர்கள் பண்டுபோல் முற்றும் தூயதமிழில் மாற்றியமைத்தல், திருக்கோவில்களில் தூய தமிழிலேயே அருச்சனைபுரிதல், வாணிப நிலையங்களின் பெயர்களும் தொழில் நிலையங்களின் பெயர்களும் தூய தமிழிலேயே அமைத்தல், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களும் தமிழிலேயே சொல்லிக்கொடுத்தல், தமிழரில்லங்களில் நடைபெறும் சடங்குகள் அனைத்தும் தமிழிலேயே நடைபெறுதல், இசையரங்குகளிலெல்லாம் தமிழ்ப் பாட்டுக்களையே பாடுதல், ஆட்சிமுறைகளனைத்தும் தூய தமிழிலேயே நடத்தல் வேண்டு"மென்பதேயாம்.

பேச்சு வழக்கில் அடுத்தடுத்து மிகுதியாகப் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களை நீக்கும்பொருட்டு எடுத்துக் காட்டாக நூறு பிறமொழிச் சொற்களும் அவற்றிற்கு நேரான தூய தமிழ்ச் சொற்களும் பொறித்துத் துண்டு வெளியீடுகள் அச்சிட்டுத் திரு. பிள்ளையவர்களால் பரப்பப்பட்டன.

## ஆணித்தர விடை

மேற்கூறிய வ. சு. அவர்களின் துண்டு வெளியீடுகளைக் கண்ணுற்றனர் டாக்டர் சி. பி. இராமசாமி ஐயரவர்கள். அவர்கள் அந் நாளில் திருவனந்தபுரம் திவானாக இருந்தனர். இதனைக்

கண்டு பொருமனத்தராய்த் தமிழ் எங்ஙனம் தனித்தியங்கு மெனா எள்ளிநகையாடி இந்துத் தாளில் எழுதினர். அங்ஙனம் அவர் எழுதத் துணிதற்கு மேற்கொண்ட தப்பான அடிப்படை ஒன்றேயாம். அஃதென்னவெனில் 'ஆணி' என்னும் சொல்லே யாம். அச் சொல் ரிக்வேதத்தின்கண் காணப்படுவது கொண்டு அஃது ஆரியச் சொல்லேயென்றும் அதனைத் தமிழர் கடன் வாங்கினரெனவும் ஆய்ந்தோய்ந்து பாராது பிழைபட்ட முடிபினை விழைந்ததேயாம். அவர்களுக்கு அஃது ஒரு சிறிதும் பொருந்தாதென்பதனைக் காரணத்துடன் எடுத்துக்காட்டி 'ஆணித்தரமான விடை' என்று தலைப்பிட்டு மறுப்புரையொன்று நம் பிள்ளையவர்கள் அச்சிட்டு அனுப்பினர்.

### மறைமலையடிகளாரின் மாறில்பிரிவு

1950 செப்டெம்பர்த் திங்கள் தொடக்கத்தில் பல்லாவரம் மறைமலையடிகளார் கடுமையான மீளா நோயினுக்கு ஆளாய்ப் படுத்த படுக்கையாக இருப்பது நம் பிள்ளையவர்களுக்குத் தெரிய வந்தது. மிக்க கவலை கூர்ந்து பார்த்து வரப்போயினர். நிலைமை கண்டு கலங்கினர். அடிகளார்க்கு முன் நீங்காநோய் தீர்த்து அடிகளாரால் நன்கு மதிக்கப்பட்ட திறலினரும், பெயர்போன மருத்துவரும், பிள்ளையவர்களுக்கு நண்பருமான பண்டிட் ஆனந்தம் அவர்களைக் கொண்டு தக்க மருந்து கொடுப்பித்தனர். அடுத்தடுத்துச் சென்று வேண்டுவ வேண்டியாங்குச் செய்து போந்தனர்.

அடிகளார் தமக்குப்பின் தாம் அரும்பாடுபட்டுத் தொகுத்து வைத்துள்ள தம் நூல்நிலையத்தைத் தம் பெயரால் பொதுமக்கட்குப் பயனுறும்படி கழகவழி நடத்த விரும்பினால் கழகத்துக்கு அதனைக் கொடுத்துவிடுவதாகவும், தாம் எழுதி வெளியிட்டிருக்கும் விலைவரம்பில்லா நிலைபேறான உயர்தனிச் செம்மொழி நூல்களைக் கழகவழி வாரமுறையில் அச்சிட்டுத் தம்முடைய குடும்பத்தினர்க்கு அதனால் வரும் ஊதியத்தைக் கொடுத்தல் வேண்டுமென்றும் கூறினார்கள். அடிகளாரின் விருப்பப்படியே செப்டெம்பர் ஒன்பதாம் நாள் விருப்ப ஆவணம் (Will) எழுதிக் கைச்சாத்திடப்பட்டது.

செப்டெம்பர் 15-ஆம் நாள் அடிகளார் இறைவன் திருவடி நீழலை எய்தினர். திரு. பிள்ளையவர்கள் அடிகளாரைப் போய்ப் பார்த்தது முதல் நோய்க்குச் செய்த மருத்துவச் செலவும், அடிகள் இறையடி சேர்ந்தபின் செய்த இறப்புச் சடங்குச் செலவும் திரு. பிள்ளையவர்கள் கழகப் பொறுப்பிலே நன்கு செய்தனர். அடிகளார் திருமேனி நன்காட்டுக்கு எய்திய

ஊர்வலமும் சிறப்பும் ஆற்றுவெள்ளம் போன்று உடன்சென்ற அறிஞர் கூட்டத்திடையே கடவுட் பெருவிழாப் போன்று காணப்பட்டது.

## ஆவண நடைமுறை

அடிகளார் விருப்ப ஆவணத்தில் குறிப்பட்ட திரு. சுப்பையா பிள்ளையவர்கள் உட்படச் செயற்குழு உறுப்பினர் எழுவர். இவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆவணத்தில் கண்ட குறிப்புகளைச் செயற்படுத்துவதற்கு ஆணை தரல் வேண்டி விண்ணப்பித்தனர். அடிகளாரின் ஆண்மக்கள் நால்வருள் மூவரும், பெண்மகள் ஒருத்தியும் அடிகளார் நல்ல நினைவுடன் விருப்ப ஆவணம் எழுதவில்லையென்று கூறிச் செயற்குழுவினர் சார்பாக ஆணைகொடுத்தல் கூடாதென்று எதிர்வழக்காடினர்.

1953 ஜூலைத் திங்கள் இறுதியில் உயர்நீதி மன்ற நடுவர் வழக்கினை உசாவி நன்காய்ந்து கழகச் செயற்குழுவினர் சார்பாகத் தீர்ப்புக்கூறி விருப்ப ஆவணத் தகுதியினை உறுதிப்படுத்தினர். பின்பு அடிகளாரின் ஆண்மக்கள் இருவர் மட்டும் அத் தீர்ப்பினை எதிர்த்து மேன் முறையீடென்னும் அப்பீல் செய்தனர். அம் மேன் முறையீட்டு வழக்கு 1957 ஏப்பிரல் திங்களில் உசாவுதலாகிய விசாரணைக்கு வந்தது. ஏப்பிரல் 30-ஆம் நாள முன் செய்யப்பட்ட தீர்ப்பு நடுநிலைவழா நேர்மையதென்று முடிவு செய்யப்பட்டது. அங்ஙனம் செய்யப்பட்டமையாலன்றோ அடிகளார் திருப்பெயர் மங்காது ஆராய்ச்சி நூல்நிலையம் என்னும் பெயரான் நிலவுவதையும், அடிகளார் நூற்களெல்லாம் அழிந்துபடாமல் வெளிவருகின்றமையும் எண்ணி எண்ணித் தமிழகம் பெருமகிழ்வு கொள்வதாயிற்று.

## புதிய கட்டடம் வாங்கல்

1957 ஏப்பிரல் 25-ஆம் நாள் மறைமலையடிகளார் ஆராய்ச்சி நூல் நிலையத்தையும், அடிகளார் திருப்பெயரால் தமிழ்க் கல்லூரி ஒன்றையும் நிறுவிச் செவ்விதாக நாளும் நடத்துவதன் பொருட்டுச் சென்னை இலிங்கிச் செட்டித் தெருவில் 105-ஆம் எண் கட்டடம் விலைக்கு வாங்கப்பட்டது. திருவருட்பா ஆசிரியர் இராமலிங்க அடிகளார் குறித்த கட்டடத்தில் அமர்ந்து பன்னாட்கள் சொற்பொழிவு ஆற்றியருளினார்கள் என்று அனைவராலும் பெருவழக்காகக் கூறப்படுகின்றது.

இராமலிங்க அடிகளாரின் கொள்கைகளைப் பரப்பவே ஐம்பதாண்டுகட்கு முன் 'பொதுநிலைக் கழகம்' (சமரச சன்மார்க்க சங்கம்) ஒன்றைப் பல்லாவரத்தின்கண் மறைமலையடிகளார் நிறுவினர். அத் தொடர்புசார் அடிகளாரின் நூல்நிலையம்

இராமலிங்க அடிகளார் வீற்றிருந்த தவஞ்சார் கட்டடத்திற்கு வந்து பொருந்துமாறு அமைந்தது அம்பலவாணர் திருவருட் செயலேயாம் என்பதற்கு எட்டுணையும் ஐயமின்றென்க. அடிக ளாரின் விருப்ப ஆவணத்திற் கண்டபடி அடிகளாருடைய நூற்களைத் திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் கழகவழி ஒன்றன் பின் ஒன்றாக அச்சிட்டு வெளியிட்டு வருகின்றார்கள்.

விடா மறுப்பு

1921-ஆம் ஆண்டு முதல் திருவாளர், கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் சென்னைச் சட்டக் கல்லூரிப் பேராசிரியராகப் பணிபுரிந்து வந்தனர். கழகம் முதன் முதல் எழுதிப் பதித்த தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியத்திற்குக் கா.சு. அவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஓர் அரிய பெரிய விரிந்த ஆராய்ச்சி முன்னுரை எழுதி உதவினார்கள். செந்தமிழ்ச் செல்வியிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வந்தார்கள். 'திரு நான்மறை விளக்கம்' என்ற தலைப்பில் தொடர்பாகக் கட்டுரைகள் எழுதி வந்தார்கள். அவர்களின் அரும்பெருங் கருத்துக்களை வாளா மறுத்துப் பேர்கொண்ட பார்ப்பன அறிஞர் சிலர் இந்துத் தாளில் எழுதி வெளியிட்டனர். அம் மறுப்புக்குத் திரு. கா. சு. பிள்ளையவர்கள் தக்கவாறு காரணங்காட்டிக் கண்டித்து எதிர்மறுப்பு எழுதினர். மீண்டும் எதிர்ப்பக்கத்தார் மறுத்தெழுதினர். இம் முறையாக மாறிமாறி ஏறக்குறைய நாலைந்து திங்கள் தொடர்பாக நடந்துகொண்டிருந்தன. ஈற்றில் கா. சு. பிள்ளையவர்கள் மறுப்புக்கள் அனைத்திற்கும் விரிவான விடை ஒன்று எழுதி இந்துத் தாளுக்கு அனுப்பினார்கள். அதன் ஆசிரியர் நடுநிலை பிறழ்ந்தாராய் அதனை வெளியிட விரும்பவில்லை. அதனால் அதனை ஜஸ்டிஸ் தாளில் வெளியிடவேண்டியதாயிற்று.

அக் காலத்தில் திரு. பிள்ளையவர்கள் கழக அலுவல் முடிந்ததும் திரு. கா. சு. அவர்கள் வீட்டிற்குச் செல்லுவார்கள். அவர்கள் 'அப்பர் வரலாறும் நூலாராய்ச்சியும்' என்னும் நூலைச் சொல்லி எழுதும்படி செய்தார்கள். அதுபோலவே திருஞான சம்பந்தர் வரலாறு, சுந்தரர் வரலாறு, சேக்கிழார் வரலாறு முதலியவற்றைச் சொல்லி எழுதும்படி செய்தனர். மேற்கண்ட நூற்களை வார முறையில் கழகம் அச்சிட்டது. திருவாளர் கா. சு. அவர்கட்குத் தாமே நூலைக் கையால் எழுதுவதைவிடச் சொல்லி எழுதுவிப்பதே எளிதாகும்.

1920-இல் திருவாளர் கா. சு. பிள்ளையவர்கள் 'தாகூர் சட்ட விரிவுரையாளர்' என்ற பட்டத்துடன் ரூபா 10,000 (பதினாயிரம்) பரிசும் பெற்றார்கள். 'குற்றங்களின் நெறிமுறைகள்' (Princi-

ples of Criminology) என்ற நூலுக்கே அப் பரிசும் பட்டமும் அளித்தனர். அந் நூலையும் 'இந்தியன் பீனல் கோடு' பற்றிய (Lectures on the Indian Penal code) சொற்பொழிவு நூலையும் சிவகாமி விலாச அச்சுக்கூடத்தில் திரு. மு. கோவிந்தராச முதலியார் அழகாக அச்சிட்டுத் தந்தனர். அவ்விருபெரு நூற்களும் தூத்துக்குடி வழக்கறிஞர் திரு. இ. வெண்ணிமாலைப்பிள்ளையவர்களோடு, திரு. சுப்பையா பிள்ளையவர்களும் சேர்ந்து பிழையில்லாமல் செவ்விய முறையில் வெளிவருதற்கு உதவி செய்தனர்.

### சமய வெளியீடுகள்

1953-ஆம் ஆண்டு இறுதியில் சமய உணர்ச்சியைப் பரப்புவதற்காக மிகவும் கவர்ச்சியான முறையில் ஓரணா வெளியீடுகள் பல அச்சிட்டு வெளியிட்டனர். அந்நூற்கள் திருவிளக்கு வழிபாடு முதல் திருமால் வழிபாடு ஈறுகப் பல நூற்கள் வெளிவந்துள்ளன. அவற்றிற்கு வேண்டுவன கழகப் புலவர்கள் திரு. இராமசாமிப்பிள்ளை, இராமநாதபிள்ளை ஆகிய இருவர்களையும் கொண்டு எழுதுவிக்கப்பட்டன.

திருக்கோவில் அருச்சனைகள் செந்தமிழ்த் திருமாமறை வழிச் செய்யப்பட வேண்டுமென்னும் கிளர்ச்சியினைப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே திரு. வ. சு. அவர்கள் தோற்றுவித்தனர். அதன் காரணமாகத் திருநெல்வேலி மாவட்டங்களில் 'சிவ புராணம்' ஓதி வழிபடலாயினர். அக் கிளர்ச்சி சிறிது பரவுவது கண்ட பிள்ளையவர்கள் முன்னுணர்வோடு நூல் இல்லையே என்று குறை சொல்லாதிருத்தற்பொருட்டும் குறிக்கோள் முட்டின்றி நிகழ்தற்பொருட்டும் மலர்வழிபாட்டு வரிசை என்னும் நூல்கள் ஆறனுள் திருநாவுக்கரசுநாயனார் அருளிய போற்றித் திருத்தாண்டகம் ஒன்று நீங்க ஏனைய ஐந்தினையும் அந் நாள் கழகப் புலவராயிருந்த செல்லூர்க்கிழார் திரு. செ. இராமசாமிப் பிள்ளையவர்களைக் கொண்டு எழுதுவித்து, தணிகைமணி திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்களைக்கொண்டு செப்பம் செய்வித்து அழகிய முறையில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

திருவாளர் தாசில் எம். வி. நெல்லையப்ப பிள்ளை (பி. ஏ.) அவர்கள் கழகத் துவக்கமுதல் கழகத் தலைவராக 1938-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து திகழ்ந்து செவ்விதாகப் பணியாற்றியுள்ளார்கள். அவர்கள் அரசியற்றுறையில் வட்ட (தாலுகா) முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தனர். அதனால் கழகப்பணிகளையும் அறமுறை குன்றாது திறமுறச் செய்யும் செம்மலராய்த் திகழ்ந்தனர். மேலும் செந்தமிழ்ப்பற்றும்

சிவநெறி அன்பும் நிரம்பவுடையவர். ஒழுக்கம் குன்றா விழுமியர். கனவினும் நனவினும் கழகப்பணியே கண்ணும் திண்ணியர் புலவர்ப் போற்றும் நலமார் புலமையர். உமாபதி சிவம் அருள் முறைத் திரட்டென்னும் சித்தாந்த நுணுக்கம் முழுமையும் நிறைந்த விலைவரம்பில்லாத் தலைமணி நூற்கு ஓர் அரிய விளக்க வுரையொன்று வரைந்துள்ளார்கள். கந்தரனுபூதிக்கும் ஓர் உரை எழுதியுள்ளார்கள். அவை கழகவழி வெளிவந்தன.

திரு. பெருநாவலர் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் கழகத் துவக்கமுதல் சில ஆண்டுகள் கழகச் செயற்குழு உறுப் பினருள் ஒருவராகத் திகழ்ந்து தொண்டாற்றினர். நீதிசாரம், ஆசாரக்கோவை முதலிய பல நூற்களுக்கு உரை எழுதியுள்ளனர் அவை கழகப் பதிப்பாக வெளிவந்துள்ளன. இப்பொழுது 1950-ஆம் ஆண்டுமுதல் திருநெல்வேலிக்கண்ணுள்ள தலைமை நிலையத்துத் திகழும் "சிவஞான முனிவர் நூல்நிலைய" நூலக ராகவும், புலவர் வகுப்பு வித்துவான் வகுப்புகளுக்குரிய நுழைவு, நடுநிலை மாணவர்களுக்குச் செவ்விய முறையில் எல்லாப் பாடங் களும் கற்பிக்கும் ஆசிரியராகவும் கழகப்பணி புரிந்து வருகின்றார் கள்.

திருவாளர் வித்துவான் ந. சேதுரகுநாதன் அவர்கள் பெரும் புலவர்; நுண்ணிய ஆராய்ச்சித் திறலினர்; அளவிலாத் தமிழ் ஆர்வத்தர்; உளங்கொளவுரைக்கும் வளஞ்சார் உரையினர்; பேச்சு வன்மையர். கழகத் தொடர்பினர். இவர்கள் எழுதித் தந்துள்ள முத்தொள்ளாயிர வுரையும், முக்கூடற் பள்ளுரையும் கழகவழி வெளிவந்துள்ளன.

வித்துவான் திருக்குறள்மணி அ. க. நவநீதகிருட்டிண பிள்ளையவர்கள் செந்தமிழ்ப் புலமை நிரம்பிய சீர்மையர். கூர்த்த மதியினர். மக்கள் மனத்தை எளிதிற் கவரத்தக்க முறையில் வரிப்பாட்டு (இசைப்பாட்டு) கள் பாடும் வல்லுநர். திட்பநுட்பப் பேச்சாளர். அவர்தம் வாயிலாகக் கழகத்தில் சில நூற்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில வருமாறு: வள்ளுவர் சொல்லமுதம் 1, 2, 3 புத்தகங்கள்; காவியஞ் செய்த மூவர், தமிழ் வளர்த்த கதை, திருவள்ளுவர் கதை, ஒளவையார் கதை, கண்ணகி கதை முதலியன. இக் கதைகள் அனைத்தும் வில்லுப் பாட்டு வடிவில் அமைந்தன.

பாட நூல்கள்

கழக வளர்ச்சியும் செந்தமிழ் வளர்ச்சியும் பள்ளிப்பாட நூல்களை வெளியிடும் வாணிகத்தாலேயாம் என்னும் நன்னோக் கத்தைத் திரு. சிவசைலம் பிள்ளை, எம்.ஏ., எல்.டி. அவர்கள் அறிவித்து முதல் வகுப்பிற்குரிய முதல் தமிழ்ப்பாடத்தை

அச்சிடும்படி எழுதித் தந்தனர். அதன்பின் இரண்டாவது மூன்றாவது வகுப்பிற்குரிய தமிழ்ப்பாட நூற்களும் எழுதித் தந்தனர்.

நாலு ஐந்தாம் வகுப்பிற்குரிய பாடங்களையும் ஆறு ஏழு எட்டாம் வகுப்புகளுக்குரிய பாடங்களையும் சேலை. சகதேவ முதலியாரவர்கள் எழுதியிருந்தனர். புலவர் திருவாளர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் நாலு ஐந்தாம் வகுப்புகட்கு இலக்கண வினாவிடையும், ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகட்குரிய இளைஞர் தமிழிலக்கணமும் எழுதித் தந்தனர்.

திருவாளர் க. ப. சந்தோஷம் அவர்கள் அரசாளப்பிறந்த மகன், இளஞ்சேய்க்கொல்லி முதலிய சில துணைப்பாட நூல் களும்; காழி சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள், வித்துவான் மு. இராசாக்கண்ணனார், டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் மு. வரதராசனார், என். கே. வேலன், கா. அப்பாத் துரைப் பிள்ளை, புலவர் அரசு, வித்துவான் அ. க. நவநீத கிருட்டிண பிள்ளை, எஸ். நடராச பிள்ளை, கணபதிப் பிள்ளை, எம். ஆர். சந்திரசேகரன் முதலியோர் பள்ளிகட்கான தமிழ்ப் பாட நூல்கள் துணைப்பாட நூல்களும், கணக்கு நூல்களும் எழுதியுள்ளனர். இப்பாட நூற்களை வெளியிட்டமையானும் கழகம் வளர்ச்சியுற்றதென்பது குறிப்பிடத்தக்கது. திரு. வ. சு. பிள்ளையவர்கள் ஆண்டுதோறும் தளரா ஊக்கத்துடன் கழக ஆக்கம் ஒன்றே கருதிப் பாடநூற்களின்பொருட்டு அடுத் தடுத்து வெளியூர் சென்றுவருவது வழக்கம்.

திருவாளர் காலஞ்சென்ற சுப்பராயலு நாயுடவர்கள் மிக்க திறலினர். தக்கார் புலவரையும் தம்வழிப்படுத்தும் தன்மையர். பாடநூற்களின் பொருட்டு வெளியூர் சென்று வேண்டுவபுரியும் விழுமியர். ஓவா உழைப்பினர். 1931—44 வரை கழகத் தலைமை எழுத்தாளராகப் பணிபுரிந்தனர். 1945—49 வரை முகவராகப் பணிபுரிந்தனர். அவர்தம் பேருழைப்பும் கழக வளர்ச்சிக்குப் பெருந்துணையாகவிருந்தது. இப்போது அவர்தம் மகன் அரங்கபாசியம் அச்சகத்தில் அலுவல்பார்க்கின்றனன்.

திரு. எஸ். ஆர். பக்தவத்சலம் என்பவர் 1949-ஆம் ஆண்டு கழகப்புலவர் குழுவில் ஒருவராகச் சேர்ந்து ஒப்புப்பார்த்தல், கதை, கட்டுரை, நாடக நூல்களை ஒழுங்குபடுத்தல் முதலிய பணிகளைச் செவ்வையுறச் செய்தலோடு தாமும் 'உயிர்கள் உலகம், ஈசாப் கதைகள், தெனாலிராமன் கதைகள்' முதலிய நூல்களும் எழுதிக் கழகப் பணிகளைச் சின்னாட்களுக்குமுன்

வரை புரிந்து வந்தனர். இவர் அண்மையில் திடுமென இறையடி சேர்ந்தமை பெரிதும் வருந்துதற்குரியது.

திருவாளர் பெருமழைப்புலவர், பொ. வே. சோமசுந்தரனார் அவர்கள் 1952-இல் கழகத்தொடர்பு கொண்டனர். இப் பெருந் தகையார் ஆன்ற புலமையும் அறிவொழுக்கமும் நுட்ப ஆய்வும் மிக்கவர். இவர்கள் குறுந்தொகையுரையும், பத்துப்பாட்டு முழு வுரையும், பெருங்கதை உரைநடையும், புறப்பொருள் வெண்பா மாலை உரை, பரிபாடலுரை, செங்கோல் (நாடகம்), பண்டித மணி முதலிய பிறவும் செம்மையுற எழுதித்தந்து கழகவழி வெளிவந்துள்ளன. இன்னும் சில நூற்களுக்கு உரை எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

திரு. பண்டித ஞா. தேவநேயப் பாவாணரவர்கள் பெரும் புலவர், மொழிநூல் வல்லார், இலக்கண நுண்ணறிஞர். அவர்கள் கழகத்துக்குப் பல்வேறு நூற்பணிகள் ஆற்றியுள்ளார்கள். தொல் காப்பியம் எழுத்ததிகாரப் பதிப்பில் பல சிறந்த ஆராய்ச்சிகள் எழுதிச் சேர்த்துள்ளார்கள். அவ்வாராய்ச்சி நம் தமிழின் தொன்மை மேன்மையினையும், தனித்தியங்கும் ஆற்றலினையும், தூய்மையினையும் நடுநிலை வழாது எவரும் மறுக்கவொண்ணாத முறையில் மலைவிளக்காய்த் திகழ்கின்றது. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், முதல் தாய்மொழி, கட்டுரை வரைவியல், திரவிடத்தாய், தமிழ்நாட்டு விளையாட்டுக்கள், உயர்தரக்கட்டுரை இலக்கணம் முதலியன எழுதித் தந்து கழகவழி வெளி வந்துள்ளன.

திருவாளர் தணிகைமணி ராவ்பகதூர், வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் (எம் ஏ.,)ன் அரும்பெருந்தொடர்பு ஏற்பட்டது. ஏற்பட்ட வாய்ப்பும் தமிழாக்கக்கால்கோளமைப்பாக நேர்ந்தமை பெரிதும் வியத்தற்கொன்றாகும். 'முதல் தமிழ் உணர்ச்சி மாநாடு' நிகழும்போது அவர்கள் தொடர்பு ஏற்பட்டது. அவர் கள் உண்மையாகவே தமிழர்கள் தமிழுணர்ச்சியும் ஆர்வமும் கொள்ளுதலே தக்கதென்றும் நாமும் அங்ஙனம் ஏன் கொள்ளு தல் ஆகாதென்றும் எண்ணி ஈடுபட்டனர்.

"தேவார ஒளிநெறி" என்னும் பெயருடன் திருஞான சம்பந்தப் பெருமானின் திருத்தேவாரச் சொற்பொருள் நுணுக்க ஆராய்ச்சியினையும், அத் திருமுறைக்கண் காணப்படும் சொற் களின் தொகுப்பும், அங்கங்கே வரும் குறிப்பும் அமைய மூன்று நூற்களில் இரண்டு நூற்கள் கழகவழியாக வெளிவந்துள்ளன. ஒன்று அவர்களே முன் அச்சிட்டுள்ளார்கள். அதனையும்

கழகத்துக்கே கொடுத்துள்ளார்கள். ஏனைய திருமுறைகளும் வெளிவர இருக்கின்றன.

இப் பெரியார் கழகத்தில் வெளிவந்துள்ள பல பிள்ளைத் தமிழ்கள், உலா முதலிய நூற்களுக்கு அருங்குறிப்பு எழுதியமைத்தல் செம்மைப்படுத்தத் துணைபுரிதல் முதலிய தொண்டுகளை இடையிடையே புரிந்து வருகின்றார்கள். இவர்கள் உடல் தோற்றத்தால் முதுமை காணப்பெறினும் உள்ளவுரத்தாலும் உஞற்றும் உரைநூற் பணியாலும் இளமையாகவே இருக்கின்றனர். இவ்வாறே என்றும் தொண்டியற்றி வாழ அருள்புரியுமாறு இறையை வழுத்துகின்றோம்.

திரு. வ. சு. அவர்கள் அறிவாற்றல் ஆட்சித்திறன் முதலியவற்றால் கழகம் இத்துணைப் பெருஞ் சிறப்பெய்தித் திகழ்கின்றது அனைவரும் அறிந்ததே. அத்தோடு அளவிறந்த அலுவல்களுக்கிடையே தமிழ்த்தாய்க்குத் தம் அன்புறு நூற்பணியும் புரிந்துள்ளார்கள் என்பது அவர்தம் எல்லையில் ஆர்வத்தை எடுத்துக் காட்டுவதாகும். நூற்கள் வருமாறு: பிழையின்றிப் பேசுக, பழமொழிக் கதைகள், விளையாட்டுப் பந்தயம், குழந்தைப் பேச்சு, அஞ்சல்முறை, எங்களூர்ச்சந்தை முதலியன.

நம்கழகம் நற்றமிழ்மொழிக்கும், நாட்டுக்கும், நன்னெறிக்கும் முன்நின்று செய்யும் அருந்தொண்டு பலவும் அனைவர்களும் அறிந்தனவே. கழகம் அவற்றை முன்னேற்றித் தானும் முன்னேறிக்கொண்டே போகின்றது. கழகம் புலவர் பெருமக்களுக்கும் நூலாசிரியர், உரையாசிரியர், விரிவுரையாளர், செம்பொருட்டுணிவினர், மெய்யுணர்வு நல்லார், கற்கும் மாணவர் முதலிய பலர்க்கும் என்றும் நன்றுபுரி தாயகமாகத் திகழ்ந்து விளங்குகின்றது. இக் கழகவமைப்புப்போன்ற (Public Company) கூட்டமைப்பு நிலையம் தென்னாட்டில் இல்லையென்றே இயம்புதல் மிகையாகாது.

அறிவாற்றல் ஆக்கம் என்னும் மூன்றன் செறிவினரே நல்லன பலவும்புரிந்து நாடு மொழி நன்னெறி மூன்றனையும் பீடுற ஓம்புதல் தகும் ஆனால் இம் மூன்றும் ஒருங்கே ஒருவர்பால் அமைவது அருமையினும் அருமையாகும். ஒனறிரண்டு குன்றின் அவற்றை உடையார் கொடுத்து ஒற்றுமையுற்று உழைக்க முன்வருவதே ஒப்புரவாகும்.

நம் வ. சு. பிள்ளையவர்கள் அறிவாற்றல், ஆட்சித்திறன், உளமறிந்தளவளாவல், உய்த்துணர்ந்தெண்ணி எவற்றையும் முன்னரே அமைக்கும் ஒண்மை, தளராவூக்க முதலியன

மிக்குள்ளார் என்பது எல்லாராலும் அறியப்பட்டது ஒன்றே. அவர்கள் எண்ணிய எண்ணியாங்கெய்தக் கழக அமைப்பு ஆக்கத்துணையாக நின்றது. கழக அமைப்பு ஒன்று இன்றெனில், பிள்ளையவர்கள் எண்ணம் உள்ளத் தொடுங்கி உலகுக்குப் பயன் தராது கழியும். கழகமே அவர்கள் எண்ணத்தை இனிதுற முற்றுவித்தது. அம்மட்டோ? பன்னூற்றுக்கணக்கான பெரும் புலவர்தம் பேரறிவுகளையெல்லாம் உலகத்துக்குப் பயன்படுத்தி அவர்களையும் உலகிடைப் பொன்றாப்புகழுடன் நின்று நிலவச் செய்கின்றதென்பதும் உலகமும் புலவரும் ஒருங்கறிந்த தொன்றேயாம். புலவர் அழியாப் பாட்டுருவமைக்கின்றனர். கழகம் அப் புலவர்பெரு மக்களுக்குப் புகழுருவமைத்துப் போற்றுகின்றது. கழகப்பணியனைத்தும் நூற்பணியே. கழகம் மலை விளக்காய் நிலைபெற்று வளர்வதற்குத் திரு. வ. சு. அவர் களும், வ. சு. அவர்களின் நல்லெண்ணங்கள் வளர்வதற்குக் கழகமும் முறையே தாயும் சேயும் போன்ற கலாதிணைந்து அமைந்தமையே மிகப் பொருந்திய காரணம் ஆகும். இவ்வா றமையுமாறு கடைக்கணித்த இறைவன் திருவருளை இறைஞ்சு வோமாக.

இக் கழகப் பணியினைத் திரு. வ. சு. அவர்கள் இத்துணைத் திறம்பட ஆற்றிச் சீரும் சிறப்பும், பேரும் புகழும் எய்தியுள் ளார்கள் என்றால் அதற்கு மூலகாரணமாய் இக் கழகத்தைத் தோற்றுவித்து நிறுவித் தம்முயிரினும் சிறபபாக் கண்ணிற் காத்துவந்த அவர்தம் அருமைத் தமையனார் திரு வ. திருவரங் கனாரவர்களே முழுக்காரணராவார்கள். அதனால் இப்புகழனைத் தும் அவர்களையே சார்ந்தன. மேலும் வேறு துறைகளில் தொழில்புரிய வேண்டுமென்று முனைந்து முயன்ற நம் வ. சு. அவர்களை அங்ஙனம் செல்லவொட்டாது தடுத்துத் தமிழ்ப் பணிக்கே ஆளாக்கி இக் கழகத்துச் சேர்ப்பித்தது தோன்றாத் துணையாய் நின்று தொழிற்படுத்தும் இறைவன்றன் திரு வருளேயாம்.

கழக மெய்யுணர்வு விழாவும் இந் நாளில் நிகழ இருந்தமை சில காரணங்களால பின் நிகழ இருக்கின்றது. கழகத்தை உயிரெனப் பேணும் திரு. வ. சு. அவர்கள் நீடுவாழ்ந்து மேன் மேலும் கழப்பணியினைப் புரியுமாறு ஆற்றன் முதலிய பேற்றை அவர்கட்கு அருளுமாறு அம்மையப்பர் திருவடியை அகனுறப் பணிகின்றாம். வாழ்க தமிழ்மொழி; வாழ்க சிவனெறி; வாழ்க கழகம்; வாழ்க உலகம்.

—கழகப் புலவர் ப. இராமநாத பிள்ளை.

# மறைமலையடிகளின் மணிமொழிகள்

(க) கடவுள் ஒருவர் உண்டு என அதன் இருப்பைமட்டும் உணர்வார்க்குப் பொது வகையால் ஒரு மெய்யறிவு விளங்குமே யல்லாமல் அதனின் மேற்பட்ட ஓர் இன்ப உணர்வு தோன்றாது.

(உ) எத்துணை தான் கடவுள் நிலையினை உணர்வா ராயினும், அவர் அங்ஙனம் உணரும் உணர்ச்சிதான் இறைவனை அணுகு தற்கு ஒருவழியினைத் தோற்றுவிக்குமே யல்லாமல், அவன்றன் உண்மை நிலையினை வருவித்துக் காட்ட மாட்டாது.

(ங) மாணிக்க வாசகரைப்போல் இறைவனைக் கண்டு அவனருளை முற்றப்பெற்றார் பலர் அவர்க்கு முன் இருந்தது உண்மையா யிருக்கலாமேனும், அவரெல்லாந் தாங்கண்ட அருட் பெருங் காட்சிகளையும், அவற்றால் தாம் பெற்ற பேரின்ப நிலைமை களையும், இறைவன் தமக்குச் செய்த அருட்பேறுதவிகளையும் தாம் இறைவற்கு ஆளாய் நின்று உருகின வகைகளையும் இவர் போற் செந்தமிழ்ப் பாக்களில் நிறைத்து யாமெல்லாம் பருகிக் களிக்க வழங்கியவரல்லர்.

(ச) தம்மாற் காணப்படாத ஒருவரின் குணநலங்களைக் கேட்டு அவர்பால் அன்பு மீதூரப் பெற்ற மற்றொருவர் அவர் மாட்டு எத்துணை தான் அன்பு பூண்டு ஒழுகுவா ராயினும் அவர்க் குள்ள அவ் வுள்ள நெகிழ்ச்சி அந்நண்பரை அவர் நேரே காணப் பெறுங்கால் அடையும் பேரின்பப் பெருக்கிற்கு ஒரு சிறிதும் ஒவ்வாது.

(ரு) முழுமுதற் கடவுளின் அருட்பெருந் தன்மைகளை நேரே காணப்பெறாமல் உய்த்துணர்ந்தறிந்து அவ்வாற்றால் அவர் பால் அன்புநிகழப் பெற்றார்க்குள்ள அன்பின்நிலை அக் கடவுளைத் தம் கண்ணெதிரே கண்டு அவர்மாட்டுக் கரையிகந்து பெருகும் அன்புடைய ராயினார்க்கு மீதூரும் பேரின்பநிலைக்கு ஒரு தினைத் தனையும் ஈடாகாது.

(சா) கடவுளைக் காணப்பெறாத ஆசிரியர்களைப் பின்பற்றிச் செல்வாரெல்லாருந் தாம் கருதிய பயனைப் பெறாமல் ஏமாந்து, மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினவரோடு ஒப்பத் தம் அரும்பெறற் பிறவிப் பயனையும் இழப்பர்.

(எ) கடவுள் அல்லாத மற்றைப்பொருள்களின் உண்மை யெல்லாம் ஒருவன் ஓராசிரியர்பால் உசாவித் தெளிந்தானாயினுந், தன்னுயிர்க் குயிராய் நின்று பிறவிகடோறுந் தனக்குப் பெருந்

துணையாயிருந்து உதவுங் கடவுளின் உண்மை நிலையைத் தெளிந்திலனாயின், யாது பயன் ?

(அ) கடவுளைக் கண்டவரின் நிலைகளும் அவர்கண்ட காட்சிகளும் அவர்தாமே எடுத்துரைக்க வல்லுநரன்றி, ஏனையோர் வல்லுநர் ஆகார்.

(கூ) கடவுள் என்னுஞ் சொல்லைக்கேட்ட அளவானே அஃது எப்பொருளையுங் கடந்து நிற்பது என்னும் பொருள் புலனாகா நிற்கின்றது.

(கo) இனிக் கடவுள் எப்பொருளைக் கடந்து நிற்கின்றார் என்று ஆராய்ந்து பார்க்குமிடத்து, இவ் உலகத்தையும் இவ் உலகத்தில் வாழும் உயிர்களையுங் கடந்து நிற்கின்றார் என்றே நாம் சொல்லுதல் வேண்டும்.

(கக) கடவுளுக்குத் தாய் தந்தையாவார் யாவரென்று எவரைக் கேட்டாலும் அவரெல்லாம் அவற்குத் தாய்தந்தையர் இலரென்றே சொல்லுதலால், எவராலும் அவன் பிறப்பைக் கேட்டறிய முடியாமையின் அவன் பிறவாதவன் என்பது தெளியப்படும்.

(கஉ) பிறந்திறப்பன வெல்லாஞ் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய உயிர்களென்றும், பிறந்திறவாதவன் ஒருவனே இறைவன் என்றும் பகுத்துணர்ந்து கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

(கந) கடவுளுக் குரிய பிறந் திறவாச் சிறப்பிலக்கணத்தை முதன்முதற் கண்டறிந்தவர்கள் சைவ நன்மக்களே யாவர்.

(கச) பழைய யூதர்களும், மகமதியர்களுந் தவிர மற்றச் சமயத்தவர்க ளெல்லாரும் பிறந்திறக்கும் உயிர்களையே அவ்வவர்பாற் காணப்பட்ட சில ஆண்மைச்செயல்களாற் கடவுளாகப் பிறழ உணர்ந்து அவைதம்மையே கடவுள்நிலையில் வைத்து வணங்கி வருகின்றார்கள்.

(கரு) கடவுள் எல்லாப் பொருள்களையும் எல்லா உயிர்களையுங் கடந்து நிற்குந் தன்மையர் என்னும் பொது இலக்கணத்தை உலகத்தின்கட் பரந்து பட்டுக்கிடக்கும் எல்லாச் சமயத்தவரும் உடன்பட்டுக் கூறுவாராயினும், அங்ஙனங் கடந்த நிலையினராகிய இறைவன் மக்களாகிய நம்பொருட்டு நம்போல் வடிவுகொண்டு வந்து நம்மை ஆட்கொள்வன் என்னும் உண்மையினைக் கண்டறிந்தாரல்லர்.

# பல்லாவரம் மறைமலையடிகளார் கடிதங்கள்

## கடிதம் - க

### 25—10—43-இல் பவானி, திருமுறைக் கழக அமைச்சர் திரு. மு. கண்ணப்பனார்க்கு எழுதியது.

அன்புமிக்க திருவாளர் தேவாரம் மு. கண்ணப்பருக்குச் சிவபிரான் திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக.

ஐப்பசி 4-இல் நீங்கள் வரைந்த அன்புள்ள கடிதம் வந்தது. மார்கழி 23 முதல் நீங்கள் நடத்துவதாயிருக்கும் நுங்கள் திருமுறைக் கழக விழாப்பேரவைக்கு என்னை அவைத்தலைவராக வருவிக்க ஏற்பாடு செய்வதறிந்து மகிழ்ந்தேன்.

பவானி தொலைவிலுள்ள ஊர். அங்கு யான் வருவதாயிருந்தால் எனக்கு 2-வது வகுப்பு வண்டிச் செலவும் என்னுடன் வருவார் இருவர்க்கு 3-வது வகுப்பு வண்டிச் செலவும் நீங்கள் அனுப்புவதுடன், எம்முடைய நூற்பதிப்புச் செலவுகட்குப் பயன்படும்படி முந்நூறு ரூபாவும் நீங்கள் முன்னதாக அன்பு கூர்ந்து அனுப்பியுதவல் வேண்டும். எம்முடைய நூற்பதிப்புச் செலவுகட்காக யான் கேட்குந்தொகை அனுப்புங் கழகங்கட்கே யான் அவைத்தலைமை மேற்கொண்டு நடத்துவது வழக்கம்.

அண்மையில் நடைபெற்ற நாகை வெளிப்பாளையம் சைவ சித்தாந்த சபையின் ஆண்டுவிழாப் பேரவைக்கு யான் அவைத் தலைமை தாங்கித் திருவருளால் மூன்று நாட்கள் அதனைச் செவ்வனே நடத்தி வந்தேன். அவ்வவையினர் இருநூற்றைம்பது ரூபா அனுப்பிவைத்தார்கள். அங்குச் செல்லுங்கால் இடையே சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் என்னை ஒரு சொற்பொழிவு செய்யுமாறு வேண்டி நூற்றொரு ரூபா காணிக்கையும் எமக்கு வைத்தார்கள். இரண்டிடங்களிலும் உள்ள அன்பர்கள் என்னுடைய நூல்களையும் முந்நூறு ரூபாய்க்கு மேல் வாங்கினார்கள்.

ஆகவே யாம் விரும்பிய தொர்கையும் வழிச்செலவும் அன்பு கூர்ந்து முன் அனுப்புவீர்களாயின் யான் உங்கள் கழக விழாப் பேரவைக்கு வந்து அதனைத் திருவருளால் செவ்விதின் நடத்தித் திரும்பலாம். நலம்.

அன்புள்ள,

**மறைமலையடிகள்.**

## கடிதம் - உ

### 7—2—36-இல் தம் பேரன் அம்பலவாணனுக்கு எழுதியது.

அன்புமிக்க பேரன் அம்பலவாணனுக்குத் திருவருளால் எல்லா நலங்களும் மேன்மேற் பெருகுக.

4-ஆம் நாள் நீ எழுதிய கடிதம் இன்றுதான் இங்கு வந்தது. நீ உடம்பு நலமின்றியிருத்தலறிந்து மிக வருந்தினேம். திருவருளால் உனக்கு உடனே நலம் உண்டாகும். மணியார்டரில் இரண்டு ரூபா இன்றைக்கு அனுப்பியிருக்கின்றேன்; பெற்றுக்கொண்டு சிக்கனமாய்ச் செலவு செய்து உடம்பை நலமாக வைத்துக்கொள்.

இங்கிருக்கும் வேலைத் தொல்லையெல்லாமும், யான் செலவுக்குப் படும் முடையும் நீ நன்கறிந்திருக்கின்றாய். பத்துப் பேர் செய்ய வேண்டிய வேலையை யான் ஒன்றியாகச் செய்தலால் அடிக்கடி என் உடம்பின் நலமும் பழுதுறுகின்றது. ஆதலால், இங்கிருந்து மருந்தனுப்பும் வேலையை எனக்குத் தராதே. யான் கீழ்க் கூறும் முறைகளின்படி நீ செய்துவரின் நோய் இன்றி யிருக்கலாம்.

பேதிக்குக் கடுக்காய்ச்சாறே சாப்பிடு. பத்துக் கடுக்காயை நறுக்கி உள்ளுள்ள விதையை நீக்கிவிட்டுத் தோலுஞ் சதையும் இடித்து உழக்கு நீரிற்போட்டு அரையாழாக்காகச் சுண்டக்காய்ச்சி இறக்கிச், சாற்றை இறுத்துக் காலையில் உட்கொள். 11-மணிக்குச் சிறிது கோதுமைநொய்க் கஞ்சியும், 2-மணிக்கு மிளகுநீர்ச் சோறுஞ் சாப்பிடு. நன்றாய்ப் பேதியாகும். வயிற்றுளைச்சலும் போய்விடும். இரவில் கஞ்சியே சாப்பிடு. நோய் தீர்ந்தபின் சோறு தின்னலாம். குளிர் காய்ச்சல் இருந்தால், சாம்பலை வறுத்து உடம்பு முழுதும் ஒற்றடங் கொடுத்து நன்றாய்ப் போர்த்துக்கொண்டு படுத்து வியர்க்கவை. வியர்வையை அவ்வப்போது துடைத்துவிடு.

உடம்பு நன்னிலைக்கு வரும்வரையில் தலைமுழுகாதே, குளியாதே. வயிற்றுளைச்சல் மிகுதியாயிருந்தால், வெந்தயத்தை இரவில் ஊறப் போட்டுக், காலையிலெடுத்து மைபோல் அரைத்துத், தயிரிற் குழப்பி உட்கொண்டு வா. இங்ஙனம் இரண்டு மூன்று நாள் வயிற்றுளைச்சலுங் காய்ச்சலுந் தீரும்வரையில் சோறு தின்னாதே. பாற்கஞ்சியே சாப்பிடு.

இடையிடையே நீரேற்றிவைத்து மலக்குடரைத் துப்புரவு செய்தற்கு எப்படியாவது வசதி செய்துகொள்.

நோய் நீங்கியபின்னும் அளவாகச் சாப்பிட்டுவா. உனது நலத்தைப்பற்றி உடனே தெரிவி. காய்ச்சல் மருந்தாகிய Batliwala's Ague Mixture அங்கேயே கிடைக்கும். அதனை வாங்கி வைத்துக்கொண்டு பத்துத்துளி விட்டுச் சிறிது தண்ணீரிற் கலக்கி மூன்று வேளைசாப்பிடு. சிறு புட்டி ஆறணாவுக்குள்ளேதான் விலை.

நம்முடைய நூல்களை அப்பக்கங்களில் விலைப்படுத்த முயற்சி செய். இங்கு அனைவேமும் நலம்.

அன்புள்ள,

மறைமலையடிகள்.

# வள்ளுவர் காட்டிய அன்புநெறி

[திருவாட்டி. மேரி மாசிலாமணி அம்மையார், எம். ஏ., எல். டி.]

அன்பர்களே! தமிழணங்கு உரிமை பூண்டு நிலைநிற்குமாறு தவலருந் தொல்கேள்வித் தாமோதரம், ஆறுமுகநாவலர், குமாரசாமிப் புலவர் முதலிய தவப் புலவர்கள் வாழ்ந்து தமிழ்த்தொண்டாற்றிய இந் நாட்டில்; ஏறத்தாழ இரண்டாயிர மாண்டுகட்கு முன் 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்' தமிழ்நாடு சென்று, சேரன் செங்குட்டுவனுடனும், ஏனைய அரசர்களுடனும் சேர்ந்து, கற்புத்தெய்வமாம் கண்ணகியின் சிறப்பையறிந்து வந்து பரப்பிய இந் நாட்டில்; செந்தமிழை வளர்த்து, அதனுக்கு அழிவுவராமல் காத்தற்குத் தங்கள் உயிரையும் தியாகம் செய்ய முன்வந்த தமிழ்த் தொண்டர்கள் மலிந்துள்ள இந் நாட்டில், வள்ளுவரைப் பற்றி இரண்டொரு சொற்பொழிவாற்றும்படி என்னைக் கேட்டுக் கொண்டார் பண்டிதர் இரத்னம் அவர்கள். இதற்குநான் ஒரு சிறிதும் தகுதி வாய்ந்துளேன் அல்லேன். எனினும், வள்ளுவரைப் போற்றிப் புகழும் இக்கொண்டாட்டத்திற்கு என்னை அவர்கள் அழைத்தமைக்கு, என்மனமார்ந்த நன்றியைப் பன்முறை கூறுகிறேன். வள்ளுவரைக் குறித்து எத்தனையோ சொற்பொழிவுகளும் நூல்களும் வெளிவந்துள்ளன எனினும், உலகப் பெரியாராகிய அவரின் அரும் பெரும் வாக்குக்களையும் அவ் வாக்குக்களில் பொதிந்து கிடக்கும் அரிய உண்மைகளையும், நாம் அடிக்கடி நினைவூட்டிக் கொள்வதால், நம் வாழ்க்கையை வளம்பெறச் செய்யலாம் என்னும் குறிக்கோள் ஒன்றே, நம்மை இன்று இங்குக் கூட்டியுள்ளது.

உலகப் பெருமக்களுள் ஒரு சிலர், தமது தியாகச் செயல்களால் புகழ் பெற்றவர்; காந்தியடிகள் போன்ற தியாகிகளை இதற்கு எடுத்துக் காட்டாய்க் கூறலாம்; ஒரு சிலர் அரசியல் துறையில் புகழ்படைத்தவர்; சாணக்கியன் போன்றாரை இதற்கு எடுத்துக் காட்டாய்க் கூறலாம். பல்வகைக்கலைகள், விஞ்ஞான அறிவுத் துறைகள் இவற்றில் சிலர் புகழ் படைத்துக்கொண்டவர். ஐன்ஸ்டீன், நியூடன், சர் சி. வி. இராமன், இராமானுசம் முதலிய எண்ணற்ற மேதைகளை இதற்கு எடுத்துக் காட்டாய்க் கூறலாம். மற்றுஞ் சிலர், அழியாப்பாக்கள் புனைந்து அனைவரையும மகிழ்வித்த அருட்புலவர்கள் இக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே. ஹோமர், வள்ளுவர், ஷேக்ஸ்பியர் போன்ற புலவர் பெருமக்கள் இப் புலவர்களைத் தம் தம் நாட்டிற்கேயுரிய புலவர்கள் எனக்

கூறுது, உலகப் புலவர்கள் என்றே கூறல்வேண்டும். வள்ளுவர் ஓர் உலகப் புலவர். இவரைத் தமிழ்நாட்டு சாக்ரடீஸ் என்று கூறுவதுண்டு. ஏனெனில் உலகமக்கள் யாவருக்கும், எக்காலத்துக்கும், ஒப்பமுடிந்த அரியனவும் பெரியனவுமான கருத்துக்களை இவர் எடுத்துக் கூறினர். இவர் நூல்,லத்தீன் போன்ற பழைய ஐரோப்பிய மொழிகளிலும், ஜர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற தற்கால மேல்நாட்டு மொழிகளிலும், ஹிந்தி முதலிய நம் நாட்டுமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறட் கருத்துக்கள் இப்பொழுது உலகப் பெருங்கருத்துக்களுள் இடம்பெற்று விட்டன. இதுபற்றியே புதுமைக்கவி பாரதியும் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்' கொண்ட தமிழ்நாடு" என்று பாடியுள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இப் புலவர் இயற்றிய நூல் நாமிருக்கும் இவ்வுலகச் சூழல்களுக்கு எவ்வளவோ மாறுபட்ட சூழல்களின் அடிப்படையில் எழுந்ததெனினும், அக்கால மக்களின் எளிய வாழ்க்கையும் உயர்ந்த குறிக்கோளும் இக் காலத்திலுள்ள நமக்கும், நாம் வசிக்கும் நாகரிகம் மலிந்த நாட்டுக்கும், பெரிதும் பயன்படும் முறையில் அமைந்துள்ளது. அவர் கூறிய கருத்துக்களிற் சில இக்கால மக்கள் சமுதாயத்திற்குப் பயன்படாக் கருத்துக்களாகத் தோன்றுகின்றன என்றும், தற்காலக் குடியரசு முறை வள்ளுவர் பொருட்பாலில் கூறிய முறையினின்றும் பெரிதும் வேறுபட்டதென்றும் நாம் கூறலாம் எனினும் அரசு அமைச்சு, தூது, பொருள் செயல்வகை முதலிய பற்பலப் பகுதிகளில் அவர் கூறிய அடிப்படைக் கொள்கைகளை நம் காலத்திற்குப் பயன்படுமாறு மாற்றியமைத்து, நம் சமுதாயத்தை உயர்ந்த முறையில் உருவாக்கலாம் என்பது தெற்றெனப், புலப்படும். உலக இயல்பிற்கும் நலத்திற்கும் பொருந்தும் அரிய காரியங்களை, அழகுச் சித்திரங்களான அழியாக் குறட்பாக்களால் அளித்ததற்காக இவரை நாம் யாவரும் புகழுவதுடன், இவர் பாடலில் காணப்படும் அறநெறிகளை உலகமக்கள் யாவரும் அறியும்படி பறைசாற்றல் வேண்டும். இதுவே, இவருக்கும் தமிழுக்கும் நாம் செய்யும் பெருந்தொண்டாகும். இவ்வுலகில் நாம் யாவரும் பெரிய புலவர்களாக மாறிவிட முடியாது. கருவில் திருவுடைய சிலருக்கே அப் பாக்கியம் கிட்டும். ஆனல் கல்வியறிவுடைய நாம் யாவரும் செய்யக்கூடிய தொண்டு ஒன்றுளது. புலவர் பெருமக்களுடைய பாடல்களில் உறைந்து கிடக்கும் உண்மைகளைப் பலரும் ஒன்று கூடிப்பேசி அவற்றின் நயம்பாராட்டும் ஓர் சூழ்நிலையை ஏற்படுத்துவதால் பண்டை யிலக்கியங்களின் பண்பினடியாகப் புதிய புதிய இலக்கியங்கள் நம் நாட்டில் பூத்துக் குலுங்க நாம் உதவுவோம்.

வள்ளுவர், தமிழையும் வடமொழியையும் நன்கு பயின்று, அவைகளிலுள்ள நூல்களை ஆராய்ந்தறிந்தார். அக்கால மக்கள் வாழ்க்கைப் பண்புகளையும், அக்காலப் புலவர் வழக்காறுகளையும் நன்கு அறிந்திருந்தார். எனினும் அவரது புலமைகொண்டு மட்டும் அவர் இந்நூலை இயற்றித்தந்தார் என்று கொள்ளலாகாது. கருவில்திருவுடைய புலவர் இவர். இயற்கையிலேயே கவிதை யுள்ளமும், செயற்கையறிவால் புலமையுள்ளமும் படைத்தவர் இவர். இதன் பயனாய்த் தோன்றியதே திருக்குறள்.

வள்ளுவரைத் தம் கண்கொண்டு கண்டு, பிறர்க்கு எடுத்துக் காட்ட முயன்றனர் பரிமேலழகர் மணக்குடவர் போன்ற பழைய உரையாசிரியர்களும், நாமக்கல் கவிஞர் போன்ற இக்கால ஆசிரியர்களும். இவ்வுரையாசிரியர், வள்ளுவர் யாத்த குறட்பாக்கட்கு, அவர் மனத்துக்கொண்ட கருத்துப்படி யாண்டும் விளக்கம் கூறுதல் இயலாதெனினும், வள்ளுவரை யறிதற்கு இவ்வுரைகள் பெரியதோர் அளவில் பயன்படுகின்றன. ஷேக்ஸ்பியர் நாடகங்களை யறிதற்கு ஆசிரியர் பிராட்லியின் ஆராய்ச்சி உதவிபுரிகிறது; சாமுவேல் ஜான்ஸன் என்னும் எழுத்தாளரை அறிந்து கொள்ளுதற்கு பாஸ்ட்டுவலுடைய கட்டுரைகள் உதவுகின்றன; ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் தத்துவங்களை அறிதற்கு, சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகள் உதவிபுரிந்தன. இவ்வாறு தான், குறளை யறிதற்கு, அவ்வக்காலத்துத் தமிழ்ப்பெரியார்கள் இயற்றும் உரைகள் பயன்படுகின்றன. தமிழன் ஒவ்வொருவனுக்கும், திருக்குறளும், குறளின் பல்வேறு உரைகளும், வழிவழி வந்த சொத்தாகும். இந்தச் சொத்தைப் பயன்படுத்த அவனது ஆர்வமும் அறிவும் அவசியம்.

வள்ளுவர் இயற்றித்தந்த 1330 பாக்களிலும் பல்வேறு அறநெறிகளை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். அந் நெறிகளுள் இருநெறிகள் என்றும் மாறாதனவாய், எவர்க்கும் பயன்படுவனவான நெறிகள். அவைதாம் அன்பு நெறியும் அருள்நெறியும். உலகமும், உலகமக்களும் இருக்கும்வரை அன்புக்கும் அருளுக்கும் அழிவில்லை. சில நாடுகளில் மக்கள் வாழ்க்கையில், இவ்வரிய பண்புகளாகிய அன்புக்கும் அருளுக்கும் நலிவு ஏற்படலாம். இப் பண்புகள் வளரமுடியாதபடி, மக்கள் தனிவாழ்க்கையிலும் அரசியலிலும் வரையறைகளும், கட்டுப்பாடுகளும் தோன்றி மக்களின் அரிய இயல்புகளை நசுக்கிவிட்டு, அரசாங்கமே எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், மனிதன் சுதந்தர மனிதனாக வாழும் நிலையில், இவ்விரு பண்புகளும் இயல்பில் தோன்றி எழிலுடன் வளருவன.

வள்ளுவரது சமயம் இன்னதென்று புலப்படவில்லை. அவர் சைவர் என்றும், வைணவர் என்றும், பௌத்தர் என்றும் அவ்வம்மதத்தார் வாதித்து, அவர் நூலிலிருந்து மேற்கோள் காட்டுகின்றனர். அவர் மதம் இன்னதுதான் என்று துணிந்து கூறுதற்குப் போதுமான சான்றுகள் இல்லை. எனினும் அன்பு அருள் போன்ற அரும்பெரும் பண்புகள் ஒரு சமயத்திற்கு மாத்திரமே அடிப்படையான பண்புகள் அல்லன. ஆகவே, வள்ளுவர் சமயம் எச்சமயமாயினும், அச்சமயத்திற்கு அன்பே அடிப்படை என்பது மாத்திரம் தெற்றெனப் புலப்படும்.

இன்று நாம் ஆராயப்புகுவது அன்புநெறி. வள்ளுவர் காட்டிய அன்புநெறி தனித்ததோர் அதிகாரத்தில், அன்புடைமை என்னும் தலைப்பில் தெளிவாய்க் கூறப்பட்ட போதிலும், நூல் முழுவதிலும், சிறப்பாய் அறத்துப்பால் முழுவதிலும், அன்புநெறியின் தொனியை நாம் கேட்கலாம். அன்பு எனும்சொல் பற்பல தொடர்புகளில் பயன்பட்டு வருகின்றது. தமிழில், அன்பு என்னும் பொருளில் வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்துகிறோம். ஆண்டவனிடத்து அடியானுக்கிருக்கும் அன்பைப் பக்தி என்கிறோம். காதலியிடத்துக் காதலனுக்கிருக்கும் அன்பைக் காதல் என்கிறோம். நண்பர் இருவருக்கிடையே யிருக்கும் அன்பை நட்பு என்கிறோம். தாய்தந்தையருக்குக் குழந்தைகளிடத்துள்ள அன்பைப் பாசம் என்கிறோம். அன்பு எனும் இச்சொல் எல்லாவகைத் தொடர்பையும் தன்னுள் அடக்கி, எல்லாத் தொடர்பிற்கும் பொதுவானதோர் சொல். இந்தப் பொதுவான தன்மையில்தான் நாம் இன்று வள்ளுவர் காட்டிய அன்புநெறியைக் காணவேண்டும்.

பொருளதிகார வுரையில், "அன்பாவது, மனைவியர் கண்ணும், தாய்தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின்கண்ணும் மனமகிழ்ச்சி நிகழ்த்திப் பிணித்து நிற்கும் நேயம் என்றும், அருளாவது, அன்பு காரணத்தால் தோன்றும்" என்றும் கூறப்பட்டுள்ளது. அன்புடைமை என்னும் அதிகாரம் அமைந்து நிற்கும் இடம் பாராட்டுதற் குரியது. அறத்துப்பாலிலுள்ள, இல்லறவியலில், 'இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல்' எனும் இம்மூன்று அதிகாரங்களை அடுத்து அன்புடைமையைக் காண்கிறோம். வாழ்க்கைத் துணையாகிய மனைவி அவளிடத்துத் தோன்றும் புதல்வர் முதலியோரிடத்து இயல்பிலேயே ஆசையும் அன்பும் ஒருவனுக்குப் பிறக்கும். இஃது, உயிர்களின் இயல்பு அடிப்படையாய்த் தோன்றும் அன்பு ஆனால் இல்லற வாழ்க்கை இவ்வியல்பில் தோன்றும் அன்புடன் நின்றுவிடலாகாது இயல்பிலேயே தோன்றும் அன்பை, வாழ்க்கையின்

நெறியாக, குறிக்கோளாகக் கொள்ளல்வேண்டும் என்பது பற்றியே, அன்புடைமையை அடுத்து, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை முதலிய அதிகாரங்களில் அன்புக்குரிய நெறிகளைக் கற்பித்தும், அழுக்காறாமை வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை முதலிய இன்மை அதிகாரங்களால் மறைமுகமாய் அன்பு நெறியை விளக்கியும், கடைசியில் ஒப்புரவறிதல், புகழ் என்னும் அதிகாரங்களால், அன்பு நெறியால் வரும் பயன்களைக் கூறியும் செல்லுகின்றது இந்நூல்.

### அன்பு நெறிகாட்டும் மெய்ப்பாடு

ஆசிரியர் அன்பு நெறியை வாழ்க்கையின் மேல்வரிச் சட்டமாகக் கூறுகிறார். அன்பு காட்டலாகா அநுமானப் பொருள். அன்புடையார் இவர் என்று, உடலில் நிகழும் மெய்ப்பாட்டால் யூகித்தறியக்கிடக்கின்றது. ஒரு சில சமயங்களில், அன்பை உடலின்கண் தோன்றும் கண்ணீர், தழுவுதல், முதலிய மெய்ப்பாடுகளால் யூகித்தறியலாம். அன்பை அடைத்து வைக்க வியலாது. ஏனெனில் தங்களைச் சேர்ந்தவர்களின் துன்பத்தைக் கண்டபோது கண்ணீர் விடுவதே யியல்பு. பொருளதிகாரவுரையில், "அன்பென்பது அருளுக்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயம்; அவ்வன்புடையார்க்கு, பிறர்கண் துன்பங்கண்டவழிக் கண்ணீர் விழுமாகலின், அவ்வருளாலே அன்புடைமை விளங்குமென்பது; இவையெல்லாம் தத்தம் மனத்தின் நிகழ்ச்சியை வெளிப்படுப்பன வாகலின் மெய்ப்பாடெனப் பட்டன என்றும்" இறையனாரகப் பொருளுரையில்," குடத்துள் விளக்கும், வாளிடும் உறையில் வாளும்போல, இதுகாண் அன்பு "என்று தந்து காட்டலாகாது; அன்புடையரான குணங் கண்ட விடத்து, இம் மெய்ப்பாடுகள் உண்மையான், இங்கு அன்பே உண்டென அனுமானித்துக் கொள்ளற்பாற்று" என்று கூறியுள்ளது. இது பற்றியே வள்ளுவர்,

> "அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும்." (குறள்—எக)

என்றார். ஆகவே அன்பாகிய பண்பைப் பிறர் அறியாமல் அடைத்து வைக்கக் கூடிய தாழ்ப்பாள் ஒன்றுண்டோ? இல்லை. தம்மால் அன்பு செய்யப்பட்டாரது துன்பத்தைக் கண்ட பொழுதிலேயே அன்பு செலுத்துபவர் கண்ணில் நீர் வழியும். அக்கண்ணீரே உள்நின்ற அன்பை எல்லாரும் அறியுமாறு தூற்றும். இங்கு கூறப்பட்ட கண்ணீராகிய மெய்ப்பாடு, மக்கள்

இயற்கையையும், அன்பின் இயற்கையையும் வெளிப்படுத்து கிறது. எளிய மக்களிடத்தும், பண்படுத்தப்படாத சமுதாயத் திடத்தும் இதை அதிகம் காண்கிறோம். கண்ணீராகிய மெய்ப் பாட்டை அடக்கி, அன்புணர்ச்சியை வேறுவிதமாய்க் காட்டும் படி கற்பிக்கிறது நமது நாகரிகச் சமுதாய உலகம். ஆனால் மக் கள் வாழ்க்கையில், இவ்வாறு மெய்ப்பாட்டால் அன்பை வெளிப் படுத்துதற்கு எப்பொழுதும் ஓர் இடமுண்டு. இதுபற்றியே கிறிஸ்து பெருமானும், "அழுகிறவர்களுடன் சேர்ந்து அழுங்கள்" என்றார் அன்பிற்குக் கண்ணீர் அடிப்படை என்று கூற வியலாதெனினும், அன்புக்குக் கண்ணீர் ஓர் அறிகுறி என்ன லாம். மூவுலகையும் படைத்த ஆண்டவனை நினைந்துருகி, அவ னடி சேர விரும்பிய தாயுமான அடிகள், "பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவ துனக்கருமையோ" என்று புலம்புகிறார். அவர் இதயத்தில் மலர்வது கடவுள் அன்பு. எழுநிலை மாடியில், காதலனை நினைத்து, "கார்காலமான போதி லும் அவன் வரவில்லையே" என்று கண்ணிலிருந்து விழுந்த நீர்த் துளிகளை விரலால் தெறித்துக் கொண்டிருக்கிறாள் முல்லைப் பாட்டின் தலைவி. அவள் இதயத்தில் மலர்வது கணவன் அன்பு.

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையேம்எங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றுங் கொண்டார்யாம் எந்தையும் இலமே."

என்று கையறு நிலையில் அழுகிறார் பாரிமகளிர். அவர்கள் இத யத்தில் மலர்ந்தது தந்தை யன்பு. டெனிசன் என்னும் ஆங் கிலப் புலவன் தன் நன்பண் ஆர்தர்ஹாலம் என்பவன் இறந் ததை நினைத்துப் புலம்புகிறான். அவன்மீது இனமொமோரியம் என்னும் கையறுநூல் இயற்றுகிறான். இவன் இதயத்தில் மலர்வது நண்பன் அன்பு.

கடவுளுக்குப் படைத்தற்கென மாலைதொடுத்துக்கொண் டிருக்கையில், தன் கண்ணீரால் மாலையை நனைக்கிறாள் மாதவி மகள் மணிமேகலை. தன் தந்தை தாயராகிய கோவலன் கண்ண கிக்கு நேரிட்ட இன்னல்களையெல்லாம் நினைத்ததால் துன்பத் துடன் வந்த அன்புக் கண்ணீர் இது. உலகமக்களின் பாவத் தைக் கண்டு உள்ளமுருகிக் கண்ணீர் விடுகிறார் இயேசுபிரான். உலக மக்கட்குப் பாவத்தின் ரட்சிப்புவேண்டுமே என்று புலம்பு கிறார். அவர் இதயத்தில் மலர்வது மானிட அன்பு. ஆகவே பேசாத பேச்சாகிய இக் கண்ணீர் எத்தனையோ பேசி அன்பை

வெளிபடுத்திவிடுகிறது. அன்பை அனுமானிப்பதற்குக் கண்ணீர் உதவுகிறது. இஃது அன்பின் இயல்பு நெறி என்னலாம்.

அன்புநெறி காட்டும் செயல்

அன்புநெறி வயப்பட்டார், தமது செயலால் செயற்கரிய செயலைச் சாதிப்பர். அன்பில்லாதார், பிறர்க்குப் பயன்படாமையால் எல்லாப் பொருளாலும் தமக்கே உரிமையாவர். அன்புடையாரோ, தம் பொருள் மட்டுமேயன்றித் தம் உடம்பாலும் மற்றவர்க்கே உரியர். அன்புடையார் பொது நலம் பேணும் பெருமை வாய்ந்து, தமக்கென வாழாப் பிறர்க்குரியராய் வாழ்ந்து வருதலாலேயே இம் மண்ணுலகம் நிலைநிற்கின்றது என்பது புறநானூற்றிலும் கண்ட கருத்தாகும் இப் பொருளையே வள்ளுவர்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு." (குறள்—அஉ)

என்றார். அன்பு நெறிக்கு இக் குறள் உயிர்நிலைபோல் அமைகிறது. ஒரு சிலர் தம் பொன்னையும் பொருளையும் தியாகம் செய்வர். மற்றுஞ் சிலர் உயிரையும் உடலையும் தியாகம் செய்வர். அன்பு நெறிக்கு அடிப்பட்டவன் இருவகைத் தியாகங்களையும் இன்பச் செயல்களாகக் கொள்வன். தியாகம் என்பது அவன் உள்ளத்தில் ஊறிய பண்பாகையால், உடலிலும் பெருக்கெடுத்தோடி உடலையும் உயிரையும் அர்ப்பணஞ் செய்ய ஏவுகிறது.

அன்புடையான், தீங்கிழைத்தாருக்குப் பதில் தீங்கிழைக்க மாட்டான் என்பதை,

"கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்." (குறள்—நகஉ)

என்று கூறிய வள்ளுவர், மேலும் ஒருபடி சென்று அன்புடையான் தீங்கிழைத்தோர்மாட்டும் இனிய செயல்களையே செய்வான் என்று அறிவுறுத்துகிறார்.

"இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்." (குறள்—நகச)

என்னும் குறள் இக் கருத்தைக் கொண்டது தீமை புரிந்தவனுக்கு நன்மை புரிதல் என்பது மனித இயற்கைக்குப் பொருந்திய தன்று; தீமைக்குத் தீமை செய்தலையும், நன்மைக்கு நன்மை செய்தலையுமே மனிதன் உள்ளம் நாடுகிறது. எனினும் தீமைக்கு நன்மை செய்து, பிறன் செய்த தீமையையும் மறந்துவிடுதலே வள்ளுவர் கண்ட அன்பு நெறியாம்.

(தொடரும்)

# சுதந்திர யாத்திரை

சுதந்திர நூற்றாண்டு விழாவையொட்டி இந்திய அரசாங்கம் 'சுதந்திர யாத்திரை' என்ற செய்திப் படத்தை வெளியிட்டது. அதைப் பார்த்த தென்னாட்டு மக்கள் அனைவருக்கும் எய்தியது ஒரே ஏமாற்றம்.

இருநூறு ஆண்டுகட்கு முன்பே சுதந்திரப் போராட்டத்தில் முதல் முழக்கம் செய்த வீரத் தமிழன் கட்டபொம்மனுக்குத்தான் இதில் இடமில்லையென்றாலும் இந்த நூற்றாண்டுக்குட்பட்ட தென்னாட்டுத் தேசிய வீரர்களையும் அடியோடு மறந்துவிட்டார்கள் இந்தப் படத்தில்.

காங்கிரசை ஆரம்பிக்கச் செய்த ஹ்யூம் என்ற ஆங்கிலேயர் இருக்கிறார். ஆனால் காங்கிரசின் முதல் தீர்மானத்தைக் கொணர்ந்த ஜி. சுப்பிரமணிய ஐயர் இல்லை.

பின்னர் ராஜாராம் மோஹன்ராய், சி. ஆர். தாஸ், அஜ்மல்கான், டாக்டர் அன்சாரி முதலியவர்களின் திருவுருவங்கள் காட்டப்பட்டன. ஆனால் அதையடுத்துச் செக்கிழுத்த சிதம்பரனாரையோ, மாபெரும் கவிஞராகிய பாரதியாரையோ, திருப்பூர்க் குமரனையோ, வ. வே. சு. ஐயரையோ காட்டவில்லை.

மகாத்மா காந்தி, நேதாஜி, வல்லபபாய் படேல், சவகர்லால் நேரு, இராசேந்திர பிரசாத் போன்ற பெரியார்களின் படங்களைக் காட்டியபொழுதாவது உப்புச் சத்தியாகரத்தை முன்னின்று நடத்திய இராஜாஜியையோ, சுதந்திர வேட்கையை எழுப்பிய சத்தியமூர்த்தியையோ, ஆந்திரப் பெரியார் பிரகாசத்தையோ காட்டவில்லை.

ஆம், உண்மையில் சுதந்திரத்திற்காகப் போராடிய தென்னிந்தியர்கள் ஒருவரையும் அதில் காணவில்லை. காரணம் அவர்கள் தென்னிந்தியர்களாகப் பிறந்ததாலா? அல்லது தென்னிந்தியர்கள் தொண்டு மற்றையவர்களின் தொண்டைவிடத் தரத்தில் குறைந்தது என்றதாலா?

இப்படத்தைத் தயாரித்த குழுவினர்க்கு வரலாறே சரியாகத் தெரியாது என்று சொல்வதற்கில்லையே! அக் குழுவுக்கு மனிதர் குலமாணிக்கம் நேரு அல்லவா தலைவராக இருந்திருக்கிறார்?

இச் செய்கையானது தென்னாட்டையே அவமதிப்பது போலாகும். இச் செய்கையை மக்களும் செய்தித்தாட்களும் கண்டித்ததன் பலனாக இந்திய அரசாங்கம் அப் படத்தைத் தடைசெய்து தென்னிந்திய வீரர்களையும் சேர்த்து மறுபடி வெளியிட இருப்பதாகத் தெரிகிறது.

---

# முத்தமிழ்க் கலைஞர்களுக்குப் பாராட்டு

பண்டைத் தண்டமிழ்ச் செல்வங்களையும், பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொண்ட பின்பு, பாண்டியன் முடத்திருமாறன் மதுரையம்பதியில் கடைச்சங்கந்தோற்றுவித்து, புலவர் பெருமக்களனைவரையும் கூட்டிப் பாராட்டித் தமிழ்மொழியின் வளர்ச்சியில் தன்னாட்டத்தைச் செலுத்தியமையைப் போன்று, ஆங்கில அரசினரின் அடிமைத் தளையில் மொழி வளமும், கலை வளமும் பின்னோக்கிச் சென்றுகொண்டிருந்த நிலையில் உரிமை பெற்றபின் நம் அரசினர், உரிமைப் போராட்ட நூற்றாண்டு விழாவை ஒட்டித் தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் முத்தமிழ்க் களஞ்சியங்களாகிய திரு. மு. வரதராசனார், திருமதி. கே. பி. சுந்தராம்பாள், திரு. ப சம்பந்தமுதலியார் முதலிய மூவரையுங் கூட்டிப் பாராட்டியது, மிகவும் மகிழ்தற்குரியது. சென்னை அரசினர் இம் மூவரையும் ஒன்றுகூட்டிப் பரிசுகள் வழங்கியமை தமிழ்மொழியையும், தமிழக மக்களையும், தமிழ்நாட்டையும் பாராட்டியமைக் கொப்பாகும்.

முத்தமிழ்மணிகளாகிய திரு. வரதராசனாரும், திருமதி. சுந்தராம்பாளும், திரு. சம்பந்த முதலியாரும் ஒரே நூற்றாண்டில் வாழ்ந்து நம் மொழியை முத்துறைகளிலும் வளர்த்துவரும் அருமையை நம் அரசினர் உணர்ந்து, அவர்களை ஒரே அவையில் கூட்டிப் பாராட்டி மகிழ்வித்தமை வள்ளுவரையும், ஔவையாரையும், இளங்கோவடிகளையும் ஒரே அவையில் ஒன்றுகூட்டிப் பாராட்டியமைக்கு ஒப்பாகும்.

இந்நிகழ்ச்சி ஆகஸ்டுத் திங்கள், 16-ஆம் நாள் இராஜாஜி மண்டபத்தில், முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. அஞ்ஞான்று, சென்னை கவர்னர் திரு. ஜான் முத்தமிழ்மணிகளுக்கும் அரசினர் சார்பில் பொற்பதக்கங்களை வழங்கினார். அவர் இப்பெருமக்கள் தமிழகத்தில் வாழ நாம் பெரும்பேறு செய்துள்ளோமெனவும், முற்காலத்தில் தமிழ்மன்னர்கள் கலையைப் போற்றி வந்தனர் எனவும், நாம் அடிமைப்பட்டகாலை அக் கலைகள் மங்கத்துவங்கின எனவும், அக் கலைகளைப் போற்றி வளர்க்கும் பெருமக்களைப் போற்ற வேண்டுவது நமது கடமை எனவும் கூறினார். அமைச்சர் திரு. சுப்பிரமணியம், "இவ் விழா தமிழக வரலாற்றில் இடம் பெற வேண்டிய முக்கிய நிகழ்ச்சியாகும்" எனக் கூறினார். செய்தித் துறை நெறியாளர் கலைஞர்களுக்கு அரசினர் அளித்துள்ள பாராட்டுகளைப் படித்தார். உயர்நீதிபதி திரு. இராசமன்னார், "ஒரு நாட்டின் கலைஞர்களைப் பாராட்ட அந்நாடு முன்வருவ

தென்றல் அன்று முதல் அந்நாட்டின் பொற்காலம் ஆரம்பமாகிறது என்றுதான் பொருள்'' எனக் கூறினார்.

டாக்டர் வரதராசனார் : இவர் நூல் நயம்போலும் பயிலும் பண்பும் அப்பண்புடன் நுண்ணிய நூல் நயத்தை நுண்மாண் நுழைபுல ஆய்வுடன் அனைவரும் உணரும் வண்ணம் தெள்ளுதீந் தமிழில் இலக்கியச் சுவையுடனும் சிறந்த ஆய்வுத் திறனுடனும் எழுதும் ஆற்றல் படைத்த அறிஞர்.

தமிழகத்தில் தமிழ்நூல்களை மக்கள் விருப்புடன் விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் ஒரு பழக்கத்தை இவர் தமது எழுத்து நடையால் ஏற்படுத்தியவர். இவரது "கள்ளோ காவியமோ," "அரசியல் அலைகள்," "ஔவச் செய்தி," "மொழி இயற் கட்டுரைகள்" முதலியன அரசினரின் பரிசைப் பெற்றுள்ளனவாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக ஆராய்ச்சிநூல் எழுதி டாக்டர் பட்டம் பெற்ற இவர் மொழிநூல் ஆராய்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும், திறனாய்வுக் கலைக்கும் சிறந்த தொண்டாற்றியவர்.

திருமதி. சுந்தராம்பாள் :—இசை, நடிப்பு, திரை உலகம் எனும் மூன்றிலும் சிறந்த புகழ்பெற்ற இவர், தேன்தமிழால் தீந்தமிழிசைக்கு ஆற்றியுள்ள தொண்டு அளவிடற்பாலதன்று. ஔவை போன்றே ஊர் ஊராய்ச் சென்று பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடி மக்களின் உள்ளத்தைத் தம் இசைமூலம் கவர்ந்து பேரிசையுற்ற பெருமூதாட்டி. எளிமையும், தூய்மையும் இணைந்து தெள்ளிய தீந்தமிழமுதின் சுவையை உணர்ந்து பிறரையும் உணருமாறு செய்து, இசையையே தமது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவர்.


திரு. சம்பந்த முதலியார்:—இவர் சிறந்த நாடகப் பேராசிரியர்; நடிப்பின் மெய்ப்பாடுகளை உணர்ந்து நடிக்கவல்ல சிறந்த நடிகர்; "தெருக்கூத்து" என இகழப்பட்ட நிலையில் இருந்த கலையை நல்லதோர் அரங்கில் ஏற்றி, நாடக உலகிற்குப் புத்துயிர் ஊட்டி, "சுகுண விலாச சபை"யைத் தோற்றுவித்த பெருஞ்சான்றோர். இவர் பிறநாட்டு அறிஞர் பெருமக்களின் நாடகங்களை நந்தமிழ் மொழியில் ஆக்கியுள்ளமைக்குத் தமிழகம் என்றும் நன்றியுடையது. படித்துப் பட்டம்பெற்ற இப் பெரியார் பாமரரும் சுவைக்கும்படியும், பட்டம் பெற்றோரும் நாடக உலகில் பங்கெடுத்து நடிக்கும்படியும் நாடக உலகில் ஒருமறுமலர்ச்சி செய்த நாடகத் தந்தை ஆவர். இம் முத்தமிழ்மணிகளுக்கும் நமது வாழ்த்து உரித்தாகுக !



இயற்றமிழ்க் கலைஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கட்குச் சென்னை ஆளுநர் திரு. ஜான் அவர்கள் பொற்பதக்கம் பரிசளித்துச் சிறப்புச் செய்தல்.



இசைத்தமிழ்க் கலைஞர் திருவாட்டி கே. பி. சுந்தராம்பாள் அவர்கட்கும், நாடகத்தமிழ்க் கலைஞர் திரு. ப. சம்பந்த முதலியார் அவர்கட்கும் சென்னை அரசினர் பரிசு வழங்கிச் சிறப்புச் செய்தல். ஆளுநர் திரு. ஜான் அவர்களும் கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியமும் பாராட்டு வழங்கினர்.



கலைவாணர், என். எஸ். கிருட்டிணன்

**1907 — 1957**

# கலைவாணர் மறைவு

முத்தமிழுள் ஒன்றாகிய நாடகத்துள் நகை என்னும் மெய்ப் பாட்டிற் றலைசிறந்த கலைஞராய், தமிழக மக்களனைவரையும் மகிழ்வித்து, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, வள்ளன்மை முதலிய பெரும் பண்புகளுடன் வாழ்ந்துவந்த ஒப்பரிய கலைவாணர் திரு. என். எஸ். கிருட்டிணன் ஆகஸ்டுத் திங்கள் முப்பதாம் நாள் காலை பதினொன்றரை மணிக்குச் சென்னைப் பொது மருத்துவ விடுதியில் ஈரல் நோயால் மிகவும் நலிவுற்றுக் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். அவர் பிரிவால் கலைக்கும், நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் ஏற்பட்ட நட்டம் ஈடு இணையற்ற தாகும்.

எல்லையில் சீர்த்தி நெல்லை வட்டத்தினை அடுத்த நாகர்கோவி லைச்சார்ந்த ஒழுகினசேரி எனும் கிராமத்தில் வேளாளர் குலத்தில் சுடலைமுத்து என்பவரின் மகனாகப் பிறந்து "தோன்றிற் புகழொடு தோன்றுக" எனுந் தொன்மொழியைத் தமிழ் மக்க ளுக்கு வாழ்க்கை முறையில் வாழ்ந்து காட்டியவர், திரு. என். எஸ். கிருட்டிணன். அவர் காட்சிக்கு எளியராக விளங் கினார்; மேலும், இவர் எள்ளல், இளமை, பேதைமை, மடமை என்னும் பண்புகள் மூலம் மட்டும் நகை என்னும் மெய்ப்பாட்டை உண்டாக்காது கருத்துக்கள் பொதிந்த நிலையில் கற்றாரும் கல்லாதவரும் மகிழும் வண்ணம் நகைச்சுவையை வளப்படுத்திய சிறந்த கலைஞர் ஆவர்; கிந்தனார் கலைநிகழ்ச்சி, வில்லுப்பாட்டு முதலியவைகளின் மூலம் பாமரமக்களிடையும் பகுத்தறிவு வளத்தை ஊட்டிய பெருமை, இவரையே சாரும். அவர் வள்ளன்மையை நோக்குங்கால் பசிப்பிணி மருத்துவரென்றலும் சாலும். மேல்நாட்டில் விளங்கிய சிறந்த நகைச்சுவை நடிகர் "சார்லி சாப்ளின்" போன்று தமிழகத்தின் "சார்லி சாப்ளினாக" திரு. கிருட்டிணன் விளங்கினார்.

அவர் தமது ஒப்பற்ற நகைச்சுவை மிக்க நடிப்புத் திறமை யால் "கலைவாணர்" என மக்களால் போற்றப்பட்டார் காந்தி யடிகளாரிடம் கரைகடந்த அன்புடையவர் அவர். அப் பற்றின் அறிகுறியாக நாகர்கோவிலில் பெரியதொரு காந்தியாரின் நினைவுத்தூணை (தூபி) நாட்டி, காந்தியாரின் வரலாற்றை வில்லுப்பாட்டு மூலம் மக்களிடையே பரப்பி வந்தார். அவர் திருக்குறளைப் பயிலுவதிலும், அக் கொள்கைகளை மக்களிடையே பரப்புவதிலும் எல்லையற்ற ஈடுபாடுடையவர். எடுத்துக்காட்டாக

இவர் தயாரித்து வெளியிட்ட "பணம்" என்ற திரைப்படத்தில், சை. சி. கழகத்தார் கையடக்க அளவில் வெளியிட்டுள்ள திருக்குறளை எடுத்து மக்களுக்குக் காட்டி, "உலகமே இதில் அடங்கியுள்ளது" என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. இவர் நகைச்சுவைப் புலவனாக விளங்கினாலும், வறியவர்களை ஆதரிக்கும் புரவலனாகவும் விளங்கினார். உருசிய நாட்டு அழைப்பின்பேரில் இந்திய அரசினரால் அனுப்பப்பட்ட கலைக்குழுவினருள் இவரும் இவரின் மனைவியாரும் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. இவரையும், இவரின் மனைவியாரையும் அண்மையில் "தென்னிந்திய நடிகர் குழுவினர்" பொன்னாடை போர்த்திப் பாராட்டினர். சுருக்கமாகக் கூறுவோமானால் கலையுலகில் வேறெவரும் பிடிக்கமுடியாத ஒரு தனியிடத்தை இவர் தமக்கு வகுத்துக் கொண்டார். இவரால் ஆதரவுபெற்ற குடும்பங்கள் எண்ணிறந்தன.

இங்ஙனம், அனைவர் உள்ளத்திலும் இன்பத்தேனை ஊட்டி வந்த திரு. என். எஸ். கிருட்டிணன் அவர்கள் அனைவர் அகத்திலும் துன்பக்கனலை மூட்டிவிட்டு மறைந்துவிட்டார். இவர் இத்தகைய அரிய பெரிய பண்புகளோடு வாழ்ந்தமை மட்டுமன்றி ஒருகலைஞன் எவ்வாறு மாளவேண்டும் என்பதையும் அறிவித்து விட்டுச் சென்றுள்ளார். அவர் இறந்தபொழுது மக்கள் அனைவருங்கூடி அவரது இறுதி நேரத்தில் கற்றூவின் மனம் போலக் கசிந்துருகியமைபோல, இதுவரை எக் கலைஞன் வகையிலும் உருகியதில்லை. "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்" என்னும் முறையில் கணவனை இழந்து அல்லலுறும் அவரின் மனைவியாருக்கும், "கண்ணகியை இழந்தோர்க்குக் காட்டுவதில்" என்று ஏங்கித் தவிக்கும் மக்களுக்கும் யாம் கூறத்தகும் ஆறுதல், அவர் புகழ்வழி நின்று அவர் மரபை நாம் பெருக்க வேண்டும் என்பதே யாகும்.

---

## திருக்குறள் வகுப்பு

மணவழகர் மன்றத்தின் சார்பில் பெத்துநாயக்கன்பேட்டை, முருகேச முதலித் தெரு, 2-ஆம் எண்ணுள்ள கட்டிடத்தில் ஒவ்வொரு புதன்கிழமை மாலை 6-30 மணிக்குத் "திருக்குறள் வகுப்பு" புலவர் கா. சி. தனக்கோட்டி, (தமிழ் ஆசிரியர், தொண்டை மண்டலம் உயர்நிலைப்பள்ளி, சென்னை) அவர்களால் நடத்தப்படும் என ஷ மன்றத்தினர் அறிவிக்கின்றனர்.

# ஒலி மன்

[திரு. பி. எல். சாமி, பி. எஸ்.ஸி.]

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் குறுகிக்குனிந்து நாற்காலால் நடந்த மனிதன் நிமிர்ந்து இருகாலால் நடக்கத் தொடங்கினன். பரந்து கிடந்த உலகைக் கண்டான். ஓங்கி உயர்ந்த விண்ணை நோக்கினன். அதுவே மனித வரலாற்றில் முதற்புரட்சியாகும். அடுத்து மனிதன் பேசத் தொடங்கினன். அஃது இரண்டாவது புரட்சியாகும். பேசுவது எளிதெனை நினைக்கலாம். ஆனல் மனித வரலாற்றில் மனிதன் பேசக் கற்றுக்கொண்டது மிகப் பெரிய புரட்சியாகும். அன்று அவன் பேசியது 'மெய்பெரு மழலை' யாகும். ஆனல் இன்றோ அவன் பேசுவது மறைமொழி நிறைந்த நிறை மொழியாகும். தமிழ்மொழி ஒரு நிறைமொழி. இக் காலத்து நிறைமொழியை வைத்து மிகப் பழங்காலத் தமிழன் எப்படிப் பேசினன் என்பதை ஆராய்வது எளிதல்ல, ஆராய்ச்சியாளன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் பேசக்கற்ற வகையை ஆண்டுக் கணக்காகப் பேசும் குழந்தையின் மழலை மொழியால் ஆராய்கிறன். மற்றும் மனித வரலாற்றில் இன்றும் குழந்தைகள் போல 'மழலைமொழி' பேசும் பழங்குடி மக்களின் பேச்சையும் ஆராய்கின்றன். ஒரு மொழியில் உள்ள ஒலிக்குறிப்புச் சொற்களெல்லாம் மனிதனின் குழந்தைத் தன்மையால் தோன்றியவையே. பூனையைக் குழந்தை 'மியாவ்' என்றழைக்கிறது. நாயை 'ளொள்ளொள்' என்று கூப்பிடுகிறது திவி என்ற ஆஸ்திரேலியத் தீவில் மனிதநாகரிகத்தில் 50,000 ஆண்டுகள் பின் தங்கியவர்களாகக் கருதப்படும் மக்கள் வாழ்கின்றனர்- அவர்களின் மெய்பெரு மழலையில் தவளைக்குப் பெயர் 'குவார்க். குவார்க்' (Quark-Quark) என்பதாகும். இச்சொல் வழக்கு மனிதன் முதல்முதல் பேசக் கற்றுக்கொண்ட முறையைக் குறிப்பாக உணர்த்துகிறது. நாய் என்ற சொல்லைக்கேட்டவுடன் மொழிநூலறிஞன் நாக்கின் உருவை நினைக்கின்றன். ஆனல் 'ளொள்ளொள்' எனும்போது அத்தகைய நுண்மாணுழை புலத்தால் நுனித்தறிய வேண்டியதில்லை. வெளிப்படையாகப் புரிகிறது. ஒலிக்குறிப்பால் தோன்றிய சொற்கள் மிகப் பழங்காலந் தொட்டுத் தமிழில் வழங்கிவருகின்றன. காக்கை என்பது எளிதான எடுத்துக் காட்டு. கூகை, குயில் என்பவை ஒலிக்காரணமாகத் தோன்றியவை என்றுணரச் சிறிது சிந்திக்கவேண்டும். காக்கை என்ற சொல் அப்படியே அதன் ஒலியொடு ஒத்துவரு

கின்றது. குயில், கூகை என்பன சிறிதொத்து மாறிவருகின்றன. பல ஒலிக்குறிப்புச் சொற்கள் ஒலியைக் காட்டும் எழுத்து அல்லது, எழுத்துக்களுக்கு முன்னும் பின்னும் பிற எழுத்துக்கள் பெற்று 'மொழிப் பொருட்காரணம் விழிப்பத்தோன்றா வாய்' மாறி வழங்குகின்றன. வக்கா, வங்கா, சிச்சிலி, தித்திரி முதலியவை அத்தகையன. 'குக்குக்' எனும் பறவையைக் குக்குறுவான் என்றனர். குமுறும் புறவைக் 'குமுறி' என்றனர். சிள்ளிடும் வண்டை 'சிள்வீடு' என்றனர். 'சில்லி சில்லென்றொல்ல றாத, என்று சிள்வீட்டைச் சில்லி எனும் பெரிய திருமொழி. 'வாக்வாக்' எனும் இராப்புள்ளை 'வக்கா என்றனர். கோழி கூவுவது ஜெர்மனியர் காதுக்குக் 'கொர்கிரிக்' என்று கேட்கிறது. ஆங்கிலேயர் செவிக்குக் 'காக்கடூடுல்டூ' என்று கேட்கிறது. பிரெஞ்சுக்காரர் காதில் 'கொக்கோரிக்கோ' என்று கேட்கிறதாம். தமிழரும் 'கொக்கோரிக்கோ' என்றுதான் கூறுகின்றனர். இவைகளி லெல்லாம் அடிப்படை ஒலி 'கோ' என்பதாகும். கோழி என்ற சொல்லில் அந்த அடிப்படை ஒலியை உய்த்துணரலாம்.

ஊமன் என்றசொல் ஒலிக்குறிப்பினடியாகப் பிறந்ததை நுட்பமாக உய்த்துணரலாம். தற்காலத்தில் ஊமைக் கோட்டான் என்றழைக்கும் பறவையின் பெயரே ஊமன் என்பதாகும். மரக்கோட்டில் வாழ்ந்ததால் கோட்டான் என்று பெயர் பெற்றது. 'ஊம ஊம்' என்று ஒலியிடுவதால் இப் பறவைக்கு ஊமன் என்ற பெயர் ஏற்பட்டது. 'குராலான் படுதுயரிராவிற் கண்ட உயர்திணை யூமன்போல' என்று குறுந்தொகைப் பாடல் கூறுகின்றது. அஃறிணை ஊமன் என்பதே இக்கோட்டானாகும். அதனினின்றும் பிரித்துக் காட்டவே உயர்திணை ஊமன் என்று குறுந்தொகை கூறுகின்றது. ஊமன் என்ற சொல்லில் ஒலிக் குறிப்பை உணர்த்துவது 'ம' என்ற ஒலியைத்தரும் 'ம்' என்ற எழுத்தாகும். அஃது இச்சொல்லில் உயிர்மெய் யெழுத்தாக வருகின்றது. அங்காந்த வாயால் 'அ' பிறப்பதுபோல் வாயைமூடி ஒலியெழுப்பினுல் 'ம்' என்ற ஒலி பிறக்கும். ஊமையன் பேசும போது இவ்வொலியே மிக்கிருப்பதால் ஊமு, ஊமன், ஊமை என்ற சொற்கள் ஒலியடிப்படையாகத் தோன்றின. இவ்வொலியை மூக்கொலி என்றுமழைப்பர். ஊமைக்கு மறு பெயர் மூங்கையாகும். மூங்கை யெனும் சொல்லும் ஒலிக்குறிப்படியாகவே தோன்றி யிருக்கலாம். தமிழில் மூங்கை என்ற சொல் ஊமையைக் குறிக்கின்றது. ஆனுல் மலேயாளத்தில் அது கோட்டானைக் குறித்து வழங்குகின்றது. உயர்திணையூமன் தமிழில் மூங்கை எனப்படுகின்றது. அஃறிணையூமன் மலேயா

ளத்தில் மூங்கா என்றழைக்கப்படுகின்றது. ஆனால் தொல்காப்பிய மரபியலுரையில் மூங்காக்குட்டி என்றசொல் கீரிப்பிள்ளை என்ற பொருளில் வருகின்றது. இது பிற்பட்ட வழக்கு என்பதில் ஐயமில்லை. ஆங்கிலத்தில் Mangoose (மங்கூஸ்) என்று கீரிப்பிள்ளை அழைக்கப்படுகின்றது. இச்சொல் மராத்தியிலிருந்து கடன் வாங்கிய சொல் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆனால் இது பிற வடநாட்டு மொழிகளில் இருப்பதாகத் தெரியவில்லை. மூங்கா என்ற தமிழ்ச் சொல்லிற்கும் இந்த ஆங்கிலச் சொல்லிற்கும் உள்ள ஒற்றுமை தெரிகின்றது. மராத்தியிலிருந்து தமிழிற்கு வந்ததா அல்லது தமிழிலிருந்து மராத்திக்குச் சென்றதா என்பது ஆராயவேண்டியதொன்று. மூசும் ஊறு மூஞ்சூறு ஆனது. அல்லது மூஞ்சி ஊறு மூஞ்சூறாகியிருக்கலாம். மூஞ்சி எனும்சொல் பிற்காலத் தமிழில் வழங்கியது. மூங்கா என்ற கீரிப்பிள்ளையைக் குறிக்கும்சொல் மூக்கின் காரணமாகத் தோன்றியிருக்கலாம். முன் எனும் அடிப்படைப் பொருளுடையதாக இருக்கலாம். ஊமைத்தசும்பு என்பது சங்கநூற்களில் காணப்படும் சொல். மூக்கற்ற சாடி என்று பொருள். இதில் மூக்கு என்பது மதுவை ஊற்றுவதற்காகச் சாடியின் வாயில் அமைக்கப்பட்ட குவிந்த பகுதியாகும். வாயால் ஊற்றாது மூக்கால் ஊற்றும் தசும்பு யவனர் தமிழ் நாட்டிற்கு கொணர்ந்ததாகும் மூக்கற்றதையே 'ஊமைத் தசும்பு' என்றழைத்தனர். ஊமை வெயில், ஊமைக் காய்ச்சல், ஊமைக் காயம் என்ற பேச்சு வழக்குகளும் உள்ளன. வாயை மூடி உள்ளேயே ஒலிக்கும் 'ம்' என்ற அடிப்படை ஒலியின்காரணமாகத் தோன்றிய ஊமை என்றசொல் 'உள்' என்ற பொருள்பெற்று வழங்குவது இயற்கை வளர்ச்சியே. வாயைமூடி ஒலிக்கும் ஒரு வகை ஒலிக்கு 'முணங்குதல்' என்றும் கூறுகின்றனர். இதுவும் 'ம்' என்ற ஒலியைக் குறிக்கும் சொல்லாகும்.

ஊமன் என்றசொல் சின்னஞ் சிறியசொல். ஆனால் அதன் வரலாற்றை, தோற்றத்தை ஆராயும்போது ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த எகிப்திய வரலாற்றுடன் தொடர்பு தெரிகின்றது. அது பின்னர் விளக்கப்படும். தமிழ்நாட்டைப் பற்றிய வரலாற்று ஆராய்ச்சி கி. மு. இரண்டாம் நூற்றாண்டோடு நின்று விடுகின்றது. சங்கநூற் சான்றுகளைக் கி. பி. முதல் நூற்றாண்டோடு நிறுத்தி வரலாறு காண்கின்றனர் தற்கால வரலாற்றறிஞர்கள். ஆனால் வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் நம்மைக்கொண்டு சென்று எகிப்திய சுமேரிய நாகரிகங்களுடன் தமிழரை இணைப்பது சில சொற்களேயாகும். சங்கநூற்களிலும் பிற நூற்களிலும் காணப்படும் செவிவழிச் செய்திகளைப்

புராணமென்று ஒதுக்குவது சில வரலாற்றறிஞரின் வழக்கம். நெடுங்கற்பனைகள் நிறைந்த வடமொழிப் புராணங்கள் வரலாற்றுக்குதவும்போது தமிழ் நூற்களின் செவிவழிச் செய்திகள் வரலாற்றுக் குதவுமென்பதில் ஐயமில்லை. ஆனால் இங்கோ தெளிவான வரலாற்றுச் சான்றுகளைக்கூடத் தங்கள் மனம்போனபடி ஒதுக்கி ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுவது மல்லால் 'மோரியரை' 'ஓரியராக்கிப்' புது விளக்கங்கள் கூறுகின்றனர். நரைமுடித்துச் சோழன் உரைசெய்தான் என்ற செவிவழிச் செய்தி பழமொழி சிலப்பதிகாரம் முதலிய நூற்களில் வழங்குகின்றது. அச் சோழனைக் கரிகாலனாக்கி யிருக்கலாம் பிற்கால உரையாளர்கள் ஆனால் இதில் தெரியவேண்டிய தென்ன வென்றால் நரைமுடித்து அரசர் முறை வழங்குவது மிகப் பழங்கால வழக்கம் அது தமிழ்நாட்டில் வழங்கிய பழக்கம் என்பதாகும். மிகமிகப் பழமையான எகிப்திய வரலாற்றிலிருந்து இவ்வழக்கம் எகிப்திய அரசரிடை இருந்தது தெரிகின்றது. அறங்கூறவையத்தில் அரசர்கள் பொய்த்தாடி வைத்து அறம்வழங்கியதாகக் காட்டும் ஒரு எகிப்திய கல்முகப்புச் சித்திரம் புதைபொருளாராய்ச்சி யாளரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எகிப்திய வரலாற்று ஆசிரியர்களும் இதைப் பற்றி எழுதியுள்ளனர். ஆதலின் இத்தகைய செவிவழிச் செய்திகளைப் புராணம் என்று ஒதுக்குவது தவறு என்று விளங்குகின்றது. தமிழ்நாட்டுச் செவிவழிச் செய்திகளைப் பழங்கால நாகரிகங்களின் வரலாற்றோடு ஒத்திட்டு ஆராய்வது மிகவும் பயன்தரும்.

பழங்கால நாகரிகங்களில் எகிப்திய நாகரிகம் மிகப் பழமையானதாகக் கருதப்படுகின்றது. எகிப்திய, சுமேரிய, பாபிலோனிய நாகரிகங்களெல்லாம் மொகாஞ்சதாரோ நாகரிகத்தோடு தொடர்புடையனவாகக் கருதப்படுகின்றன. ஆதலின், தமிழர் நாகரிகமும் எகிப்தியருடன் தொடர்புடையதாகச் சிலரால் கருதப்படுகின்றது. மேலாகக் கவனித்துப் பார்த்தால் பல ஒப்புமைகள் புலப்படுகின்றன. 'பண்ட்' என்ற தேயத்திலிருந்து வந்ததாக எகிப்தியர் தங்களைக் கருதினர். மின், ஆண் என்ற எகிப்திய கடவுட்பெயர்கள் தமிழேபோன்று தோற்றுகின்றன. அம்மா, அப்பா, அலை, உடை, சாய் என்ற சொற்கள் எகிப்தியர், மொகாஞ்சதாரோ மக்களிடை வழங்கியதாக ஈராஸ் அடிகள் கருதினர். தமிழ்நாட்டுச் சிறுமிகள் ஆடும் 'ஒத்தைக்கைத் தும்பி' விளையாட்டே போன்ற ஒரு விளையாட்டை எகிப்தியச் சிறுமியர் ஆடுவதாக ஒரு சித்திரம் எகிப்திய அரசர் கல்லறைச் சுவரில் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. கதிரவனை எகிப்தியர் 'ரா' என்றழைத்தனர். இதற்கும் 'இரவு' என்ற தமிழ்ச்

சொல்லுக்கும் தொடர்பிருப்பதாகக் கருதுகின்றனர். 'ரா' என்ற எகிப்தியச் சொல் பகலைக் குறிக்கும்போது 'இரா' என்ற தமிழ்ச் சொல் இருளைக் குறிப்பது எங்ஙனம் என்ற கேள்வி யெழலாம். எல்லி என்ற தமிழ்ச்சொல் பகலையும் இரவையும் குறித்து வழங்குவதைக் கவனிக்கவும். 'எல்லியும் இரவும் என்னுது கல்லென' என்று நற்றிணை ௧௩௬-ஆம் பாடல் கூறும். இதில் பகலென்ற பொருளில் எல்லி பயில்கின்றது. நற்றிணை உ௩௩-ஆம் பாடல் 'எல்லி மாட்டிய' ஞெகிழியைக் கூறுகின்றது. இங்கு எல்லி இரவு என்ற பொருளில் வருகின்றது. இதுபோன்றே 'ரா' என்ற சொல் ஒருகாலத்தில் இருபொருளிலும் வழங்கிப் பின்னர் எகிப்திய மொழியில் ஒரு பொருளும் தமிழில் ஒரு பொருளும் பெற்று வழங்கியிருக்கலாம். 'எல்' என்ற சொல் மிகப் பழங்காலச் சொல். 'எல்லே இலக்கம்' எனும் தொல்காப்பியம். A. E. என்ற பெயருடைய ரஸ்ஸல் என்ற ஆங்கில அறிஞர் பழங்கால ஆரியர் வானில் தோன்றிய ஒளியை எல் என்றழைத்ததாகவும், அது மிகவும் பழங்காலச் சொல்லென்றும் கூறுகின்றார். ஆனால், ஆரியரின் நூற்களைவிடப் பெரிதும் இச்சொல்லைக் கையாள்வது தமிழ் நூற்கள்தாம். இச்சொல் சங்க நூற்களில் ஒளி, இருள் குறித்தும், எல்லி எனும் சொல்லில் பகல் இரவைக் குறித்தும் வழங்குகின்றது. 'எல்லை கழிப்பி', 'எல் விசும்புயர்', 'எல்வளை' என்பன சில எடுத்துக்காட்டுகள். 'என்றூழ்' என்ற சொல்லில் எல் புகுந்திருக்கின்றது இதையே 'என்டு' என்று தெலுங்கில் வெயிலைக் குறித்து அழைக்கின்றனர். எல்லை என்ற சொல்லும், எல்லையம்மன்களும், ஏலேலோ, ஏலேல சிங்கன் என்ற சொற்களும் எல் என்ற சொல்லடியாகவே பிறந்தவை. பழைய எகிப்திய மொழியில் கதிரவனைக் குறிக்கும் சொல் பகல், ஒளி என்ற இரு பொருளுடன் பயின்றது. ஒரு வட்டத்துள்ளிட்ட புள்ளி உருவமே கதிரவனைக் குறிக்குமாம். எழுஞாயிறு, படுஞாயிறு, என்ற வழக்குகள் திசைகளின் பெயராக ஈழத்தில் வழங்குவதிலிருந்து கதிரவன் திசையை அறியப் பயன்பட்டதை உணருகிறோம். அக்காலத்தில் கதிரவனின் வழியாகவே மனிதன் திசைகளை உணர்ந்தான். மேல், கீழ் என்ற பொருளில் திசைகளின் பெயர்கள் தோன்றியது பின்னர் நிகழ்ந்ததாகும். திசையறிவித்த கதிரவனே ஊரின் எல்லையை உணர்த்தப் பயன்பட்டான். ஆதலின் கதிரவனின் பெயரே ஊரெல்லையைக் குறித்து வழங்கி, எல்லையம்மன்களும் தோன்றிற்று. காலையில் கடலில் எழும் கதிரவனை நெய்தல்நில மக்கள் கண்டு வியந்து விளித்ததே 'ஏலேலோ' என்பது படகோட்டிகளின் பாட்டில் பயில்கின்றது. ஏலேலசிங்கன் கப்பல் ஏழு கடலும் செல்லுகின்றது என்று சொல்வர். கடலுக்கப்பாலிருந்து

எழுஞாயிறுபோல் தோன்றியவனே 'ஏலேலசிங்கன்' எனப்பட்டான். இவனை ஈழ அரசனாக மகாவம்சம் கூறும். இவன் ஞாயிற்றுவழி வந்த அரசன். எல் என்ற சொல் மாறிப் பல மொழிகளில் வழங்குவதை நல்லூர் ஞானப்பிரகாசர் சொற்பிறப் பகராதியில் விளக்கியுள்ளார். எல் இரவு, பகல் குறித்ததுபோல் அதே சார்பான பொருளுடைய நிழல், ஒளி என்ற இரு சொற்களும் நேரெதிர் பொருளுடன் வருகின்றன. நிழல் என்பது ஒளி (வெளிச்சம்), ஒளி மறைவு என்ற இருபொருளிலும் சங்க நூற்களில் வழங்குகிறது. ஒளிநிருன் என்ற சொல்லில் ஒளி என்ற சொல் வெளிச்சத்தைக் குறிக்கும். ஒளிந்தான் என்ற சொல் வெளிச்சத்திலிருந்து மறைந்தான் என்று பொருள் படுவது கவனிக்கத்தக்கது. அதுபோன்றே ஊழ், படு என்ற வினைப்பகுதிகளும் நேரெதிர் பொருளில் சங்க நூற்களில் வருகின்றன. அசுர் என்பது பாரசீகத்தில் 'ஒளியுற்ற' என்று பொருள்படும்போது அதே சொல் 'ஒளியற்ற' என்று வடமொழியில் பொருள்படுவதும் நோக்கத்தக்கது.

இனி, ஊமன் என்ற சொல்லுக்கும் எகிப்திய மொழி வரலாற்றுக்கும் உள்ள தொடர்பைக் காண்போம். நாயைக் குறிக்க நாக்கின் உருவை வரைந்து காட்டினர் பழங்கால மக்கள். அதே நாக்கின் உருவை வரைந்து ஒரு புள்ளியை நடுவில் வரைந்தால் அது தாகவிடாயைக் குறித்ததாம். சீனமொழியில் இந்த உருவ எழுத்துக்கள் வழங்கின. தமிழில் நா என்றால் நாக்கு என்பது பொருள். ஆனால் நா என்ற வேர்ச்சொல்லின் பொருள் தொங்குவது என்பதாகும். தொங்குவதால் நாக்கு என்ற சொல்லும், நாய் என்ற சொல்லும் தோன்றின. நான்றான், 'ஞால்வாய்க்களிறு', ஞாலம் ஆகிய சொற்களிலும் தொங்குவது என்ற அடிப்படைப் பொருள் மறைந்திருப்பதைக் காணலாம். உலகம் தட்டையென்று தமிழன் என்றுமே கருதியதில்லை என்பதை ஞாலம் என்ற சொல் தெளிவாக எடுத்துக் காட்டும். உலகம் தொங்குகிறது என்ற கொள்கை பழங்காலத் தமிழன் அறிந்த தொன்றாகும். சீன உருவெழுத்துக்கும் நாய், நா என்ற சொற்களின் அடிப்படைப் பொருளுக்கும் உள்ள தொடர்பு தெரிகின்றது. எகிப்திய மொழியில் 'ம்' என்ற ஒலியைக் குறிக்கும் உருவெழுத்து ஓர் ஆந்தை அல்லது கோட்டானின் சித்திரமாகும். "(ஊ)ம் (ஊ)ம்" என்று ஒலியெழுப்பும் பறவையின் உருவால் பழங்கால எகிப்தியன் 'ம்' ஒலியை எழுதியது மிகவும் வியப்பைத் தருகின்றது. என்ன அருமையான இயற்கையான பொருத்தம்! தமிழனும் அதே ஒலியில் மயங்கி, அந்தப் பறவையின் பெயரை ஒலியடிப்படையாக 'ஊமன்' என்றழைத்தான். கோட்டானின்

DR. T. P. M. LIBRARY MADURAI KAMARAJ UNIVERSITY

ஒலிக்காரணமாக எகிப்திய மொழியில் எழுத்துத் தோன்றியது. அதே ஒலிக்காரணமாகத் தமிழில் ஒரு சொல் தோன்றியது. இந்த ஒப்புமை இருமொழிக்கிடையிலுள்ள தொடர்பிழையைக் காட்டு கின்றது. கோட்டான் கூவுவதில் 'ம்' என்ற ஒலியைக் கேட்ட னர் எகிப்தியர். அதையேதான் தமிழனும் கேட்டான். ஒரு வேளை தமிழிலும் 'ம்' என்ற ஒலியைக் கோட்டானின் உரு வாகப் பழங்காலத்துத் தமிழன் வரைந்து வந்தானே! தமி ழெழுத்து வரலாறு அதைக்காண யாதொரு துணையும் தருவ தில்லை. எகிப்தியரின் சித்திரவெழுத்துக்களில் மகரம்போன்ற உயிர்மெய் யெழுத்துக்கள் மற்றும் மெய்யெழுத்துக்கள் இருந் தன. ஆனல் உயிரெழுத்துக்கள் இல்லை. உயிரொலிகள் (vowel sounds) இருந்தனவாம். இந்த உயிரொலிகள் தனித்து நிற்கும் போது யாதொரு பொருளும் தராது. ஆனல் பிற எழுத்துக்க ளுடன் கலந்து வரும்போது காலமாற்றத்தையும் பொருள் மாற்றத்தையும் தந்து பயன்பட்டன. அதனல் கோட்டானின் உருவத்தால் காட்டப்படும் 'ம்' என்ற ஒலியெழுத்தை அம், எம், மா, மெ என்று 'ம்' உடன் உயிரொலியை முன்னரோ, பின் னரோ சேர்த்துப் பலவகையாகத் தற்கால ஆராய்ச்சியாளர் ஒலிக் கின்றனர். உயிரொலி எதுவாயினும், எவ்விடத்திலிருப்பினும் மெய்யொலி மாறுவதில்லை. ஊமன், மூங்கை, முணங்கு, தும்மு, செம்மு, உறுமு, குமுறு, இமிறு, ஞிமிறு, இமிழ், மூசு, தும்பி ஆகிய தமிழ்ச்சொற்களில் கூர்ந்து ஆராயின், அடிப்படை ஒலி 'ம்' எனும் மகரவொலியெனத் தெரிகின்றது. 'ஊம்' என் றொலிப்பதால் ஊமன் என்று பெயர் பெற்றதுபோல், 'ம்....ம்....ம்' என்பதால் வண்டுக்கு ஞிமிறு, இமிறு, தும்பி என்று பெயர்கள் தோன்றியிருக்கலாம். அதுபோன்றே பிறசொற்களும். இந்த மகரவொலி 'ம'வாகலாம். 'மூ'வாகலாம். 'மி'யாகலாம். 'ம்' எனவே நிற்கலாம். அவ்வொலி சொற்கு முன்னர்த் தோன்ற லாம் நடுவில் பயிலலாம். இறுதியில் ஏறலாம். எகிப்திய மொழியில் உயிரொலியை முன்னரும் பின்னரும் சேர்த்தொலிக் கின்றனர். தமிழிலும் உயிரெழுத்தை முன்னரும் பின்னரும் சேர்த்துப் புதுச்சொற்கள் உண்டாக்கியிருக்கின்றனர். ஆனல், இரண்டு மொழியிலும் அடிப்படை ஒலி, எழுத்து மாறவில்லை.

இது சார்பாகத் திராவிட மொழிகளில் மிகவும் பின்தங்கி யவை எனக் கருதப்படும் மொழிகளில் உள்ள சில சொற்களை ஆராய்வது பயன்தரும். கண், கால், கை என்ற சொற்கள் மிக வும் தேவையான அடிப்படையான சொற்கள். ஆகையின், அவை ஒரு மொழி வரலாற்றில் முதன்முதலிலேயே தோன்றிய பல சொற்களில் சில எனக் கொள்ளவேண்டும். மற்றும் ஆயிரக்

கணக்கான ஆண்டுகள் மாறுதே வழங்கியிருக்க வேண்டும். இந்தியாவின் வடமேற்கு மூலையிலும், நடுவிலும், தென்கோடியிலும் இந்த அடிப்படைச் சொற்கள் திராவிட மொழிகளில் ஒன்றுகவேயுள்ளன. கோண்டி மொழியில் கண்ணைக் 'கண்க்' என்றும், காலைக் 'கால்க்' என்றும், அழைக்கின்றனர். ஆனால் பிராகூய் மொழியில் கண்ணை 'க்கண்' என்றும், காலை 'க்கால்' என்றும், கையை 'க்கை' என்றுமழைக்கின்றனர். 'க்' என்ற மெய்யெழுத்து வடமேற்கில் மொழிக்கு முதலில் வருகின்றது. நடுஇந்தியாவில் மொழிக்குப் பின்னால் வருகின்றது. தமிழிலோ வருவதில்லை. இச்செய்தி ஆழ்ந்து ஆராயவேண்டிய அருமையான செய்தியாகும். தமிழில் 'நா' என்ற சொல் நாக்கைக் குறிக்கும். இதுவே பழந்திராவிட மொழியில் 'நாக்' என வழங்கியிருக்கலாம். அப்புறம் 'நாக்கு' என மாறியிருக்கலாம். அதுபோன்றே மூக்கு என்ற சொல்லும் 'மூ'விலிருந்து வளர்ச்சிபெற்றிருக்கலாம். 'நில்' என்ற சொல்லை வேர்ச்சொல் என்று சொல்லுவதைவிட எழுதா மொழியாக வழங்கும் நாகரிகமற்ற திராவிட மொழியான 'பிரார்ஜி' மொழியில் வழங்கும் 'நில்ப்' என்ற சொல்லும், 'நில்க்' என்ற சொல்லும் பழைய வேர்ச்சொற்கள், சொற்பகுதிகள் என்று கொள்ளலாம் என்று தெ. பொ. மீனட்சிசுந்தரனர் கருதினர். பெயர்ச்சொற்களான 'கண்' 'கால்' என்பவை மெய்யெழுத்துடன் 'கண்க்' 'கால்க்' என்று வழங்கியதுபோல் வினைச்சொற்களும் அக்காலத்தில் மெய்யெழுத்துடன் வழங்கியிருக்கவேண்டுமென்பதையே 'நில்க்' 'நில்ப்' என்ற உருவங்கள் காட்டுகின்றன. 'நால்குடன்', 'நால்புடன்' என்ற சொற்களில் 'க்' என்றவெழுத்தும் 'ப்' என்றவெழுத்தும் வருவது கவனிக்கத்தக்கது. 'க்'கும் 'ப்'பும் மாறிக்கொள்வன என்று தெரிகின்றது. பிரார்ஜி மொழியில் வினைச்சொல்லில் கண்டோம். தமிழில் பெயர்ச்சொல்லிலேயே மறைந்திருப்பதைக் காண்கிறோம் 'கண்' என்ற சொல்லின் பழைய உருவம் 'கண்க்' எனக் கொண்டால் 'நில்' என்ற சொல்லின் பழைய உருவம் 'நில்ப்' அல்லது 'நில்க்' எனக் கூறலாம். ஆனல் அதையே வேர்ச்சொல்லாக அல்லது பகுதியாகக் கருத முடியுமா என்பது ஐயத்திற்கிடமானது. ஏனெனில் கண் என்பதை 'க்கண்' என்றழைக்கும் பழைய உருவமும் உள்ளது. ஆதலின், 'நில்க்' என்பதைப் பழைய பகுதியாகவோ, வேர்ச்சொல்லாகவோ கொள்ளமுடியுமா என்பது இன்னும் ஆராயவேண்டிய செய்தியாகும். ஒலிக்குறிப்பை உணர்த்தும் 'ம்' என்ற மெய்யெழுத்தின் செய்தியை எகிப்திய மொழியில் ஆராயப்பட்டது. அதுபோன்றே மெய்யெழுத்துக்கள் சில சொற்களுக்கு முன்னும் பின்னும் வருவது மேலே ஆராயப்பட்டது. ஆனல், மெய்

யெழுத்துக்கள் முன்னும் பின்னும் நடுவிலும் வருவது மிக விரிவாகப் பிறமொழிகளிலும் தமிழிலும் ஆராய்வது தமிழ்மொழி வரலாற்றிற்கு மிகவும் பயன்தரும். பல சொற்களின் பழைய உருவங்கள், சந்தி, வேற்றுமை உருபுகள் முதலியவைகளின் வரலாறு காண அவ்வாராய்ச்சி மிகவும் இன்றியமையாதது. திராவிட மொழிகளின் ஆராய்ச்சி தமிழ், தெலுங்கு முதலிய தென்மொழிகளோடு நின்றுவிடக்கூடாது. வடநாட்டில் வழங்கும் திராவிட மொழிகள், முண்டா மொழிகள், எகிப்திய, சுமேரிய மொழிகள் ஆகிய தொடர்புடைய மொழிகளெல்லாவற்றையும் தென்மொழிகளோடு ஒத்திட்டு முறையாக விரிவாக ஆராயவேண்டிய—காலந்தாழ்க்காது செய்யவேண்டிய கடமையாகும்.

---

ஓம்

## செந்தமிழ் இலக்கணம் சிவனெறி இலக்கணம்

*நெட்டுயிரெல் லாம்காவல் நேர்காதல் குற்றுயிராம்*
*கட்டுமலம் மும்மைமெய் கண்ணுதலோன்—மட்டில்*
*அகரவுயிர் ஆய்தமும் அம்மைஅடி இன்பம்*
*நுகர்வுயிரும் குற்றுகரம் நோக்கு.*

நெட்டுயிர்கள் அனைத்தும் புறத்திணைக் காவலராம் ஆடவர்கட்கு ஒப்பாகவும், குற்றுயிர்கள் அகத்திணைக் காதலராம் மகளிர்க்கு ஒப்பாகவும் குறிப்பன. ஒருமலம், இருமலம், மும்மலம் என்னும் பிணிப்பினால் மூவகை ஆருயிரினத்தையும் வல்லினம், மெல்லினம் இடையினம் என்னும் மூவகை மெய்களும் குறிப்பனவாகும். நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானை அகரவுயிர் குறிக்கும். ஆய்தம் திருவருளம்மையைக் குறிக்கும். திருவடிசேர்ந்து பேரின்ப முறும் மீளா அடிமையினை "நுந்தை" என்பதன்கண் காணப்படும் குற்றுகரம் குறிக்குமாறு உய்த்துணர்ந்தின்புறுக. காவல் - வீரம்.

இதனை விளக்கும் தொல்காப்பிய நூற்பா வருமாறு :

"குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்" (தொல். எழுத், ௬௭.)

என்பதாம். இதற்கு எடுத்துக்காட்டு 'நுந்தை' ஒற்றுமை நயத்தான் குற்றுகரம் மொழிக்கு முதலாம் என்பது ஆண்டான் அடிமை வழக்கை ஈண்டுணர்த்தும் எழில் ஒப்பாகும்.

—தொண்டன்.

---

# செய்திகளும் குறிப்புக்களும்

## (க) ஆட்சிமொழி இதுதானா ?

"சென்னை அரசாங்கத்தின் ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறிய அலுவலகங்களில் தமிழ் விரைவில் ஆட்சிமொழியாகும். 'கலெக்டர்' 'பிர்கா' போன்ற சொற்களும் தமிழிலும் அப்படியே இருக்கும்." என ஆட்சிமொழிக் குழுவினரில் ஒருவரான திரு. வெங்கடேஸ்வரன் என்பார் அண்மையில் செய்தி எழுத்தாளரிடம் அறிவித்துள்ளார்.

**குறிப்பு :** கலெக்டர், பிர்கா போன்ற சொற்கள் என்று ஆட்சிச் சொல்லாக வந்தனவோ அன்றே தமிழ் ஆட்சிமொழி மறைந்தது. மீண்டும் அங்ஙிலேயே நீடிக்குமென்றால் அதற்குத் தமிழ் ஆட்சிமொழி யாகிறது என்ற பொருள் ?

## (உ) விந்தையான பேச்சு

"இந்தியைப் பரப்புவதில் ஆர்வமுள்ளவர்கள் அதைக் கட்டாய மாகத் திணிக்கப்போவதாக ஒரு தவறான எண்ணத்தை உண்டாக்கி இந்திபேசாத மக்களுக்கு மனக்கசப்பை உண்டாக்க வேண்டாம்." எனக் கடந்த 20-8-57-இல் பாராளும் மன்றத்தில் உள்நாட்டு அமைச்சர் திரு. பந்த் அவர்கள் கூறினார்கள்.

**குறிப்பு :** அரசியலார் நடைமுறையில் இந்தியைக் கட்டாயமாக்கிக் கொண்டே பேச்சளவில் இங்ஙனம் பேசிவருவது விந்தையிலும் விந்தை! இந்தி எந்த உருவத்தில் வந்தாலும் அதனால் தென்னகத்து மக்களிடையே மனக்கசப்பு வளருவது திண்ணம்.

## (ங) யோகி சுத்தானந்தர் வாழ்க !

கவி யோகி சுத்தானந்த பாரதியாரின் 60-ஆம் ஆண்டு நிறைவு விழா 28-8-57 இல் இராசாசி மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்தியநாட்டுத் தலைவர் திரு. இராசேந்திரர், துணைத்தலைவர் டாக்டர். எஸ். இராதாகிருட்டிணன் ஆகியோரிடமிருந்தும் பல தமிழ்ச்சங்கங் களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்தன. டாக்டர் கிருஷ்ணராவ், திரு. டி. கே. சண்முகம் முதலிய அரசியல், கலைத்துறை பெருமக்கள் வாழ்த்துரை வழங்கினர். தமிழகத்து முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் பேசியகாலை, "மொழிப்பற்றுடன் நாட்டுப்பற்றும் உடையவர் ஸ்வாமிஜீ. இன்று அவை இரண்டையும் பிரித்துப் பேசுகின்றனர் சிலர். அப்படிப் பிரிக்கமுடியாது என்பதை நன்கு அறிந்தவர் சுத்தானந்த பாரதியார்." என்று குறிப்பிட்டுள்ளார்.

**குறிப்பு :** மணிவிழாக் கொண்ட அன்பர் சுத்தானந்த பாரதியார் அவர்கட்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். திரு. காமராஜர் கூறியவண்ணம் நாட்டுப்பற்றோடு கூடிய அவரது மொழிப் பற்றையும் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் நாட்டுப்பற்றால் நாடாள முன்வந்திருக்கும் அமைச்சர் காமராஜர் அவர்களும், நாட்டுப்பற்றோடு தொடர்புடைய மொழிப்பற்றும் மிக்குடையராய் இந்திபோன்ற பிற மொழிகளால் தமிழுக்கு நேர்கின்ற இடையூறுகளைக் களைய முன் வருவார் எனவும் எதிர்பார்க்கிறோம்.

(ச) இந்தியை எதிர்த்து மாணவர் எழுச்சி

இந்தி ஆட்சிமொழிக் குழுவின் சிபாரிசுகளை எதிர்த்துக் குடந்தை அரசினர் கல்லூரி மாணவர்கள் கடந்த 21-8-57-இல் படிப்புநிறுத்தம் செய்தனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் "கட்டாய இந்தி திணிப்பு வேண்டாம்" "வடவர் ஆதிக்கம் கூடாது" "இலக்கிய வளமில்லா இந்தி வேண்டாம்" என்ற எதிர்ப்பு ஒலிகளை எழுப்பிய வண்ணம் நகரை வலம்வந்தனர். சென்னைத் தியாகராயர் கல்லூரி மாணவர்களும், பச்சையப்பன் கல்லூரி மாணவர்களும், காரைக்குடிக் கல்லூரி மாணவர்களும் அண்மையில் இங்ஙனம் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

**குறிப்பு :** மாணவர்களின் தாய்மொழிப்பற்றினையும் கிளர்ச்சி உள்ளத்தினையும் கண்டு மகிழ்கிறோம்—வரவேற்கிறோம்—வாழ்த்துகிறோம். தமது கல்விக்கு இடையூறு நிகழாவண்ணமும், மக்களாட்சிப் பண்புக்கு (சனநாயகம்) மாறுபடாமலும் அமைதியாகவும் மாணவர்கள் தமது கருத்தை ஆட்சியாளருக்குத் தெரிவித்து வெற்றிகாண்பார்களாக!

(ரு) இந்தி ஆதிக்கம்பற்றி திரு. ஆர். பி. எஸ். கருத்து

பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை யவர்கட்குக் கோவை நன்னெறிக் கழகத்தினர் 8-9-'57-இல் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தனர். அதுகாலை திரு. பிள்ளையவர்கள், "வளமான தமிழ்மொழிச் சொற்கள் இருக்க, வளமற்ற இந்தியைத் தமிழகத்தின்மீது திணிப்பது கூடாது. இந்நிலை நீடிப்பதால் நாம் உறுதியோடு இந்தி கூடாது என்று சொல்லும் காலம் வந்துவிட்டது" என்று பேசியுள்ளார்.

**குறிப்பு :** சொல்லின் செல்வரின் வீர உரைகண்டு மகிழ்கிறோம். இத்தகைய பேராசிரியர்கள் முன்வந்து இந்திபோன்ற அயல்மொழி ஆதிக்கத்தைக் கண்டிக்க முற்பட்டால் தமிழும் தமிழ்நாடும் விரைவில் சீரும் சிறப்பும் பெறுவது திண்ணமன்றோ?

---

## மறைமலையடிகளார்

### ஏழாம் ஆண்டு நினைவு விழா

அன்பர்களே !

செப்டம்பர் 15 முதல் 25-ஆம் நாள் முடிய மறைமலையடிகள் வாரமாக வைத்துத் தமிழ்நாடெங்கணும், தமிழர்வாழ் வெளிநாடுகளிலும் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்துமாறு தமிழ்ப்பணியில் ஈடுபட்டுள்ள நிலையங்களையும் பொதுமக்களையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார்.**

---

# மதிப்புரை

**திருவாசகம் எளிய உரை**

[ஆசிரியர் : திரு. மு. ஏ. வீரபாகுப்பிள்ளை. ஒற்றுமை நிலையம் தியாகராய நகர், சென்னை. விலை ரூ. 6—0—0.]

சைவசமயாசிரியர்கள் நால்வருள் ஒருவராகத் தோன்றிய மணிவாசகப்பெருமான் என்னுந் திருவாதவூரடிகள் சிவபெருமானுடைய திருவருளைப்பெற்று அழலிற்பட்ட வெண்ணெயென உள்ளங் கரைந் துருகிப் பாடிய திருவாசகமென்னுந் தெய்வத் திருமறைநூல், "ஒருகால் ஓதில், கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள், தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய, மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி"த் தன்னைக் கற்றாரைச் சிவபெருமானுடைய திருவடியன்ப ராக்கும் விழுமிய சிறப்பு வாய்ந்தது. இவ் வரும்பெரும் நூலையும் பொருளுணர்ந்து ஓதுதல் திருவடிப்பேற்றிற்கு ஏதுவாமென்பது "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின்" என்று அவ் அடிகளாராலேயே திருவாய்மலர்ந்தருளப் பெற்றுள்ள திருவாக்கால் நன்குணரப்பெறும். இவ் வுயரிய தமிழ் மறைக்குப் பெரியார்கள் பலர் உரை எழுதியுள்ளனர். இஞ்ஞான்று திரு மு. ஏ. வீரபாகுப்பிள்ளை யவர்களாலும் ஓர் உரை எழுதி வெளி யிடப்பெற்றுள்ளது.

**தமிழகக் கல்வெட்டுகள்**

[உரையாசிரியர்கள், வித்துவான். சி. கோவிந்தராசனார் அவர்கள், வித்துவான், திரு. அடிகளாசிரியர் அவர்கள் விரிவுரையாளர்கள், கரந் தைப் புலவர் கல்லூரி, கருந்திட்டைக்குடி, தஞ்சை.]

சென்னைப் பல்கலைக் கழக வித்துவான், கீழ்க்கலைத் தேர்வுகளுக் குரிய இக்கல்வெட்டு உரைநூல் சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் வெளியீட்டில் உள்ளபடிக்கு விளக்கவுரை தந்து வித்துவான் தேர்வுக்குச் செல்லும் மாணவர்கட்குப் பயன்படும் வகையில் வெளியிடப்பட்டிருக் கின்றது. இதன்கண் 'நந்திவர்ம பல்லவன் சாசனம்—I' முதல் திரு அகத்தீஸ்வரமுடையார் தேவதான இசைவுச் சாசனம் ஈறாக இடை யிடையே பல கல்வெட்டுக்களும் விரவி ஆய்வாளர்கட்குப் பெருந்துணை யாம் முறையில் பெரிது முயன்று தொகுத்தமைத்துள்ளார்கள். கல் வெட்டுச் செய்தியின் விளக்கத்தினை அறிதற்கு இந்நூல் மிகவுதவி புரிவதாகும்.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.

# மறைமலையடிகள் ஏழாம் ஆண்டு நினைவு விழா



மறைமலையடிகளாரின் திருவுருவப் படத்தை திரு. எம். கே. சண்முகம் அவர்கள் திறந்து வைத்தல்.



சொல்லின்செல்வர், டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் சொற்பொழிவாற்றுதல்.



பேராசிரியர், தெ. பொ. மீனுட்சிசுந்தரனுரவர்கள்
சொற்பொழிவாற்றுதல்.



நாவலர், இரா. நெடுஞ்செழியன் அவர்கள்
சொற்பொழிவாற்றுதல்.